# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை:7 வள்ளுவர் ஆண்டு 2029 தை 25 சனிக்கிழமை (07-02-1998) SANJEAVY-Regenerative Tamil Weekly சிகரம்:36


# கொழும்பு நகரில் குண்டு வெடிப்பு!

## 5 படையினர் உட்பட 9 பேர் பலி; 20 பேர் படுகாயம் கொம்பனித்தெருவில் நேற்று மாலை பயங்கரம்

கொழும்பு, பெப்ரவரி 7

கொழும்பு நகரின் மையத்தில் கொம்பனித்தெருவில் - விமானப் படைத் தலைமையகத்துக்குச் சற்றுத் தொலைவில் - நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரு பெண் சிப்பாய்கள் உட்பட ஐந்து விமானப்படையினர், 3 பொதுமக்கள் ஆகியோர் உள்ளிட்ட 9 பேர் பலியாகினர். இருபது பேர்வரை படுகாயமடைந்தனர். மற்றொரு படைச்சிப்பாய் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்.

கொம்பனித் தெரு (Slave Island) பகுதியில் மலே வீதியில் விமானப்படைத்தலைமையகத்துக்குச் சற்றுத் தொலைவில் விமானப் படையினர் அமைத்திருந்த சோதனைத் தடைமுகாம் அருகிலேயேஇந்தக்குண்டுவெடிப்பு நடந்தது.

இளம் பெண்ணான தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் இத்தாக்குதலை நடத்தியதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விமானப் படையினரின் சோதனைத் தடைமுகாமை நெருங்கி வந்த இந்தப் பெண் மணி தன்னுடன் கொண்டு வந்த குண்டை வெடிக்க வைத்துப் பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்பட்டது.

இரு பெண் விமானப்படைச் சிப்பாய்கள் உட்பட ஐந்து விமானப் படையினர், மூன்று பொதுமக்கள் மற்றும் தற்கொலைக் குண்டுதாரி எனக் கருதப்படும் பெண் ஆகியோர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதல் நபரின் தலை தனியாக கிடந்தது!

கொழும்பு, பெப். 7

கொழும்பு கொம்பனித் தெருவில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் இளம் பெண்ணின் தலை குண்டு வெடித்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் — சில யார் தூரத்தில் — ஒரு சுவருக்கு அருகில் — அதிகம் சேதமுறாத நிலையில் — விழுந்து கிடக்கக் காணப்பட்டது; அப்பெண்ணின் உடல் சிதறிக் கிடந்தது.

இத்தலையைத் தான் கண்டதாக பி. பி. ஸி. சிங்கள சேவையின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்தார்.

(உ-3)

## பஞ்சாபி உடையுடன் குடைபிடித்து வந்த இளம் பெண்ணே சூத்திரதாரி!

கொழும்பு, பெப். 7

பஞ்சாபி உடையுடன் குடை பிடித்து வந்த இளம் பெண் ஒருவரே தற்கொலைத் தாக்குதலை நடத்திய சூத்திரதாரி என கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வீதி வழியே வந்த வாகனங்களை தடைமுகாமிலிருந்து விமானப்படையினர் வழிமறித்து அந்த வாகனங்களில் இருந்த பயணிகளை சோதனையிட்டுக் கொண்டிருந்தனர்.

59 — 2936 இலக்கமுடைய வெள்ளை நிற ''ஹையஸ்'' வாகனம் ஒன்று படையினரால் வழிமறிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் 138 ஆவது இலக்கப் பாதையில் செல்லும் பயணிகள் பஸ் ஒன்று வந்து நின்றது. இரண்டு வாகனங்களில் இருந்தவர்களும் இறங்கி தடைமுகாமை நோக்கி சோதனைக்காக வந்துகொண்டிருந்தனர். வீதி வழியாக நடந்து வந்தவர்களும் அவர்களுடன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடல்கள் சிதறிக் கிடந்தன

குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தில் தற்கொலைத் தாக்குதல்தாரியின் உடலும், பயணிகளைச் சோதனை செய்வதற்காகத் தடை முகாமில் காத்திருந்த விமானப் படையின் பெண் சிப்பாய்கள், விமானப் படைச் சிப்பாய்கள் மற்றும் மூன்று பொது மக்கள் ஆகியோரின் உடல்களும் சிதறிக் கிடக்கக் காணப்பட்டன. ஆங்காங்கே சதைத் துண்டுகளும் பிண்டங்களும் காணப்பட்டன.

குண்டு வெடித்த பகுதியில் கண்ணாடிச் சிதறல்களும், உடைந்த பாகங்களும் பரவிக் கிடந்தன என்று குண்டு வெடித்த இடத்தை நேரில் பார்வையிட்ட செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## இலக்குத் தவறிய தாக்குதலா இது?

கொழும்பு, பெப். 7

வேறு இலக்கு ஒன்றைத் தாக்குவதற்காகச் சென்ற தற்கொலைக் குண்டுதாரி இடை நடுவில் இத்தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாக கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

சோதனைத் தடை முகாம் ஒன்றை இலக்கு வைத்து இத்தகைய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நபர் வந்திருக்க மாட்டார் என்றே

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹையஸ்' வானில் வந்தே தாக்குதல்!

### பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 7

'ஹையஸ் வானில் நால்வர் வந்தனர். அவர்களில் ஒருவரே தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய பெண் எனச் சந்தேகிக்கப் படுகின்றது.

—நேற்றைய குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து நேற்றிரவு 7.30 மணிக்கு பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

நேற்று மாலை 4.45 மணியளவில் கொழும்பு 2, மலே

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி வடக்கில் தொடர்ந்து மோதல்!

யாழ்ப்பாணம், பெப். 7

கிளிநொச்சி வடக்கில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றும் மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்றதாகவும் —

கடும் ஷெல் வீச்சுக்கள் தொடர்வதாகவும் —

புலிகளின் குரல் வானொலி நேற்று அறிவித்தது.

கடந்த முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதிகளில் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து கிளிநொச்சி நகரின் வடபகுதிக்குத் தள்ளப்பட்ட படைகள் அங்கிருந்து முன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படை இழப்புப் பற்றி நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதிகளில் பாதுகாப்பு முன்னரங்க நிலைகள் மீது கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் ஒரே சமயத்தில் புலிகள் நடத்திய தாக்குதலின் இழப்புகள் குறித்து பலாலியில் உள்ள படைத்தலைமையகம் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-


புலிகளின் இத்தாக்குதலை படையினர் முறியடித்தனர். இத்தாக்குதலில் 350 இயக்க

( 8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்



### செல்வன் யோகராசா ரமேஸ்

(கைதடி, நுணாவில் அ. த. க. பாடசாலை, ஆண்டு 11 மாணவன்)

மலர்வு: 10 – 04 – 1981
உதிர்வு: 25 – 12 – 1997

பெற்ற வயிறு கொதிக்க
உற்ற தந்தை தனியாய்த் தவிக்க
உடன் பிறப்புக்கள் திக்குத் திசையறியாது
திகைத்து நிற்க எங்கு சென்றனையோ - ரமேசா?

இரண்டாவதாய் நீ பிறந்தாலும் குடும்பத்தின்
குல விளக்கானாய் நீ - ரமேசா!
காலனால் அழிக்க முடிந்தது உன் பொன்
உடலைத்தான்

காலங் காலமாய் எமது உள்ளத்தில்
வாழ்வாய் நிரந்தரமாய் - ரமேசா!

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
பெரியப்பா, அன்ரா,
சகோதர சகோதரிகள்.

அ. புவனசுந்தரராசா,
கைதடி, நுணாவில், சாவகச்சேரி (53166)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 06 — 01 — 1949
இறப்பு: 07 — 02 — 1997

### அமரர் வைத்திலிங்கம் சிறினிவாசன்

இன்றோடு போனது ஆண்டொன்று - ஆனாலும்
மாறவில்லை எம் இதயத்தின் - துயர்
எத்தனை எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எங்களுடன் வாழ்வீர்கள் என்றே வாழ்கின்றோம்
உங்கள் நிழலிற்கு நாம் தவித்திருக்க
உற்றார், உறவினர் உங்கள் வருகைக்கு காத்திருக்க
தொலை தூரம் போன மாயம் என்ன?
இன்பங்கள் தவழும் வேளையில் கூட
மௌன ராகத்தில் நாங்கள் எங்கே
போனீர்கள் என்றே அறியவில்லை?
எத்தனை எத்தனை கற்பனைகள்
அத்தனையும் பாழாச்சு
யாருக்கென்ன............?
வெந்த உள்ளங்களோடு - கண்ணில் கண்ணீரோடு
நெஞ்சில் ஆறாத் துயரோடு
வாழ்நாள் முழுவதும் வாடுவது நாம்தான்
யாரறிவார் நாம் படும் துன்பம்?
நினைத்திருந்த கதை நாமறியோம்
நம் ஆயுள் முடியுமுன்னே - எங்களிடமே
திரும்பி வருவீர்கள் என்ற நம்பிக்கை ஒன்று தான்.
இறைவனோடு நீங்கள் இருக்க - அந்த
இறைவனையே நம்பி நாங்கள் இருக்கின்றோம்.
கடவுளிடமே போட்டோம் பாரம் - அதை
நம்பியே நாங்கள் உள்ளோம்
கண்ணீர் மழை தூவி .........

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய். (5[illegible])

## நிறுவுநர் நாள்

யாழ்ப்பாணம், பெப் 7

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நாள் விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சு. கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராகவும், சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி ஆ. வ. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் நிறுவுநர் குடும்பத்தைச் சேர்ந்த சி. சண்முகராசா, பாடசாலை நலன் விரும்பி மு. நடராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ள உள்ளனர்.

வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை நிறுவுநர் நினைவுரையை நிகழ்த்துவார். (ஐ-9)

## பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி சி. மகேஸ்வரனின் இறுதிக் கிரியைகள் நாளைக் காலை 9 மணிக்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இதன் பொருட்டு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்களை நாளைக் காலை 9 மணிக்கு அமரரின் இல்லத்தில் கூடுமாறு மாணவர் ஒன்றியம் (விஞ்ஞான பீடம்) கேட்டுள்ளது. (அ)

## இருவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 7

வன்னி மாவட்டத்தில் கடந்த 3ஆம் திகதி ஏற்பட்ட எதிர்பாராத விபத்து ஒன்றில் இரு நாட்டுப்பற்றாளர்கள் உயிரிழந்தனர் என்று 'புலிகளின் குரல்' அறிவித்தது.

வேலாயுதம் தர்பசீலன் அல்லது பம் சிவா (கிளிநொச்சி), துரைசிங்கம் ராஜ்குமார் (யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

**BARATHY**
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.
உதவி நிர்வாகி
தேவை.
ஆண், 30 வயதுக்கு
மேற்பட்டவர் விரும்பத்
தக்கது.
இன்று பிற்பகல் 3 மணிக்கு
நேரில் தொடர்பு கொள்க.
- நிர்வாகி
(49946)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
05 - 02 - 98 முதல்
முரளி - சூர்யா
நடித்த
✶ காதலே நிம்மதி
காட்சிகள்:- 10-30, 2-30
(ப.நே.) (ஜ/2765)

லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
ஞாயிறு மட்டும்
முரளி, சூர்யா
நடித்த
"காதலே நிம்மதி"
திங்கள் முதல்
செவ்வாய் வரை
M.G.R., ஜெயலலிதா
நடித்த
அடிமைப்பெண்
பகல் நேரம்
10-30 2-30
(53059)

### வறுமை, நோய் காரணமாக

## அக்கராயன்குளத்தில் நால்வர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 7

அக்கராயன்குளத்தில் அமைந்துள்ள சுபாஸ் குடியிருப்பில் வறுமை, நோய் காரணங்களால் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

வயிற்றோட்டத்தால் கருணாகரன் பிருந்தா (ஒரு வயது), செப்ரிசீமியாவால் தம்பிக்குட்டி ரூபமாலா (27 வயது), காய்ச்சலால் சின்னத்தம்பி நடேசு (58 வயது), கிட்டிணன் நல்லையா (63 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இக் குடியிருப்பில் 213 குடும்பங்கள் வாழ்கின்றன.

சுகாதார வசதியின்மை, வறுமை காரணமாக இந்தக் கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மெய்வல்லுநர் போட்டி

குருநகர், பெப். 7

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜீ செல்வராணி தலைமையில் நடைபெற உள்ளன.

யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா முதன்மை விருந்தினராகவும், யாழ். மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜே. பி. ஈ. செல்வராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ஐ-51)

## மிளகு விலை அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் மிளகின் விலை அதிகரித்துள்ளது.

தற்போது ஒரு கிலோ மிளகு 400 ரூபா தொடக்கம் 450 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ஐ-173)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா இராசையா

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இராசையா 06—02—98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் மற்றும் தவமலர் (நெசவு போதனா ஆசிரியர்), புஸ்பநாதன் (யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்), கமலநாதன் (காகிலேசன் துறைசிமெந்துக்கூட்டுத் தாபனம்), காலஞ்சென்ற ஜெகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலராணி, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமியும், ஜயந்தன், பிரசாந்தி, தனுஷா, அகல்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07 02—98) 11 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. புஸ்பநாதன்
(மகன்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு. (53168)

### திருமதி சிவபாக்கியம் தம்பிராசா

உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் தம்பிராசா 06-02-1998 இல் அதிகாலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பிராசாவின் அன்பு மனைவியும், சின்னத்துரை, (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி), சிவலோகநாதன் (கிச்சி), சிவசோதிநாதன் (சோதி), ஜெகநாதன் (பாலா சுவிஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும், மோகனேஸ்வரி, சத்திய சோதி, சாந்தரூபி, கிருஷ்ணந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் திலகமணி, மகேஸ்வரன், பரமநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை 07—02—1998 இல் அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணிக்கு இலங்காட்டு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
த. சின்னத்துரை
(மகன்)

ஞானவைரவர் கோயில் ஒழுங்கை,
உரும்பராய் கிழக்கு (53186)

### திருமதி முருகேசு அன்னம்மா

திருமதி முருகேசு அன்னம்மா 5-02-98 வியாழக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகராசா, ஜெயராசா (ஜேர்மனி), ஜீவரத்தினம், இராஜேஸ்வரி, சாந்தினிதேவி, இரஞ்சன் (ஜீவா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவசுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்), பத்மலீலா, பூரணம், மனோறஞ்சிதம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை நேற்று (6 – 2 – 98) மல்லாகம் "ஜீவ வாசா" இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. இறஞ்சன்
(மகன்)

"ஜீவ வாசா",
கே. கே. எஸ். றோட்,
மல்லாகம். (53193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நகரின் மையப் பிரதேசம் வரை முன்னேறித் தாக்கினர் விடுதலைப் புலிகள்!

கிளிநொச்சி, பரந்தனில் இன்றைய நிலைமை என்ன? அங்கு யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றதா? கிளிநொச்சி யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது?

— இதுதான் குடாநாட்டு மக்கள் பலரும் இன்று ஒருவரை ஒருவர் சந்திககும் போது கேட்கும் கேள்வி; இப்போது விடை கூற முடியாத வினாக்கள் இவை.

சுதந்திரப் பொன் விழா தினத்துக்கு மூன்று நாள்களுக்கு முன்னர் பெப்ரவரி முதலாம் திகதி அதிகாலை 1-50 மணியளவில் கிளிநொச்சி — பரந்தன் பிரதேசத்தின் மீது புலிகள் நடத்திய அதிரடிப் பாய்ச்சலுடன் இந்தப் பிந்திய யுத்தம் ஆரம்பமானது.

அன்று அதிகாலை 4 மணிக்கு ஆனையிறவுத் தளத்துக்கு அண்டியிருந்த பாரிய தொலைத் தொடர்புக் கோபுரம் புலிகளின் மோட்டார் தாக்குதலில் நாசமாக யாழ்ப்பாணத்துக்கான வெளியூர் தொலைத் தொடர்பு வசதியும் செத்துப்போனது.

யாழ்ப்பாணத்திலிருந்து — அல்லது யாழ்ப்பாணத்துக்கு — எடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள் அனைத்தும் ஆனையிறவு, மடுகந்தை ஆகிய பிரதேசங்களில் உள்ள ''ரிப்பீட்டர்'' கருவிகள் மூலமாக அஞ்சல் செய்யப்பட்டே செல்கின்றன.

ஆனையிறவு தொலைத் தொடர்புக் கோபுரம் செயலிழக்க யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசிச் சேவையும் செயலிழந்தது.

எனினும் யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கு மன்னாரிலிருந்து— மன்னார் தொலைத் தொடர்புக் கோபுரம் வழியாக— மன்னார் இலக்கத் தொலைபேசி ஒன்று வழங்கப்பட்டிருக்கின்றது. நேரடியாகமன்னார் தொலைத் தொடர்புக் கோபுரம் வழியாக இச்சேவை நடைபெறுவதால் இந்த ஒரேயொரு சேவை மூலமே— யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஊடாக— பதிவு செய்து வெளியூர் அழைப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இந்தச் சேவை ஊடாக ஒரு தொலைபேசி இலக்கத்துக்கு ஆகக் கூடியது மூன்று நிமிட நேர வெளியூர் அழைப்பு மட்டுமே வழங்கப்படுவதாலும்—

மிக நெருக்கடியான தொலைபேசி அழைப்புப் பிரச்சினைகளுக்கு மத்தியில் அவசர— அத்தியாவசிய— சேவைகளுக்கு மட்டுமே இந்த இணைப்பு ஊடான தொலைபேசி வசதி வழங்கப்படுவதாலும்—

கிளிநொச்சி, பரந்தன் யுத்த நிலைமை குறித்து யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் சரியான— சுதந்திரமான— சுயாதீனமான— தகவல்களைத் திரட்ட முடியாத— இருட்டுக்குள் இருக்க வேண்டிய— இக்கட்டான நிலைமைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றார்கள்.

எனினும் கிடைத்த சொற்ப தகவல்களை வாசகர் முன் வைப்பது அவசியமாகுகின்றது.

'ரிவிரச' நடவடிக்கை மூலம் யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியை படைகள் மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர், 'சத்ஜெய' என்ற நடவடிக்கையை ஆனையிறவிலிருந்து தெற்கு நோக்கி படையினர் ஆரம்பித்தனர். பல கட்டங்களாக நடத்தப்பட்ட அந்த நடவடிக்கை மூலம் பரந்தனும், கிளிநொச்சியின் மத்திய நகரப் பகுதியும் படைகளின் வசம் வந்தன.

ஆனையிறவிலும் ஆனையிறவுக்கு அப்பால் பரந்தன், கிளிநொச்சிப் பிரதேசங்களிலும் 54 டிவிஷனின் கீழ் விஜபா, சிங்க ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த 541, 542, 543 மற்றும் 10 ஆகிய இலக்கங்களைக் கொண்ட பிரிக்கேட்களைச்சேர்ந்த பல்லாயிரம் துருப்புகள் நிலை கொண்டிருந்தன.

பூநகரிப் படைத்தளத்தை அரசுத் துருப்புகள் கைவிட்ட பின்னர், அதுவரை அங்கு நிலைகொண்டிருந்த 10 ஆவது பிரிக்கேட் ஆனையிறவுப் பாதுகாப்புக்காக பரந்தனில் நிலைகொண்டது.

சிறப்பு இராணுவப் பயிற்சி பெறுவதற்காக இந்தியா சென்றிருந்த பிரிகேடியர் லொஹான் குணவர்த்தனா நாடு திரும்பியதும், 54 ஆவது டிவிஷனின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டு ஆனையிறவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இப்பிரதேசம் மேஜர் ஜெனரல் ஆனந்த விஜயசேகராவின் கீழ் இருந்த போதும் ஒரு தடவை புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. அத்தாக்குதலின் போது படைகளின் 11 ஆட்லறி நிலைகளைத் தாங்கள்தகர்த்ததாகவும் முந்நூறு படையினர் உயிரிழந்ததாகவும், நானூறு படையினர் வரைக் காயமடைந்ததாகவும் புலிகள் அறிவித்திருந்தனர்.

அந்தத் தளப்பிரதேசமே மீண்டும் இந்த வருட ஆரம்பத்தில் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றது.

ஆனையிறவுத் தளத்தில் இருந்து சுமார் ஒன்பது மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் கொண்ட நீண்ட பிரதேசம் —கிளிநொச்சி டிப்போ வரை — படையினரால் கைப்பற்றப்பட்டு படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்து வந்தது.

ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் வரையான 16 கிலோ மீற்றர் நீளப் பிரதேசத்தை — கண்டி வீதியை மையமாகக் கொண்டு சுமார் நான்கு கிலோ மீற்றர் அகலப் பிரதேசத்தை — தமது முன்னணிக் காவலரண்கள் மூலம் படையினர் பேணி வந்தனர். ஆங்காங்கே பல மினி முகாம்களும் அமைக்கப்பட்டிருந்தன.

## பாசுபதன்

ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதியில் கிட்டத்தட்ட பத்தாயிரம் துருப்புகள் நிலைகொண்டிருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

கடந்த முதலாம் திகதி அதிகாலை 1-50 மணிக்கு புலிகளின் தாக்குதல் ஆரம்பமானது.

ஆனையிறவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் — கண்டி வீதியை மையமாக வைத்துக் கொண்டு — 16 கிலோ மீற்றர் X நான்கு கிலோ மீற்றர் பிரதேசத்தில் பரந்திருந்த படையினர் மீது —

பரந்தன் பகுதியில்—

மேற்குப் புறத்தில் பூநகரி— பரந்தன் வீதி ஊடாக ஓரணியும் —

கிழக்குப் புறத்தில் முரசுமோட்டை ஊடாக இன்னொரு அணியும் தாக்குதலைத் தொடுத்தன.




அதே நேரம் இப்பிரதேசத்தின் வேறு முனைகள் ஊடாகவும் புலிகளின் அணிகள் ஆங்காங்கே தாக்குதல்களை நடத்தின.

கரும்புலிகள் உள்ளே நுழைந்து முன்னணிக் காவலரண்களைத்தாக்கி அழித்து' வழி ஏற்படுத்திக் கொடுக்க புலிகளின் அணிகள் படை நிலைகளுக்குள் ஊடுருவத் தொடங்கின.

ஏறத்தாழ பத்து கரும்புலிகள் வரை ஆட்லறித் தளங்களுக்குள் புகுந்து தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் அவற்றைத் தகர்த்ததாக பத்திரிகைத் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் தமது ஊடுருவல் தாக்குதல் மூலம் இராணுவ வேலியைத் தகர்த்தபுலிகள் இதன் மூலம் பரந்தன்— கிளிநொச்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்தபடையினருக்கும் ஆனையிறவுப் படையினருக்கும் இடையிலான தொடர்பைத் துண்டித்ததாகவும் கூறப்படுகின்றது.

அதேசமயம்—

கிளிநொச்சியில் நீண்டு பரந்த பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த படையினரை பல முனைகளில் புலிகள் ஊடுருவித் தாக்கியதால், படைகள் பல இடங்களில் துண்டு பட்டு புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியதாகவும் ஆரம்பக் கட்டத் தகவல்கள் சில தெரிவித்தன. எனினும் அவற்றை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

எது எப்படியென்றாலும்—

கிளிநொச்சியிலும், பரந்தனிலும் படைப் பிரதேசங்களில் பல இடங்களில் ஊடுருவிய புலிகள் படைக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தினர் என்பதை ஊர்ஜிதப் படுத்த முடிந்தது.

ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் இராணுவ வேலியை புலிகள் தகர்த்து துண்டாக்கினர். எனினும் அடுத்து வந்த நாள்களில் படைகள் மீண்டும் அப்பிரதேசத்தைக் கைப்பற்றி இணைப்பை ஏற்படுத்தி விட்டன.

என்றாலும் கிளிநொச்சி நகரப் பகுதி இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருவதாகத் தெரிகின்றது.

''நாம் கைப்பற்றிய பிரதேசம் எதனையும் பெரிதாக இழந்து விடவில்லை. கிளிநொச்சியின் தெற்கு முனைகளில் புலிகள் நிலை கொண்டுள்ளனர் என்பது உண்மை தான். ஆனால் தருணம் வரும்போது அவர்கள்விரட்டியடிக்கப்படுவர்'' — என்று வடபகுதி இராணுவக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

படையினர் முகாம் அமைந்திருந்த கிளிநொச்சி மகாவித்தியாலயத் தளம் படையினரின் விமானக் குண்டு வீச்சில் அழிக்கப்படும் நிலையில் [illegible] கிளிநொச்சி தளத்தின் கட்டுப்பாட்டை படைகள் இழந்துவிட்டன என்பதைக் காட்டுவதாக அமைந்தது.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில்இருநூறுக்கும் அதிகமானோர் களப்பலியாகியிருக்கின்றார்கள்.

உயிரிழந்த புலிகள் போராளிகளின் கணிசமான சடலங்களைப் படையினர் கைப்பற்றியிருந்தனர். எனினும் அவற்றை புலிகளிடம் ஒப்படைப்பது தொடர்பான பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை. சடல ஒப்படைப்புக்காக — அல்லது சடல ஒப்படைப்பைக் காட்டி — யுத்தப் பிரதேசத்தில் சில மணி நேர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த படைத் தரப்பு முயன்றதாகவும், ஆனால் புலிகள் அதற்கு இணங்கவில்லை என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. ஆனால் யுத்த தந்திர காரணங்களுக்காக அத்தகைய யுத்த நிறுத்தத்துக்கு புலிகள் இடமளிக்கவில்லைப் போலும்.

படையினரின் ஐம்பத்தியைந்து சடலங்களைப் புலிகள் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்றது அவற்றில் 41 சடலங்கள் மல்லாவியில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டு, வவுனியா ஊடாக படையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த 41 சடலங்களில் பத்துச் சடலங்களை மட்டுமே அடையாளம் காண முடிந்ததாக பாதுகாப்பு உயரதிகாரி ஒருவர் கூறினார்.

இச்சமரில் படைத் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து கணக்கெடுக்கப்படுவதாகவும் அடுத்த 24 மணி நேரத்துக்குள் அது வெளியிடப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார்

ஆனால் பலியானோர், காயமடைந்தோர் என ஐந்நூறு படையினரியின் இடம்கள் வெற்றிடமாகியிருப்பதாக சில தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தெரிவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் சிறுத்தைப் புலிகள் அணியே இத்தாக்குதலை நடத்தியதாகவும் அப்பத்திரிகை தெரிவித்தது.

வடக்கிற்கான— பாதுகாப்பான — தரைவழிப்பாதை திறக்கப்பட்டதும் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு வாகனங்கள் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இத்தரைப் பாதையைத் திறப்பதற்காக வவுனியாவிலிருந்து ''வெற்றி உறுதி'' படை நடவடிக்கையை ஆரம்பித்து வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருககும் படை அணியுடன் கிளிநொச்சியில் உள்ள படை அணி முன்னோக்கி நகர்ந்து, இடைவெளியில் சந்தித்து இணைந்து கொள்வதுடன் தரைப்பாதை திறக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் தரைப் பாதையைத் திறப்புக்கான ஆரம்ப இடத்திலேயே — கிளிநொச்சியிலேயே — படைத்தரப்புக்கு அதன் அடித்தளத்தையே அதிரவைக்கும் அடி விழுந்திருக்கின்றது

இத்தாக்குதல் மூலம் கிளிநொச்சி நகரின் தென்பகுதி புலிகளின் கையில் மீண்டும் வீழ்ந்து விட்டது; படையினரின் பல ஆட்லறி நிலைகள் தகர்க்கப்பட்டுள்ளன; பல நூற்றுக் கணக்கில் படையினர் களத்திலிருந்து அகற்றப் பட்டிருக்கின்றார்கள்,

அந்த வகையில் புலிகளுக்கு இது ஒரு வெற்றிகரத் தாக்குதலே.

எனினும் இருநூறு புலிகள் வரை இச்சமரில் களப் பலியாகியிருப்பது புலிகளுக்கு ஒரு பின்னடைவும் கூட.

★ ★ ★

### 'ரத்வத்தையின் வாய்ச்சவடால்!'

வவுனியாவிலிருந்து வடக்கு ஸ்ரீலங்காவுக்கு பாதுகாப்பான தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை விடுத்த பெப்ரவரி 4 காலக்கெடு, எதிர்பார்த்தபடி காலாவதியாகிவிட்டது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு ஜெனரல் அனுருத்த ரத்வத்தை காலக்கெடு விதிப்பதும் —

அது பயனற்று காலாவதியாவதும் இது முதல் தடவையல்ல. இந்த விடயத்தில் தாம் இராணுவத்தை வழி நடத்தும் ஓர் இராணுவ வாதியல்ல; வெறும் வெற்றுவேட்டு அரசியல்வாதியே என்பதை அவர் பலமுறை நிருபித்துக் காட்டியிருக்கின்றார். அந்த வரிசையிலே பெப்ரவரி 4 ஆம் திகதியும் அவர் விதித்த ஒரு காலாவதியான காலக்கெடுவே!

நாடு முழுவதிலும்அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய தலதா மாளிகைக் குண்டு வெடிப்புத் தாக்குதலிலும் கூட அமைச்சர் ரத்வத்தையின் வெற்றுவேட்டு 'வாய்ச்சவடால்' அம்பலமாகியிருக்கின்றது.

ஏ. எவ். பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்காவுக்கு அமைச்சர் ரத்வத்தை அளித்தபேட்டி ஒன்று கடந்த 22 ஆம் திகதி அரசுத்தரப் புப் பத்திரிகையான 'ஒப்சேவரில்' தலைப்புச் செய்தியாக வெளியாகியிருந்தது.

சுதந்திர தினப் பொன் விழாவைஒட்டி ''சரித்திர முக்கியத்துவம் மிக்க கண்டி நகரைப் பாதுகாக்க 10 ஆயிரம் துருப்புகள், பொலீஸார்'' என்ற தலைப்பில் அச்செய்தி பிரசுரமானது.

''அப்பேட்டியில் அமைச்சர் ரத்வத்தை கூறியவை மிக மிக முக்கியமானவை.

''பயங்கரவாதிகளின் தாக்குதல் அச்சுறுத்தலை நாங்கள் எதிர்நோக்குகின்றோம். சிறிய ஒரு தாக்குதல் மூலம் தலைப்புச் செய்திகளைப் பிடித்து விட அவர்கள் முயல்வார்கள். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அதற்காக வரலாற்றில் இல்லாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புனித நகரைப் பாதுகாப்பதற்காக10 ஆயிரம் துருப்புகள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.''

—இவ்வாறுஅமைச்சர் அனுருத்த ரத்வத்தை அப்பேட்டியில் கூறினார்.

ஆனால் அந்தப் பேட்டி வெளியாகி மூன்று நாள்களுக்குள் புனித நகரத்தின்—மிகப் புனித மையத்தை — உலக பௌத்தர்களின் இதய வாசலை—வெடிகுண்டு நிரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Tutory மேசை, வாங்கு. பலகைமரக்கள், நல்லநிலையில் உள்ள Chaly என்பவை விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு 9 Am—1 pm வரை பார்வையிடலாம். விவரங்களுக்கு 33, குமாரசாமி றோட், கந்தர்மடம்.
[53139]

### தவறிவிட்டது

கலகரட்ணம் தவராசா ஆகியவரது தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை, தொலைத் தொடர்பு திணைக்கள அடையாள அட்டை, இராணுவப் பாஸ் ஆகியவை பேர்சடன் கண்டிக்குளிக்கும், கண்டி வீதி, றெயில்வேக் கடவைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொலைத்தொடர்பு திணைக்களத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[53150]

செ. நடராசா ஆகிய எனது கொம்பியூட்டர் வாகன லைசென்ஸ் (D L220101) சுன்னாகம் கொத்தியாலடிக்கும் ஊரெழுவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தர்மரூபன் பல்பொருள் வாணிபம் மானிப்பாய்ச் சந்தை என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் சன்மானம் வழங்கப்படும்.
[53155]

நடராஜா குமாரராஜன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (740342142V) விசேட அடையாள அட்டையும் நாச்சிமார்கோவிலுக்கும், குளப்பிட்டிச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'சச்சியா காட் வெயர்' வட்டுக்கோட்டை என்ற விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.
[53153]

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சுதகல்யாணி திரு லோகச்சந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, விமான பதிவு இலக்கம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ். கொடிகாமம் பேருந்தில் அல்லது வேம்படி சோதனைச் சாவடிக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் கிழக்கில் அல்லது ராஜன் பில்லைசைம், 286, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.
(53144)

### தேவை

பாலர் பாடசாலை நடத்துவதற்கு ஏற்றதாக நல்லநிலையிலுள்ள சிறுகதிரைகள். மேசைகள் உடன் தேவை, நியாய விலையில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: பவா, 7/1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[53126]

### திருமண சேவை

இந்தியாவில் கொம்பியூட்டர் பொறியியலாளராக பணிபுரிபவருக்கு, லண்டனில் பொறியியலாளராக பணிபுரிபவருக்கும், யாழ்ப்பாணத்தில் B. A ஆசிரியருக்கும், எக்கவுண்டனுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: வராகி திருமண சேவை, இலங்கைநாயகி அம்மன் கோயில் அண்மையில், கல்வியங்காடு.
(53145)

### நூல்கள்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள், நாடகம் எழுதுவது எப்படி? 275 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. ரூபா 50/- உங்கள் வரலாற்றை நீங்களே மறக்கலாமா?
(53117)

### கண்டீர்களா?

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த பஞ்சலிங்கம் ரவிவண்ணன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0907023134) யாழ். கஸ்தூரியார் வீதியில் 08-01-1998 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விங்கன் கிறீம் ஹவுஸ், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.
(53147)

### வினாத்தாள்

1-2-98 இல் நடைபெற்ற 13 ஆவது புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ். நகர்.
[53039]

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதியில் 76 ஆம் இலக்க நவீன பாணியில் அமைந்த அடக்கமான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. வேலாயுதம் (சட்டத்தரணி) புகையிரதநிலைய வீதி, சாவகச்சேரி.
(53160)

### மணமகன் தேவை

தென்மராட்சியை பிறப்பிடமாகக் கொண்ட 1956 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமற்ற B. A பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. சொந்த வியாபாரம் செய்வோர், அரசதொழில் புரிவோர் விரும்பத்தக்கது. இல. 687, C/O உதயன், யாழ்ப்பாணம்.
(53078)

## யாழ். பல்கலைக்கழகம் கலை வட்டம் நடத்தும்

## நாடக அரங்கக் கல்லூரியின் இருக்கண் வருங்கால்...

(சிறுவர் நாடகம்)

இடம்: யா/ இந்து மகளிர் கல்லூரி
காலம்: 09-02-98 (திங்கள்)
மாலை 3.00 மணி
பிரவேசம் 10/- 20/-

## The Jaffna Education Centre

சாந்தி சினிமா முன்பாக யாழ்ப்பாணம்

★ Spoken English, Shorthand Typing
★ சிங்களம் கற்பிக்கப்படும்

(53162)

## சுனில் ஆட்ஸ்

சுனில் ஆட்ஸில் 16-12-97 வரை ஒப்படைத்த சகல படச்சுருள்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் கலர் படங்களைப் பெறுவதில் உள்ள தாமதத்தை தவிர்க்க ''சுனில் ஆட்ஸ்'' இடம் ஒப்படையுங்கள். 10-02-98 அன்று படச்சுருள்கள் அனுப்பிவைக்கப்படும்.

**சுனில் ஆட்ஸ்**
**727, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(வி/2822)

## கண்ணீர் அஞ்சலி

விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதியும், இரசாயனவியல் துறை மூத்த பேராசிரியருமாகிய

**S. மகேஸ்வரன்** அவர்கட்கு

எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(53142)

## மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை


**இடம்:- விக்னா கல்வி நிறுவனம்**
(பரீட்சை 1)
**காலம்:- 10-02-98 செவ்வாய்க்கிழமை**
காலை 9-00 மணி

★ ஆண்டு 6 - O/L வரை மாதத்தின் கடைசி சனி, ஞாயிறு தினங்களில் இப் பரீட்சை நடைபெறும்.
★ எமது நிறுவனத்தில் கல்வி கற்காத மாணவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றலாம்.
★ இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். தவறின் எக்காரணம் கொண்டும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
★ இப் பரீட்சை முன் கூட்டியே எமது நிறுவனத்தில் பதிவு செய்த கல்விநிறுவனங்களிலும் நடைபெறும். பதிவு செய்து கொள்ளாத கல்விநிறுவனங்கள் உடன் தொடர்பு கொண்டு பரீட்சை நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலாம்.
★ கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய 3 பாடங்களிலும் பரீட்சை நடைபெறும்.
★ வினாத்தாள்களைப் பெறவிரும்புவோர் விடைத்தாள்களுடன் பரீட்சை முடிவடைந்த பின் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விக்னா கல்வி நிறுவனம்**
பரீட்சைப் பகுதி—01
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(53158)

## ஓராண்டு நினைவலையில்



**சிங்கராசா சிவராசா (தும்பு)**

மலர்வு: 28—04—1948
உதிர்வு: 19—01—1997

திதி: 07—02 1998 ஏகாதசி

மருகன் வழிதேடி அன்னையைப் பின் தொடர்ந்து
நீயும் எங்களை விட்டு விண்ணுலகு புகுந்தமாயமென்ன?
ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவில்
எங்கள் கண்ணீர் வற்றாத நீரூற்று.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

(53071)

## புலமைப் பரிசில் - 1998
## 13 ஆவது பயிற்சிப் பரீட்சையில்

[யாழ். மாவட்டம்]

**அதி கூடிய புள்ளி பெற்றோர்**

1. செல்வன் தளையசிங்கம் அஜந்தன் - 186 புள்ளி (யா. இந்து. ஆரம்பபாட.)
2. செல்வி கதிரவேலு பூர்ணிமா - 177 புள்ளி (யா. சன். மகா. வித்.)
3. செல்வன் காந்தரூபன் ருகிலன் - 167 புள்ளி (உரு. மகளிர் கல்லூரி)
4. செல்வன் குலதாஸ் டில்சான் - 166 புள்ளி (உரு. மகளிர் கல்லூரி)
5. செல்வன் திருநாவுக்கரசு பிரசாந்த் - 165 புள்ளி (யா. இந்து ஆரம்பபாட)

மேற் கூறப்பட்ட பெயரை உடையவர்களே இம்முறை பரிசில்களைப் பெறுகின்றனர்.
இவர்களைப் பாராட்டுகின்றோம்.

**அடுத்த பரீட்சை 08-02-1998**

மேலதிக விவரங்களுக்கு:
**பரீட்சைப் பகுதி**
**BOND யாழ்ப்பாணம்.**

[53156]

## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

**செல்வன் யோகராசா ரமேஷ்**

(கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலை' ஆண்டு 10 மாணவன்)

மலர்வு: 10—04—1981
உதிர்வு: 25—12—1997

ஆண்டு பத்துவரை ஆர்வமுடன் கல்விகற்றாய்
ஆண்டவன் திருவடிக் கேகினையோ- நீண்டதொரு
துப்பாக்கிச் சன்னமது துளைத்த வுன்னுடலை
இப்பாரிற் காண்பதினி யெப்போ!

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

யா/ கைதடி நுணாவில்,
அ. த. க. பாடசாலை.

(53165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூர்கின்றோம்



பல்கலைப் புலவர்
**மூதறிஞர் க. சி. குலரத்தினம்**
(''மில்க்வைற் செய்தி'' கௌரவ ஆசிரியர்)
அவர்களை நினைவு கூர்கின்றோம்.

க. கனகராசா
மில்க்வைற்.

[சி/2825]


# ராணுவத்தினர் போல நடித்து சுதுமலை பகுதியில் கொள்ளை

படையினர் சோதனைக்கு வந்திருப்பதாகக் கூறி இரவு நேரம் வீட்டைத் திறக்க வைத்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த பணம், நகை ஆகியவற்றை அபகரித்துச் சென்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு சுதுமலை மடத்தடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சம்பவதினம் ஆறு பேர் கொண்ட கொள்ளையர் கோஷ்டி படையினர் போன்று உடை அணிந்து போலித் துப்பாக்கியுடன் பிரஸ்தாப வீட்டின் கதவைத் தட்டியது.

வீட்டில் இருந்தோர் கதவைத் திறக்கவில்லை.

பின்னர் கொள்ளையர்கள் ஜன்னலால் கூப்பிட்டனர்.

அம்மா ஒன்றும் பயப்பட வேண்டாம் நாங்கள் படையினர் வீட்டை சோதனையிட வந்திருக்கிறோம் என்றனர்.

இதனை நம்பி வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்தனர்.

வந்த ஆறுபேரில் இருவர் வெளியில் நிற்க நான்கு பேர் உள்ளே சென்றனர் ''வீட்டு அறைகளை எல்லாம் திறந்து விட்டு எல்லாரும் உங்கள் அடையாள அட்டைகளை கையில் எடுத்து வைத்திருங்கள்'' என்றனர் எல்லோரையும் ஒரே இடத்தில் நிற்கும்படி கூறிவிட்டு அந்த நால்வரும் அறைகளில் உள்ள அலுமாரிகள் பெட்டிகள் ''பாக்''கள் எல்லாவற்றையும் திறந்து கிளறினர். பின்னர் வெளியே வந்து ''அம்மா, அப்பா, தங்கச்சி, தம்பி நாங்கள் போயிட்டுவாறம். உங்கள் அறைகள் எல்லாம் கிளறிவிடப்பட்டிருக்கு மன்னித்துக் கொள்ளுங்கள் உங்கள் உதவிக்கு எங்கள் நன்றிகள்'' என கூறி விட்டு சிங்களத்தில் கதைத்துகொண்டு சென்றனர்

அவர்கள் சென்ற பின்னர் வீட்டார் அறைகளை பார்த்த போது எல்லாம் கிளறிவிடப்பட்டிருந்தன. பெட்டியில் இருந்த 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் நகைகள் காணாமற்போய் இருந்தன.

பின்னரே வந்தவர்கள் திருடர்கள் என்பது வீட்டுக்காரருக்குத் தெரியவந்தது.

# சைவ சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 7

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடத்தப்படும் சைவ சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகிய 8 பரீட்சை நிலையங்களில் நடைபெறும். இப்பரீட்சை ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 13 வரையிலான வகுப்புக்களுக்கு நடத்தப்படுகிறது.

ஆண்டு 1, 2, மாணவர்களுக்கு உரிய நீதி நூல் மனனப்போட்டி ஆண்டு 3 மாணவர்களுக்கு உரிய திருமுறை மனனப்போட்டி ஆகியன எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு இம்முறை சுமார் 3 ஆயிரத்து 250 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

(ஐ)


உ
சிவமயம்

# உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் தை மாதம் 27ஆம் நாள் (09 - 02 - 98) திங்கட்கிழமை காலை 9-35 மணி முதல் 10-15 மணி வரையுள்ள (பழைய நேரம்) புனர்பூச நட்சத்திரமும், திரயோதசி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய மீனலக்கின சுப முகூர்த்தத்தில்,

எமது கனிஷ்ட புத்திரன்
**சிரஞ்சீவி சிவமனோகர சர்மா**
அவர்களுக்கு

யக்ஞோபவீததாரண பிரம்மோபதேசம் செய்யத் திருவருள் துணைகொண்டு பெரியோர் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. சிவகடாட்சக் குருக்கள் (பேரன்)
திருமதி வ. நாகேஸ்வரக் குருக்கள்
மயிலணி, சுன்னாகம்.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

(சி-2803)



# யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தினம் - 1998
## போட்டிகளும், ஒழுங்குவிதிகளும்

| பங்குபற்றுவோர் | போட்டி | விடயமும், நேரமும் |
|---|---|---|
| 1. ஆண்டு 11, மாணவிகள் | கட்டுரை | ''கூட்டுறவில் பெண்களின் பங்களிப்பு ஏன் அவசியம்'' நேரம் — 45 நிமிடம் |
| 2. ஆண்டு 11, மாணவிகள் | பேச்சு | ''கூட்டுறவில் பெண்களின் பங்களிப்பை எவ்வாறு அதிகரிக்கலாம்'' நேரம் — 6 - 7 நிமிடம் |
| 3. ஆண்டு 12, 13 மாணவிகள் | கட்டுரை | ''பெண்கள் தலைமைத்துவத்தின் பலமும், பலவீனமும்'' நேரம் 1 மணி |
| 4. ஆண்டு 12, 13 மாணவிகள | பேச்சு | ''21 ஆம் நூற்றாண்டில் பெண்கள்'' நேரம் 6 - 7 நிமிடம் |
| 5. கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் அங்கத்தவர்கள் | பேச்சு | ''கூட்டுறவில் பெண்கள் ஒதுக்கப்படுகிறார்களா? ஒதுங்குகிறார்களா?'' நேரம் 6 - 7 நிமிடம் |
| 6. கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் அங்கத்தவர்கள் | கோலம் போடுதல் | 4 அடி நீள அகல இடத்தைப் பயன்படுத்தி தேங்காய்ப்பூவால் வர்ணக் கோலம். நேரம் 1 மணித்தியாலம் வழங்கப்படும். உதவியாளர் அனுமதிக்கப்படமாட்டாது. |

★ போட்டியாளர்களே விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும்.
★ பாடசாலை மாணவர்களின் விண்ணப்பம் கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
★ மகளிர் அங்கத்தவர் விண்ணப்பங்கள் அவ்வக் கூட்டுறவுச் சங்க தலைவர் அல்லது பொது முகாமையாளர் அல்லது செயலாளரால் உறுதிப்படுத்த வேண்டும்.
★ சகல போட்டிகளுக்குமான விண்ணப்ப முடிவு திகதி 20 - 02 - 98.
★ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை இல 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.''
★ போட்டிகள் யாவும் 29 - 02 - 98 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

மாவட்டச் செயலாளர்
இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2815)



குருமயம்
கைதடி
# ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம
## தியான நிலைய பிரவேச வைபவமும் 'தியானம்' சிறப்பு மலர் வெளியீடும் குருபூஜா வழிபாடும்

காலம்: 09-02-1998 திங்கட்கிழமை
காலை 6. 30 தொடக்கம் 7. 30 வரை
தியான நிலைய பிரவேச சாந்தி வைபவம்.

பங்குபற்றும் சிவாச்சாரியர்கள்:
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (ச. நீ.)
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ மு. கணேசக்குருக்கள்
சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ சி. மனோகரக் குருக்கள்

★ மு. ப. 9. 00 - குருபீட பாத பூஜா - திரு. சி. இரத்தினசிங்கம்
★ மு. ப. 9. 30 - 'தியானம்' மலர் வெளியீடு

வரவேற்புரை: திரு. சு. செல்வராசா (பொதுச் செயலாளர்)
தலைமையுரை: குலபதி ஆறுமுகம் கந்தையா (ச. நீ.)
முன்னிலை: சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்
ஸ்ரீமத் ஆறுமுகம் சுவாமிகள்
துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (ச. நீ.)
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.
பிரதம விருந்தினர் உரை: திரு. பு. சுந்தரம்பிள்ளை (பிரதேச செயலர்)
கௌரவ விருந்தினர் உரை: டாக்டர் வ. சின்னப்பு (ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள்-சிஷ்யன்)
மலர் ஆய்வுரை: திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
முதற்பிரதி பெறுபவர்: திரு. கு. கங்கைவேணியன் (வேணிகளஞ்சியம்)
சிறப்புரையாளர்கள்: திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர் இந்து சமயப்-பேரவை)
டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (நாவற்குழி)
நன்றியுரை: திரு. அ. யோகநாதன் (இணைச்செயலாளர்)

★ பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்;
★ ஆசிரம தொண்டர்களைக் கௌரவித்தல்

மங்கள இசை: திரு. சத்தியநாதன் குழு
திரு. தங்கவேலு குழு
சிற்பவேலை: திரு. இ. தங்கேஸ்வரன் குழுவினர் (அராலி)

பகல் 12. 00 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து மகேஸ்வரபூசை நடைபெறும். அன்பர்கள். அடியார்கள் பங்கு கொண்டு வழிபாடாற்றி. தியானம் இருந்து குருவருள் பெற்று இறை சிந்தனையுடன் திகழ அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
திரு. திருமதி க. மகாலிங்கம்,
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
சாவகச்சேரி.

[53113]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட மாணவருக்குப் பரிசளிப்பு'

நல்லூர், பெப், 7

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள பீடச்சபைக் கூட்டத்தில் கலைப்பீட மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

பரிசு பெறும் மாணவர்களின் விவரம் கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில இடப்பட்டுள்ளதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

(ஐ-103)


## யாழ். பல்கலைக்கழக மாணவர்கட்கு

மறைந்த பேராசிரியர்

**சி. மகேஸ்வரன்**

அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை ஞாயிறு காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அஞ்சலி நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் இறுதி ஊர்வலத்திலும் அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக் கழகம்.

[53191]



## கண்ணீர்ப் பூக்கள்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட
இரசாயனவியற்றுறைப் பேராசிரியரும்
கொக்குவில் இந்துவின் மைந்தனுமான
பேராசிரியர்

**சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்**


அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்கட்கு, கொக்குவில் இந்து சமூகத்தின் சார்பாக எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(53178)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் பரஞ்சோதி சிவராசா**

மலர்வு: 14—01—1935
உதிர்வு: 08—01—1998

பாசமிகு குடும்பத் தலைவனே எம் — தெய்வமே!
பண்புடன் எமை வளர்த்த ஜீவனே!
நேசமுடன் உங்களை நினைக்கின்றோம்.
தேசம் உங்களை நினைக்கவே
நாமும் தலை நிமிர்ந்து உங்கள் புகழ்பாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்
இறைவனை; வாழ்க நினது புகழ் என்று
வாழ்த்துகின்றோம்.

எமது குடும்பத் தலைவனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், பல்வேறு வகைகளில் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் எமது நன்றிகள். இன்று (சனி) நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் அனைவரையும் கலந்து சொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

துறையாமூலை,
மந்திகை - புலோலி.

(ஐ/[illegible])


# பாடசாலை கொட்டகையில் தீ விபத்து

உரும்பிராய், பெப். 7

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் கிடுகினால் வேயப்பட்ட ஒருபகுதி தீப் பிடித்து முற்றாக எரிந்து விட்டது. தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்து இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கீழ்வகுப்பு மாணவர்களின் இடப்பற்றாக் குறையைப் போக்குவதற்காக தற்காலிகமாக இக்கொட்டகை அமைக்கப்பட்டு சில வகுப்புகள் இயங்கி வந்தன. (ஐ-154)

# விளையாட்டு கழகங்கள் பதிவு

யாழ்ப்பணம், பெப். 7

தெல்லிப்பழைப் பிரதேச செயகலகத்தின் எல்லைக்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களையும் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை பதிவு செய்த விளையாட்டுக் கழகங்கள் அதனை உறுதிப்படுத்தும் பொருட்டும், பதிவு செய்யாத விளையகட்டுக் கழகங்கள் அதனைப்பதிவு செய்யும் பொருட்டும் உடனடியாக பிரதேச செயலகத்துக்கு வருகை தந்து, தத்தம் பிரிவுக்குரிய கிராம அலுவலர்களைச் சந்திக்குமாறு வலிவடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்,

(ஐ)

## கிளிநொச்சி...

(3 ஆம் பக்கத் தொடர்)

பப்பட்ட சிறிய டிரக் ஒன்று நெருங்கித்தாக்குவதை அந்த வரலாற்றில் இல்லாத மிகப் பெரும் பாதுகாப்புஏற்பாட்டினால் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பது தான் வேடிக்கை.

இதுபோல அமைச்சர் ரத்வத்தையின் அண்மைக்கால— பல்வேறு—'வாய்ச் சவடால்' பேட்டிகள் குறித்து தென்னிலங்கைப் பத்திரிகைகள் விலாவரியாகக் குறிப்பிடத் தொடங்கியிருக்கின்றன.

''புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரதேசங்களில் 96 வீதத்தைக் கைப்பற்றி விட்டோம். இன்னும் சிறிய ஒரு பகுதிதான் அவர்களிடம் எஞ்சி உள்ளது''— என்றார் அவர் ஒரு பேட்டியில்.

''புலிகளின் பலம் இப்போது இரண்டாயிரத்து ஐந்நூறுக்குக் குறைந்து விட்டது. அவர்கள் அனைவரும் தீவிரமான யுத்தத்தில் ஈடுபடக் கூடிய உறுப்பினர்கள் அல்லர் அனேகமானோர் 13 முதல் 17வயதுடைய சிறுவர்கள்...''— என்றும் மற்றொரு பேட்டியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரண்டாயிரத்தைந்நூறு உறுப்பினர்கள்தானா பத்துமாதங்களாக 'வெற்றி உறுதி' படையணிகளை முன்னேற விடாமல் தடுத்து வருகின்றார்கள்; உள்ளூராட்சித் தேர்தல் வேளையில் தாக்குதல்களை நடத்துகின்றார்கள்; யா—எல, காலி, கதிர்காமம், மலையகத்தில் நுவரெலியா, கண்டி தலதா மாளிகை மற்றும் கிழக்கில் பரவலாக பல இடங்களிலும் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்; சுதந்திரப் பொன் விழா வேளை கிளிநொச்சி, பரந்தன் பிரதேசத்தையே தூள் தூளாக்குகின்றார்கள்? — என்று கேள்வி எழுப்புகின்றனர் ஆய்வாளர்கள்

தாம் நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில் யுத்தத்தை நடத்தக் கூடிய அளவுக்கு — திசை திருப்பக்கூடிய வலுவுடன் — புலிகள் யுத்தம் புரியும் போது அவர்களை இழந்து விட்ட சக்திபோன்று கருதும் பாணியில் அமைச்சர் அனுருத்த ரத்வத் தைபேட்டி அளிப்பது தென்னிலங்கையில் கேலிக்கு உள்ளாகியிருக்கின்றது.

★

## அதிரடி அரங்கு

ஜீ.சீ.ஈ.(சாதாரணதரப்) பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணி அண்மையில் யாழ்ப்பாணத்திலும் நடந்தது தெரிந்ததே.

பாடசாலையில் ஜி. சீ. ஈ. (சாதாரண) தர வகுப்புக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களே சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள்களைத் திருத்த அழைக்கப்படுவர். அதுவே வழமை; முறை.

ஆனால் மதிப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் 'படி'யில் கண்வைத்த— வலிகாமம் பகுதியில்— கோட்டக்கல்வி அலுவலகத்துக்குப் பொறுப்பான— ஒரு மூத்த கல்வி அதிகாரியும் களத்தில் குதித்து விட்டார் —மனைவி சகிதம்.

துணைவியாராவது சாதாரணதர வகுப்புக்குத் தாம் கல்வி போதிக்கும் பாடத்துக்கு மதிப்பீட்டாளராகப் போனார். ஆனால் கோட்டத்துக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிக்கு சாதாரண பரீட்சை மதிப்பீட்டாளர் பணி கொடுத்தது எங்ஙனம்? பதினொரு நாளும் அவர் விடைத்தாளைத் திருத்த அங்கு அவரது அலுவலகம் அதிகாரியின்றி செயலிழந்து கிடந்தது. இது நியாயமா? ஆசிரியருக்குரிய வாய்ப்பில் அதிகாரிகள் தலைபோட்டு அதனைத் தட்டிப் பறிக்கலாமா?

மூத்த கல்வி அதிகாரிகள் இதைப்பார்த்திருக்கலாமா?

★ ★ ★

**யாழ்.** நகரின் மத்தியில் ஒரு சிறிய கோயில். வருடாந்த உற்சவத்தை ஒட்டி சுவாமி சுற்றிவரும் போது வர்த்தகர்கள் ''மண்டபப்படி'' வைத்து, நைவேத்தியங்கள் படைத்து, பின்னர் சுவாமியுடன் வரும் பக்தர்களுக்கு அந்த நைவேத்தியத்தை விநியோகிப்பது வழக்கம். அண்மையில் — பத்து நாள்களுக்கு முன்னர் — அவ்வாறு ஒரு பிரபல வர்த்தக நிறுவனத்தினால் ''மண்டபப்படி'' வைத்து நைவேத்தியங்கள் விநியோகிக்கப்பட்டன. களைத்து, விழுந்து வந்த, பக்தர்களுக்கு மேலதிகமாக ''பக்கெட்டில்'' அடைக்கப்பட்ட மாம்பழ ரசமும் (பானமும்) விநியோகிக்கப்பட்டது. ''சோழியன் குடுமி சும்மா ஆடாதே!'' என்ற நினைப்புடன் மாம்பழப் பான பக்கெட்டை வாங்கிய பக்தர்களுள் ஒருவர் நின்று நிதானித்து, பக்கெட்டைப் பார்த்தார். பாவனைக்கு உகந்த திகதி காலாவதியான மாம்பழப் பான பக்கெட்டுக்கள் அவை. வீணாக வெளியே கொட்டாமல் பக்தர்களின் தலையில் கட்டிவிட்டார்கள் என்று புலம்பித் தீர்த்தார் ஒரு பக்தர்.

★ ★ ★ ★

பழைய காலத்தில்தான் ராஜாக்கள், மந்திரிகள், பிரதம காவலாளர்கள் போன்றோர் மாறு வேடத்தில் தமது நகரை வலம் வந்து மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிவதாக 'அம்புலிமாமா' புத்தகம் மூலம் வாசித்திருக்கின்றோம்.

இப்போது யாழ். நகரிலும் இது நடக்கின்றது போலும். நட்சத்திரக் குறியுடன் பஜரோ ஜீப்பில் ஆளணி, அம்பு, காவலர்கள் சூழ வலம் வரக் கூடிய உயர் இராணுவ அதிகாரி அவர். ஆனால் விளையாட்டு வீரர்கள் அணியும் Track Suit அணிந்து — பெரிய பந்தா காவல்கள், பெரிய ஆயுதங்கள் ஏதுமின்றி — உதவியாளர்ஒருவருடன் யாழ். நகரில் சில பகுதிகளில் அவர் ஓட்டோவில் ஓடித் திரிந்ததை நேற்று முன்தினம் காண முடிந்தது. தான் யார் என்பதைக் காட்டாமல் — ஆர்ப்பாட்டமில்லாமல் — மாறுவேடத்தில் போவது போலபயணித்தால் உண்மைகளைக் கண்டறியலாம் என்ற எண்ணமோ? அல்லது ஆரவாரம் இல்லாமல் போவது பாதுகாப்பு என்ற எண்ணமா?

★ ★ ★

**யா**ழ். மணிக்கூட்டுக் கோபுரம்சேதமடைந்திருப்பதும், அதற்கு உதவ பிரிட்டன் இணங்கியிருப்பதும் தெரிந்த சங்கதிகள். அதற்கான மணிக் கூடுகளை கடந்த வியாழனன்று கொழும்பில் வைத்து பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் யாழ்.மாநகரஆணையாளர்அடங்கிய யாழ். பிரசைகள் குழுவிடம் கையளித்தார் என்ற விடயமும் தெரிந்ததுதான்.

ஆனால் அது பற்றிய செய்தியை வெளியிட்ட ரூபவாஹினி, ''பயங்கரவாதிகளின் தாக்குதலில் சேதமடைந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்த பிரிட்டன் உதவும்'' என்று குறிப்பிட்டதுதான் இடிக்கின்றது. ''பயங்கர வாதிகளுடன் நடந்த சமரில் சேதமடைந்த யாழ். மணிக்கூட்டுக் கோபுரம் ...... என்றாவது குறிப்பிட்டிருக்கலாம்.

ரூபவாஹினி யாரைப் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றது? ரூபவாஹினி புரியாமலேயே ஸேம் சைட் கோல்'' (Same Side Goal) அடிக்கின்றது என்கின்றார் பொதுஜனம் ஒருவர்!

**- மின்னல்**

# கணக்காளர் பரீட்சைக்கு விண்ணப்பம்

நவாலி, பெப். 7

இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு இரண்டு தரம் இரண்டிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு பரீட்சைத் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சை எதிர்வரும் ஏப்பிரல் மாதம் கொழும்பு, யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படும். பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுதிகதி இம் மாதம் 9 ஆம் திகதியாகுக்.

இது சம்பந்தமான முழு விவரங்களும் 09.01.98ஆம் திகதியை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(ஐ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனி இராணுவத் தீர்வே அரசுக்கு உள்ள ஒரே வழி

# புலிகளின் யுத்த நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு அரசு தயாரா?

## ரணில் கேள்வி

கொழும்பு, பெப். 7

தமது இயக்கத்தை அரசு தடை செய்துள்ளதால் இனிமேல் பேச்சுவார்த்தை மேற்கொள்ள தமக்கு வாய்ப்பு இல்லை என அறிந்துள்ள விடுதலைப் புலிகள், அடுத்து எடுக்கவுள்ள யுத்தமய நடவடிக்கைகளை எதிர்கொள்ள அரசு தயாரா என்பதே தற்போது எழுந்துள்ள பிரச்சினை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

வார முற்பகுதியில் ஐ. தே. க. தலைமைப் பணிமனையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''அமெரிக்க அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தபோது, விடுதலைப் புலிகள் அமைப்பைத் தாங்கள் தடைசெய்ய மாட்டோம் என அரசு அறிவித்தது. இந்தவிடயத்தில் எதிர்க்கட்சியின் உடன்பாட்டை அரசு தான் கோரிப் பெற்றது. நிபந்தனைகளின் அடிப்படையிலேயே உடன்பாட்டைத் தெரிவித்திருந்தோம். யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டு பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளுவது என்பதே அந்த நிபந்தனையாகும்.

ஆனால் இப்போது தடை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைக்கு சட்டரீதியான பின்னணி என்ன என்பதை நான் அறியேன். தடைசெய்யப்பட்ட வேளையில் இந்தத் தடை எத்தகையது என்பதுபற்றி வெளி விவகார அமைச்சோ, பாதுகாப்புத்துறைப் பேச்சாளரோ, தகவல் தொடர்பு சாதன அமைச்சோ அறிந்திருக்கவில்லை. அரசுக்குப் புலிகளுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதைவிட மாற்று வழிகள் இல்லை. யுத்தம் தான் தற்போது எஞ்சியுள்ளது.'' — என்றார்.

(உ-10)

## ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் வழங்கல்

அச்சுவேலி, பெப். 7

தொலைக்கல்வித்துறையில் ஆசிரியர் பயிற்சி பெற்ற பயிலுநர் ஆசிரியர்களின் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

வைபவத்தில் கல்விவலயம் 1 பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

1995 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சாவகச்சேரி, தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, வேலணை ஆகிய தொலைக்கல்வி மத்திய நிலையங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சான்றிதழ்கள் வழங்கப்படும் என சிரேஷ்ட போதனாசிரியர் எஸ். சரவணமுத்து தெரிவித்தார்.

(ஐ-11)

## 3 மாதங்களுக்கு முன் பாரிஸில் இருந்து வந்தவர் கைது

கொழும்பு, பெப். 7

கண்டி தலதா மாளிகைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலீஸார் தமிழர் ஒருவரைக் கண்டியில் கைது செய்துள்ளனர்.

இவர் 3 மாதங்களுக்கு முன்பு தான் பாரிஸில் இருந்து இலங்கை வந்தவராவார்.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக வவுனியாவில் அண்மையில் கைது செய்யப்பட்ட தமிழ் தம்பதியினரை விசாரணை செய்த போதே இந்த நபர் பற்றிய தகவல் தமக்குக் கிடைத்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் இந்தத் தம்பதியினர் தங்கியிருந்த வீட்டில் இந்த நபரும் தங்கியிருந்தார். இவர் வசமிருந்த செலுலர் தொலைபேசிக்கட்டண பற்றுச்சீட்டின் மூலம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அழைப்புக்களை இவர் பெற்றிருந்தார் எனத் தெரிய வந்துள்ளது.

(ஐ-7)

## "கவிதைக் களம்" நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 7

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் ஏற்பாடு செய்துள்ள 'கவிதைக் களம்' என்னும் தலைப்பிலான கவிதைக் கருத்துரை நிகழ்ச்சி எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் (2 இல்) நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2 மணி முதல் 3.15 மணி வரை நடைபெறும் முதலாவது அமர்வில் —

'கவிதையின் சமூகவியல்' என்னும் தலைப்பில் கலாநிதி நா. சண்முகலிங்கன், ''கவிதையின் அழகியல்'' என்னும் தலைப்பில் கவிஞர் சோ. பத்மநாதன், 'கவிதை அநுபவ நிலை' என்னும் தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். முதலாவது அமர்விற்குத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 3 30 மணி முதல் மாலை 4. 30 மணி வரை நடைபெறும் இரண்டாவது அமர்வில் —

'சமகாலக் கவிதைச் செல்நெறி' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறும். இந் நிகழ்விற்கு கவிஞர் இ. முருகையன் தலைமை வகிப்பார்.

இளங்கவிஞர்களுக்கும், கவிதை ஆர்வலர்களுக்கும் இக் கருத்துரைகள் பெரிதும் பயன்படுமென தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-7)

## சுட்டப்பட்டு மரணம்

வீட்டில் இருந்த வேளை இனந்தெரியாத நபர்களினால் அழைத்துச் செல்லப்பட்ட ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

குப்பிளான் தெற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகசுந்தரம் நாகராசா (வயது 50) என்பவரே உயிரிழந்தார்.

சடலம் நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-9-15-139)

## ஆசிரியர் விவரம் பதிவு

ஓய்வூதியம் பெறாது உள்ள தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை காலை யாழ். இந்துமகளிர் கல்லூரியில் பட்டதாரி வாண்மைவிருத்தி அமைப்பினரிடம் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

(ஐ)


## St. Patrick's College

★ **Fr. Long Memorial Fund:**

Well wishers are welcome to contribute to the above fund to put up a school building in memory of Rev. Fr. T. M F Long, former Rector.

A/C No. PS/678
Commercial Bank,
Hospital Road,
Jaffna.

★ **A/L 2000:**

A few places are available in the Maths, Bio-Science and Commerce streams Admission Test will be held on Wednesday, 11 th inst. Application form will be available till Monday 9 th.

- Rector

(C/2830)

## யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்
(வண்ணை சிவன் கோயில்)

### ஆதனங்கள் தொடர்பான அறிவித்தல்

மேற்குறித்த கோயிலுக்குச் சொந்தமான ஆதனங்களை அவற்றின் குத்தகைக்காரர்கள் / வாடகைக் குடியிருப்பாளர்கள் எவரும் விற்க முடியாதென்பதையும், யாராவது அவற்றினை விலைக்கு வாங்குவதாக எண்ணிப் பணத்தைக் கொடுத்து ஏமாந்தாலும் அவர்களுக்கு அவ்வாதனங்களில் எவ்வித உரித்து, உரிமை, அக்கறை, சட்டபூர்வமாக வரமாட்டாது என்பதையும் குறித்த கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாவும், முகாமையாளருமான வைத்திலிங்கச் செட்டியார் கந்தப்பச் செட்டியாரின் கையெழுத்திட்ட நொத்தாரிசுவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சட்ட ஆவணம் மூலம் பெறப்படாத எல்லா ஆதனங்கள், வீடுகள், கடைகள் யாவற்றிலிருந்தும் சட்டத்திற்கு விரோதமாக ஆட்சிக்கு வருபவர்களை வெளியேற்ற சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம்
L. L. B, J P U M.
சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிசு
வண்ணை சிவன்கோயில், சட்ட ஆலோசகர்,
உடுவில்.

(சி/2831)

## நெல்லியடி வணிகர் கழகம்
நடத்தும்
## கிரிக்கெட் சுற்றுப்போட்டி
## இறுதிப் போட்டி [97-98]

இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்.

காலம்: 08-02-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி.

5 ஓவர் கொண்ட இறுதிப் போட்டி
தம்புறுவளை விளையாட்டுக் கழகம்
எதிர்
ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம்

20 ஓவர் கொண்ட இறுதிப் போட்டி
திக்கம் விளையாட்டுக் கழகம்
எதிர்
அண்ணாசிலையடி விளையாட்டுகழகம்

பிரதம விருந்தினர்
திரு. எம். நடராஜசுந்தரம் அவர்கள்
(தலைவர், முகாமைத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்கள்
திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள்
(பிரதேச செயலர், கரவெட்டி)
திரு. V. செல்வராஜா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கரவெட்டிக் கோட்டம்)
திரு சிற்றம்பலம் அவர்கள்
(அதிபர், நெல்லியடி, மத்திய மகாவித்தியாலயம்)

போட்டிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்.
கிரிக்கெற் அபிமானிகளை அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி.

[சி/2829] நெல்லியடி வணிகர் கழகம்.

## ★ மலிவு விலையில் ★
அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்
# லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்

கொழும்பு, பெப். 7

சம்பள உயர்வு கோரி மலையகத்தில் 6 லட்சம் தோட்டத் தொழிலாளர் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நாள் ஒன்றுக்கு 105 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாக இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தொழிற்சாலை நிர்வாகத்துடன் பேச்சுக்கள் நடத்தினார்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (உ-3)

## அச்சுவேலி இரட்டைக்கொலை:

# 14 சந்தேகநபர்களில் 4 பேர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப். 7

அச்சுவேலி தெற்கு வாதரவத்தையில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 இராணுவத்தினர் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று யாழ். நீதிமன்றில் பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் இடம்பெற்றது.

சுமார் 80 பேர் மத்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 14 சந்தேகநபர்களில் 4 பேரை இறந்தவர்களின் உறவினர்கள் அடையாளம் காட்டினார்கள் எனத் தெரிய வந்தது.

விசாரணைகள் முடிவடையாத காரணத்தால் சந்தேக நபர்கள் அனைவரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

கொலையான இருவரும் செல்வரத்தினம் ஜெயசீலன், சரஸ்வதிகுட்டி சண்முகராஜன் என்ற இரு இளைஞர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் இரண்டாவது நபரின் பெயருக்கு முன்னால் உள்ள சரஸ்வதிகுட்டி என்ற பெயர் அவரது தாயாரினுடையது என்றும் —

அதை வைத்துக் கொண்டு உயிரிழந்தவர்களுள் ஒருவர் யுவதி என்றும் —

முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

னேறி கிளிநொச்சி நகரை மீண்டும் கைப்பற்ற முயற்சிப்பதாகவும் —

அப் படையினருக்கும் கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ள புலிகளுக்கும் இடையிலேயே கடும் சமர் நடப்பதாக அறிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றும் கடும் தாக்குதல் நடத்தின.

ஆனையிறவு, கிளிநொச்சிப் பக்கத்திலிருந்து நேற்றிரவும் குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

அதேநேரம் —

கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கவச டாங்கிகள், கவச வாகனங்களுடன் கிளிநொச்சி நோக்கி நேற்று முன்தினம் முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் பவள் கவச வாகனம் ஒன்று முற்றாகத் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளது; டாங்கி ஒன்று கடுமையாகச் சேதமாக்கப்பட்டது.

டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் பெரும் எடுப்பில் கிளிநொச்சி நகர் நோக்கி முன்னேறிய இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலால் பாரிய இழப்புக்களுடன் கரடிப்போக்குச் சந்திக்குப் பின் வாங்கிவிட்டனர்.

இந்தத் தாக்குதலில் புலிகளுக்கு சேதம் ஏதுமில்லை — இவ்வாறு ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (உ-3)

## பஞ்சாபி...

(முதலாம் பக்கத் தொடர்)

வந்தனர்.

அவர்களுக்கு மத்தியில் பஞ்சாபி உடை அணிந்து, குடை பிடித்துக் கொண்டு வந்த பெண் ஒருவரே தடை முகாமை அண்மித்ததும் — சோதனை முகாமிலிருந்த படையினரை நெருங்கியதும் — குண்டை வெடிக்க வைத்ததாகக் கூறப்படுகின்றது.

குண்டு வெடிப்பால் ''ஹையஸ்'' வாகனமும் அப்பகுதியில் இருந்த ஏனைய பல வாகனங்களும் சேதமடைந்தன. (உ-3-7)

## கொழும்பு...

(முதலாம் பக்கத்தொடர்)

இக்குண்டு வெடிப்பில் உயிரிழந்தனர். இருபது பேர் காயமடைந்தனர். ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவர்களில் ஒருவர் படைச் சிப்பாய் ஆவார்.

இக்குண்டு வெடிப்பினால் அப்பகுதியில் இருந்த வாகனங்களும், வர்த்தக நிலையங்களும் பலத்த சேதமடைந்தன. (உ-3-7)

### சுதந்திரதின பொன்விழா நாளன்று

# பல நாடுகளில் பரவலாக ஆர்ப்பாட்டப் பேரணிகள்

வவுனியா, பெப். 7

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினப் பொன்விழா நாளான — கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி — உலகின் பல நாடுகளிலும் பரவலாக ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம் பெற்றன.

கனடாவில் நடந்த பேரணியில் 1600 பேரும் —

லண்டனில் நடந்த பேரணியில் இருநூறு பேரும் —

பாரிஸில் இடம் பெற்ற பேரணியில் 5 ஆயிரம் மக்களும் — கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

அன்றைய தினத்தை உலக நாடுகளில் வாழ் தமிழர்கள் அடையாள கறுப்பு தினமாக பிரகடனம் செய்து துக்கதினமாக அனுஷ்டித்தனர் என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

பிரான்ஸின் ஏனைய பகுதிகளிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றன.

சுவிற்சலாந்தில் பேண் நாடாளுமன்றத்துக்கு முன்னால் 5000 பேர் வரை மக்கள் கூடி தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

ஜேர்மனியில் ஸ்ரீலங்கா தூதரகம் ஒழுங்கு செய்த விழா மண்டபத்தின் முன் ஸ்ரீலங்கா அரசாங்கம் 50 வருடங்களாகத் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

நோர்வேயின் ஒஸ்லோ நகரில் 800 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நோர்வேயின் ஏனைய பகுதிகளிலும் விழிப்புப் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

டென்மார்க், ஒல்லாந்து ஆகிய நாடுகளிலும் விழிப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அந்தந்த நாடுகளின் தலைவர்களுக்கும் பொது மக்களின் கையொப்பங்கள் இட்ட தபால் அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த 3 ஆம் திகதியன்று ஆஸ்திரேலியாவின் மென்பிளண்ட், கான்பரா ஆகிய இடங்களில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் 1600 பேர்வரை கலந்து கொண்டனர். இது ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரை பெரிய எண்ணிக்கை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பேரணிகள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கு முன்னால் ஆரம்பித்து பின்னர் பிரித்தானிய தூதரகத்துக்கு முன்பாகவும் அங்கிருந்து ஸ்ரீலங்காத் தூதரகத்துக்கும் ஊர்வலமாகச் சென்றது.

இத்தாலியில் விடுதலை வீரர்களின் ஞாபகார்த்த சிலைக்கு முன்பாக ஒன்றுகூடல் ஒன்றும் நடத்தப்பட்டது. இதில் 300 பேர் வரை கலந்து கொண்டனர்.

லண்டனில் ஸ்ரீலங்காவின் 50 ஆவது சுதந்திரதின விழாவை எதிர்த்து மாபெரும் பேரணி நடைபெற்றது. இதில் முதன்முறையாக 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கனடாவில் இலங்கை அரசாங்கத்தின் 50 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து மற்றொரு ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இதில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள்.

பேரணி முடிவில் 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து உரையாற்றினர். இதனைத் தொடர்ந்து கனடா பல்கலைக்கழகத்தில் நடந்த மாநாட்டில் பல கல்விமான்கள் உரையாற்றினர். குறிப்பாக பேராசிரியர் வண. யோசப் சந்திரகாந்தன், பேராசிரியர் இலகுப்பிள்ளை, பேராசிரியர் மாகுவெல், பேராசிரியர் வில்சன் போன்றோர் உரையாற்றினர். (உ-7)

## நாளை

**தை 26**

ஞாயிற்றுக்கிழமை

திதி: துவாதசி

பிற்பகல் 3.10 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

பிற்பகல் 3.52 வரை

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 9.35-11.05

ராகுகாலம்: 5.05-6.35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப் 7

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் இன்றும், நாளையும் நடத்தப்படவிருந்த கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் யாவும் தவிர்க்க முடியாதபடி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இன்று நடைபெறவிருந்த தொடர்பியலுக்கான ஆங்கில கற்கை நெறியின் 27 ஆவது தொகுதிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறும் என்றும் —

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இச்சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## சமய சந்நிதியில்

நீர்வை வடகோவை அருள்மிகு ஸ்ரீ சாந்தி துர்க்கை அம்மன் கிராமவலமாக நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நீர்வேலிப் பகுதியையும் மாலை கோப்பாய்ப் பகுதியையும் உலா வருவார். (உ-30)

## இன்று

கொழும்புத்துறை, பெப்.7

யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து இளைஞர் மன்றங்களைப் பதிவு செய்தல் சம்பந்தமான முக்கியமான கூட்டம் ஒன்று இன்று முற்பகல் 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சிவன் கோயிலுக்கு முன்னால் உள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பணிமனையில் பேரவையின் தலைவர் [illegible] தலைமையில் இடம்பெறும். (உ-30)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்)

உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் முடிந்த பின்னர் இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புகள் வருமாறு:

அ) தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களின் எண்ணிக்கை:- ஓர் அதிகாரியும் 52 படைச் சிப்பாய்களும்.

ஆ) மோதல் ஏற்பட்ட சமயம் காணாமல் போனோர் எண்ணிக்கை:- ஓர் அதிகாரியும் 52 இராணுவச் சிப்பாய்களும்.

இ) மோதலின்போது சிறு காயமடைந்த படையினரின் எண்ணிக்கை:- ஆறு அதிகாரிகளும் 355 சிப்பாய்களும்

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இலக்குத்..

(முதலாம் பக்கத் தொடர்)

பொதுவாக அபிப்பிராயம் கூறப்படுகின்றது.

வேறு முக்கிய இலக்கை நோக்கி தற்கொலைத் தாக்குதல் நபர் சென்றிருப்பார். இடைவழியில் திடீரென தடை முகாமில் விமானப் படையினர் வழிமறித்துச் சோதனை செய்ய முயன்றபோது தாம் பிடிபடுவதைத் தவிர்ப்பதற்காக அந்நபர் அக்குண்டை வெடிக்க வைத்திருக்கலாம் என்று கருதப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல் நபரின் இலக்கு எதுவாக இருந்திருக்கும் என்பது குறித்து தெளிவான தகவல் ஏதும் கிட்டவில்லை.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண்ணுடன் மற்றொருவரும் வந்து கொண்டிருந்தார் என்றும் —

அவரும் இக்குண்டு வெடிப்பில் உயிரிழந்தார் என்றும் —

சில செய்தி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது. (உ-3-7)

## 'ஹையஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்)

வீதியில் உள்ள இராணுவ — விமானப்படை கூட்டு சோதனைத் தடை நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான 'ஹையஸ்' வான் ஒன்று வழி மறிக்கப்பட்டது.

முன் இருக்கையில் இருந்த வாகனத்தின் சாரதியும் மற்றொரு பெண்ணும் வாகனத்தில் இருந்து இறங்கும்படி கேட்கப்பட்டனர்.

வாகனத்தில் இருந்தது பெண்ணாதலால் அப்பெண்ணைச் சோதனையிடுவதற்காக இரு பெண் சிப்பாய்கள் அண்மையாகச் சென்றனர். அப்போது குண்டுவெடித்தது.

அதனால் குண்டை வெடிக்க வைத்ததாகக் கருதப்படும் தற்கொலைத் தாக்குதல் பெண்ணும், வாகனத்தின் சாரதியும், இரு பெண் சிப்பய்களும், மூன்று விமானப்படையினரும் வாகனத்தில் இருந்த மற்றைய இருவரும் உயிரிழந்தனர்.

தடைமுகாமிலிருந்த மற்றைய இரு விமானப்படையினரும் அப்பகுதியில் இருந்த ஐந்து பொதுமக்களும் காயமடைந்தனர்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த விசேட பொலீஸ் விசாரணைக் குழு ஒன்றை பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. ராஜகுரு நியமித்துள்ளார். (உ)

## மரண அறிவித்தல்

### பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்

(முன்னாள் பீடாதிபதி, விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்)

காலஞ்சென்ற பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் அவர்களின் இறுதிக்கிரியைகள் 08-02-98 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
ம. இராஜேஸ்வரி
[மனைவி]

குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(53192)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 661 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 07-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சஞ்சிகை

07 – 02 – 1998 சனிக்கிழமை

ஜவுளி உலகின் முன்னோடிகள்

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற
தரமான பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான
இடம்:

ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ
13, 14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(52967)

## கருத்துக் கலசம்

மயூரா

### வறுமையே போ!

''...தனியொருவனுக் குணவிலை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று மகாகவி பாரதி ஆவேசம் கொண்டான். இப்படி ஒரு நிலை வராதிருக்க இனி ஒரு விதி செய்வோம் என்பதே பாரதியின் குறிக்கோளாக இருந்தது.

வறுமையை ஒழிக்கவேண்டும்; தன்னை அதன் கோரப் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற இலக்கை மனிதன் இன்று நேற்றுவகுக்கவில்லை. ஆனால் பல நூற்றாண்டுகள் கழிந்த போதிலும் அந்த இலக்கை இன்னமும் அவனால் எய்த முடியவில்லை!

மனிதனின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைந்த விஞ்ஞானம் அபரிமிதமாக வளர்ந்துள்ள போதிலும், அதனூடாகவேனும் வறுமையை ஒழிக்க முடியாதிருப்பது அதன் தோல்விகளில் ஒன்றாகும்!

வளர்ச்சி அடைந்த நாடுகள் எனப்படும் அபிவிருத்தி அடைந்த செல்வந்த நாடுகளிலும் வறுமையும் பட்டினியும் இல்லை என்றில்லை.

மூன்றாம் உலக நாடுகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கை ஏனையோரை விட அதிகமாக இருப்பதனைக் காண முடிகிறது. வறுமை ஒழிப்புத் திட்டங்களும், நிவாரண மற்றும் மானிய திட்டங்களும் பெரிதாக வெற்றி தரவில்லை.

இலங்கையிலும் வறுமை, பட்டினி ஆகியனவே மேலெழுந்து காணப்படுகின்றன. உணவு, கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய பலவும் இலவசமாக வழங்கப்படும் திட்டங்கள் நடைமுறையில் இருந்தும் இரண்டையும் விரட்ட முடியவில்லை.

தற்கொலை செய்வது சட்டப்படி குற்றம். ஆனால் அரசு வறுமையை ஒழிக்காது தற்கொலையைக் குற்றமாகப் பார்ப்பது நீதியா என்றகேள்விக்குத் தக்க பதில் இல்லை!

போர் கோரத் தாண்டவம் ஆடும் தமிழர் பிரதேசங்களில் வறுமையும் பட்டினியும் கொடிய நோய்களாகப் பரவி வருகின்றன; வேகமாக தமிழர் சமுதாயத்தை அரித்து வருகின்றன. அதனால் தற்கொலை முயற்சிகள் பெருகும் வாய்ப்புண்டு.

இரண்டு இளம் பெண்கள் வறுமை காரணமாகத் தற்கொலை செய்ய முயன்றதற்காக மல்லாகம் நீதிமன்றில் நிறுத்தப்பட்டமை தமிழரிடையே வறுமையும் பட்டினியும் எத்தகைய சமூகத் தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளன என்பதற்கான ஒரு சோற்றுப் பதம்.

கொடிது கொடிது வறுமை கொடிது; அதனிலும் கொடிது இளமையில் வறுமை — என்ற ஔவையின் மொழி நோக்கற்பாலது.

இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு தனித்து எதுவும் செய்ய முடியாது. செல்வந்தர்கள் வறுமையில் வாடுவோருக்கு உதவ வேண்டும். வறுமையைப் போக்க அதுவே உதவும்.

# உயர்வும் வெற்றியும் உழைப்பால் கிட்டும்!

வாழ்க்கையில் நாம் இன்பம் காணவும், வெற்றி பெறவும், புகழ் அடையவும், செல்வம் சேர்க்கவும், உயர்ந்த பதவியில் உட்காரவும் நம்மால் முடியும்.

'வெற்றி பெறவேண்டும்!' என்ற ஆழ்ந்த உள்ளுணர்வை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது அதற்கு மிகவும் முக்கியம்.

'வெற்றி நமக்காகவே தான் பிறந்திருக்கிறது' என்று உறுதியாக நினைத்துச் செயல்பட்டால், வெற்றி நம் பக்கம்தான் இருக்கும்.

நேற்று என்பது, ஏற்கனவே பணம் வாங்கப்பட்ட காசோலை; நாளை என்பது, பிராமிசரி' நோட் (உறுதிப் படிவம்). இவை இரண்டும் இப்போது உபயோகப்படா. இன்று என்பது, கையில் இருக்கும் பணம் போன்றது. எனவே அதை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் சுறுசுறுப்பானவர்கள். நம்மால் தினமும் பல மணி நேரம் உழைக்க முடியும்; உழைக்க வேண்டும்.

எவ்வளவு அதிகமாக உழைக்க முடியுமோ, அவ்வளவு அதிகமாக நாம் உழைக்க வேண்டும்.

வாழ்க்கையில் உயர்ந்தவர்கள், செல்வந்தர்கள், மேதைகள் போன்றவர்களைப்பற்றி ஆராய்ந்து பார்த்தவர்கள், 'அவர்களிடம் அறிவாற்றல், பத்துப் பங்கும், உழைப்பு என்பது தொண்ணூறு பங்கும் இருக்கிறது'' என்று கூறுகிறார்கள்.

அதனால் நாம் இன்றே, இப்போதே ஓர் உறுதியான நேர்வழியைத் தேர்ந்தெடுப்போம், ''நாம் முன்னேறுவோம்!' என்று உறுதியாக நம்புவோம்; முறையாகத் திட்டமிட்டுச் செயல்படுவோம்.

ஒரு சிறிய நல்ல செயல், மிகச் சிறந்ததைச் செய்ய வேண்டும் என்ற வெறும் எண்ணத்தை விடப் பெரியது.

சிறு சிறு செயல்களில் கிடைக்கும் வெற்றி வாழ்க்கையில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தும்.

நாம் இன்று செய்யும் சிறு சிறு நற்செயல்கள், நாளை பெரிய அளவில் நாம் நல்ல செயல்களைச் செய்வதற்கு நம்மைத் தூண்டும்.

புதியவற்றைச் செய்வதற்குத் துணிவுடன் நாம் முன்வரவேண்டும்.

தினசரி செய்யும் அன்றாட வேலைகளில் இன்னமும் மன நிறைவும் கொள்ள வேண்டுமே தவிர, சோர்வும் சங்கடமும் கொள்ளக்கூடாது.

சோர்வு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும்.

இப்போது செய்யும்வேலையைவிட மேலும் சிறப்பாகச் செய்வதற்கு முன்வர வேண்டும். அப்போது நான் உற்சாகம் பிறக்கும்; களைப்புத் தோன்றாது; வெறுப்பு ஏற்படாது. அதனால் மனத்திற்கும் ஒரு திருப்தி ஏற்படும்.

''எனக்கு உழைப்பதற்கு ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணிநேரம் போதவில்லை'' என்கிறார் ஜான். டி. ராக்பெல்லர். கோடீஸ்வரரான இவர் தினமும் பதினாறு மணி நேரத்திற்கும் அதிகமாக உழைப்பதில் ஒரு மனநிறைவைக் கண்டார்.

கடினமாக உழைப்பதை ஒரு பழக்கமாகவும் வழக்கமாகவும் ஆக்கிக் கொண்டால், நம்முடைய மனதில் மகிழ்ச்சி நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும்.

அந்த மகிழ்ச்சியின் பிரதிபலிப்பை வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் நாம் பார்க்க முடியும்.

''வாழ்க்கையில் நீங்கள் எந்த ஒரு துறையை மேற்கொண்டிருந்தாலும், அந்தத் துறையில் உங்களை முன்னேறவைத்து பிரகாசிக்கச் செய்யும் ஆற்றல் உழைப்புக்குத்தான் உண்டு'' என்கிறார் ஜேம்ஸ் வாட்.

மிகவும் சிறப்பான தகுதியும் திறமையும் நம்மிடம் உண்டு. அவை உழைப்பாகச் சரியான முறையில் வெளிப்படும்போதுதான் நமக்குப் பயன்படும்.

நம்மிடம் எல்லாவிதத் தகுதியும், திறமையும் இருந்தும், நாம் உழைப்பதற்குப் பின்வாங்கினால் பயன் எதுவும் ஏற்படாது; மாறாக துன்பமும் தோல்வியும் கூட ஏற்படும்.

திறமை என்பது நம்முடைய நேரத்தையும் தொழிலையும் நல்ல முறையில் பயன்படுத்தி, செல்வம் சேர்த்து, வாழ்க்கையில் முறையான முன்னேற்றம் காண்பதற்காகத்தான் இருக்கிறது.

இதற்கு விடாமுயற்சி தேவை.

கலகலப்பான முகபாவனை, ஒரே குறிக்கோள், தன்னம்பிக்கை ஆகியவை இருந்தால் நிச்சயம் ஒருவர் எந்தத் துறையிலும் முன்னேறிவிட முடியும்.

அவ்வப்போது ஏற்படும் சிறு தோல்வி, துயரம், கஷ்டம் இவற்றைக் கண்டு துவண்டுவிட வேண்டாம். இவை எல்லாம் நமது இலட்சியத்துடன் ஒப்பிடும்போது–அற்பமானவை; விரைவில் மறைந்துவிடக் கூடியவை.

நம்முடைய பெருமை தோல்விகளில் துவண்டு போவதில் இல்லை; அதிலிருந்து மீண்டு எழுவதில் தான் நம்முடைய ஆற்றல் இருக்கிறது.

வேலை நேரத்தை வம்பு பேசி, வேண்டாதவைகளைப் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதால் எந்த நற்பயனும் ஏற்பட்டுவிடாது. அதனால் வீணாக நேரம் போவதுதான் மிச்சம்.

''உள்ளத்தையும் உடலையும் சோம்பேறித்தனமாக வைத்திருக்கக்கூடாது. ஒரு வேலையும் இல்லையென்றால் ஒரு நல்ல புத்தகத்தைப் படியுங்கள்'' என்கிறார் மேத்யூ ஆர்னால்ட்.

சிறிய திட்டங்களைத் தீட்ட வேண்டாம். அது நம்முடைய செயல் வேகத்தைத் துரிதப்படுத்தாது.

பெரிய திட்டம்தான் செயலாற்றுவதற்குப் புதிய உற்சாகம் தரும்.

'நம்மால் இது முடியும்' என்ற முழுநம்பிக்கை மிகவும் முக்கியம். சக்தி, செயல், நேரம் போன்ற எல்லாவற்றையும் ஒருமுனைப்படுத்தி குறிக்கோளை அடையவேண்டும்.

'தோல்வி வரும்' என்ற பயத்தை மறந்து செயல்பட்டால், நிச்சயம் வெற்றி பெற முடியும்.

இன்றைக்குச் செய்யவேண்டிய செயல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போனால், வெற்றியும் நம்மைவிட்டு நீண்ட தூரம் விலகிச் சென்றுவிடும்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்கள் பலர். கடின உழைப்பின் துணைகொண்டு மாபெரும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, இரவும் பகலும் பாடுபட்டு, சமுதாய முன்னேற்றத்தின் பொருட்டு பல சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள். இவர்களுடைய பட்டியலில் நாமும் இடம் பெற வேண்டாமா?

நாம் சுலபமாக செல்வத்தையும் புகழையும் அடைந்துவிட முடியாது. அவற்றை அயராத உழைப்பு ஒன்றினால்தான் பெற முடியும்.

எடுத்துக்கொண்ட வேலை பெரியதாக இருந்தால், அதைப் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாகச் செய்தால் கஷ்டமாகத் தெரியாது.

ஒரு பணியைச் செய்யும் போது சில மனக்கட்டுபாடுகள் தேவை.

நம்முடைய சொந்த நலன்களையும் வசதிகளையும் உதறித் தள்ளிவிட்டுச் செயலாற்றினால் தான், உலகம் போற்றும் பெரும் சாதனைகளைச் செய்ய முடியும்.

எந்தப் பணியில் ஈடுபட்டாலும் இடையிடையே ஓய்வு தேவை.

பணியைச் செய்யும் போது 'தான்' என்ற கர்வம் கூடாது.

எந்த வேலையும் இல்லாமல் இருப்பதுதான் வாழ்க்கையில் பெரிய தண்டனையாகும்.

ஏதாவது ஒரு பயனுள்ள வேலையைச் செய்து கொண்டிருப்பதில்தான் மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது.

செயலாற்றல் பொருந்திய வாழ்க்கை ஒளி மயமானது.

நாம் உழைக்க மறுத்து, 'அதிர்ஷ்டம் வந்து நம்மை உயர்த்தும்' என்று எதிர்பார்த்து காத்திருந்தால் ஒரு நாளும் உயர்வு பெற முடியாது.

''கழுதை போல் உழைப்பவன் கனவானைப் போல் உண்பான்'' என்று ஒரு

(XI ஆம் பக்கம் பார்க்க)

## குள்ளம் ஒரு குறையா?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு குறை இருந்துகொண்டே இருக்கும். மாவீரன் நெப்போலியனுக்கும் ஒரு குறை. 5 அடி நான்கு அங்குல உயரமே இருந்த நெப்போலியன் ஒருமுறை இவ்வாறு சொன்னான்:— ''என்னைவிட தகுதியில் குறைந்த ஜெனரல்கள் முன்னிலையில் நான் நிற்கும்போது, எனது குள்ள உருவம் ஒருவித தாழ்வு மனப்பான்மையை உண்டாக்கும். ஆனால் அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் என்னுடைய வெற்றிக்குக் காரணமாயிருந்த குணநலன்களை மனதில் நினைத்துக் கொண்டு விடுவேன். ஆகவே நான் குள்ளம் என்ற எண்ணமே என் மனதில் தோன்றாது''

பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கரை மற்ற விளையாட்டு வீரர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது குள்ளமான (Little Master) 'லிட்டில் மாஸ்ரர்' என்பார்கள்.

''இந்தக் குள்ளம் உங்களைப் பாதித்திருக்கிறதா?'' என்று ஒரு நிருபர் கேட்டபோது—

''கிரிக்கெட்டில் மிகவும் உயரமாக இருப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. சாதாரணமாக வேகப் பந்து வீச்சாளர், 'பம்பரையும்' 'பவுண்சரையும்' வீசும்போது உடலைச் சுருக்கிக் கொண்டு அந்தப் பந்தைவிளாசி அடிப்பதற்குக் கஷ்டப்படவேண்டும். ஆனால் என் குள்ளமான உருவம் வசதியானது'' என்று பத்திரிகையாளர்களுக்குப் பதில் அளித்தார்.

இதே போலத்தான் நடிகர் விஜய்காந்த் குள்ள உருவம். கறுப்பு நிறம். ஆனால் வெற்றிகரமானநடிகராகி விட்டார்.

இவ்வாறு சரித்திரத்தில் பல குட்டையான மனிதர்கள் உயரமான சாதனை புரிந்திருக்கின்றார்கள். ஆகவே குள்ளம் ஒரு குறை யல்ல.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுப் பொதியை எடுத்துச் செல்லும் அரசின் பயணத்துக்கு ஐக்கிய தேசிய கட்சி தடைக்கல்!

## மாற்று யோசனை மூலம் காலைவார மகாசங்க ஆதரவும் கிடைத்துள்ளது

மாற்றான் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்ற சுதந்திரப் பொன்விழா கடந்த புதன்கிழமை கொழும்பில், நாடாளுமன்றம் அமைந்துள்ள கோட்டேயில் — ஜெயவர்த்தனபுரவில் — கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

சுதந்திரப் பொன்விழாவில் இந்த நாட்டைக் கடைசியாக ஆண்ட பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெளிநாட்டவர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் வெவ்வேறு மன்னர்கள் ஆண்டு வந்தனர் என்பது வரலாறு. சிங்களப் பிரதேசங்களை சிங்கள மன்னர்களும், குறுநில மன்னர்களும் ஆண்டனர். அதே போன்று தமிழ்ப் பிரதேசங்களைத் தமிழ் மன்னர்களும் குறுநில மன்னர்களும் ஆண்டனர். அந்த வகையில் கண்டி, கோட்டே, யாழ்ப்பாண இராசதானிகளினதும் அவற்றின் கீழ்வரும் குறுநில மன்னர்களினதும் ஆட்சி நடைபெற்றிருக்கிறது.

அந்தப் பின்னணியில் பார்க்கும் போது, கண்டி இராசதானிப் பகுதியில் நடக்க ஏற்பாடான சுதந்திரப் பொன்விழா இடம் மாற்றப்பட்டு கோட்டே இராசதானிப்பகுதியில் நடைபெற்றிருக்கிறது.

மன்னர் ஆட்சிக் காலத்தில் வெவ்வேறு இராசதானிகள் அமைந்திருந்த போதிலும், வெளிநாட்டவர்கள் தமது நிர்வாக அமைப்பில் எல்லாவற்றையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தனர். அதனால் இலங்கையில் ஒற்றையாட்சி அமைப்பு முறை உருவானது. சுதந்திரத்தின் பின்னரும் அது தொடர்கிறது.

இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. ஆதலால் இந்த நாட்டு மக்கள் பிணக்கின்றி ஒற்றுமையாக வாழ ஒற்றையாட்சிக்குப் பதிலாக சமஷ்டி முறையிலான ஆட்சியே உகந்தது என்ற கருத்து இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேயே முன்வைக்கப்பட்டது.

இந்தக் கருத்தை வெளிப்படையாக முன் வைத்தவர்களில் இப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தையாரான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் முன்னணி வகித்தார்.

இலங்கை சட்ட நிரூபண சபைக் காலத்தில் முகிழ்த்த இந்தக் கருத்து, சுதந்திரப் பொன் விழா கொண்டாடப்படும் இந்நாள் வரை செயல் வடிவம் பெறுவதற்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை.

1957 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட பண்டா செல்வா ஒப்பந்தத்தில் ஒற்றையாட்சியை மாற்றுவதற்கான அத்திவாரக் கல் நடப்பட்டது. எனினும் அந்தக் கல்லும் பேரினவாதிகளால் தூக்கித் தூர வீசப்பட்டதால் எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை.

### ஒற்றையாட்சி; ஒருமைப்பாடு

நாட்டின் ஒருமைப்பாடு வேறு; ஒற்றையாட்சி வேறு. ஆனால் இரண்டும் ஒன்றே என வாதாடிக் கொண்டு ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்குப் பேரினவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஆட்சி அமைப்பில் மாற்றம் செய்யாததால் கடும் உள்நாட்டுப் போர் ஒன்று மூண்டு கடந்த பதினைந்து வருடங்களாக நாட்டை அழித்து, மக்களை அல்லோல கல்லோலப் படுத்தி வருகிறது.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சமஷ்டி ஆட்சி முறையின் முதலாவது படிக் கட்டான அதிகாரப் பரவல் முறையை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இப்போதைய அரசு முன் வைத்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதத்தில் அந்தத் தீர்வுப் பொதி நாடாளுமன்றத்திலும் முன் வைக்கப்பட்டுள்ளது,

சுதந்திரத்தின் பின்னர் அதிக வருடங்கள் இந்த நாட்டை ஆண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஒற்றையாட்சி அமைப்பை மாற்ற விரும்பவில்லை. அதனால் அரசின் தீர்வுத் திட்டத்துக்குத் தான் ஒரு மாற்று யோசனையை முன் வைக்கப் போவதாக அறிவித்தது. அது குறித்து ஆராய தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழு ஒன்றையும் நியமித்தது.

பாவம் அரசு. தனது தீர்வுப் பொதி நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதானால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவை என்பதால் வேறு வழியில்லாமல், ஐ. தே. கட்சி மாற்று யோசனை வழங்குவதற்கு ஜனவரி 31ஆம் திகதி வரை சந்தர்ப்பம் அளித்தது.

அதற்கு முன்னர் ஐ. தே. கட்சியின் மாற்று யோசனை கிடைக்காவிடில் தனது தீர்மானப்படி சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்போவதாகவும் கூறியது. தங்களுக்கு அரசு காலக்கெடு விதிக்க முடியாது என்று ஐ. தே. க. முதலில் சீறிய போதிலும், தனது மாற்று யோசனையின் முதலாவது பகுதியை ஜனவரி 28ஆம் திகதி ஓர் அறிக்கை மூலம் மறைமுகமாக வெளியிட்டது. மாற்று யோசனையை பகுதி பகுதியாக வெளியிட்டு மார்ச் நடுப்பகுதியிலேயே முழுமையாக வெளியிடுவதாகப் பிந்திய அறிவிப்பு வந்துள்ளது.

தனது மாற்று யோசனையின் முதலாவது பகுதியை அறிவித்த போது ஐக்கிய தேசியக்கட்சி அரசின் தீர்வுப் பொதியைத்தான் நிராகரிப்பதாகவும் தெரிவித்திருந்தது. இதனை, தீர்வுப் பொதியை முன்னெடுக்கவிடாமல் போடப்பட்ட கால் தடக்கு என்றே கொள்ள வேண்டும்.

அரசு முன்வைத்துள்ள திட்டம் வடக்கு—கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக மாட்டாது என்றும் அது நாட்டில் குழப்பத்தை உருவாக்கும்என்றும் ஐ.தே. கட்சி சாடியிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி முன் வைத்துள்ள முதற்கட்ட மாற்று யோசனையில் பின் வரும் நான்கு அம்சங்கள் அடங்கியுள்ளன.

★ சிறு பான்மையினருக்கு மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாத பிரதிநிதித்துவம் கொண்ட இரண்டாவது சபையை அமைத்தல்.

★ மத்திய அமைச்சரவையில் சிறுபான்மையினருக்குப் போதிய அளவு பிரதிநிதித்துவம்.

★ சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஜனாதிபதிக்கு மேலதிகமாக இரண்டு உப ஜனாதிபதி பதவிகளை உருவாக்குதல்.

★ தேசிய மட்ட அமைச்சுகளில் சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் நிர்வாகக் குழு முறையை நடைமுறைக்கு கொண்டு வருதல்.

இந்த மாற்று யோசனைகளில் ஆட்சி முறை குறித்து விசேடமாகச் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆனால் அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை நிராகரிப்பதாக அறிவித்திருப்பதால் ஓரளவு சமஷ்டி முறைக்கு வகை செய்யும் பிராந்திய சபைகளின் ஆட்சி முறைக்கு ஐ.தே.கட்சி எதிராக உள்ளதையே புலப்படுத்துகிறது அதாவது ஒற்றையாட்சி முறையை அது கட்டி அணைத்துக் கொண்டிருக்க விரும்புகிறது.

## உள்ளும் புறமும்

### குறுமுனி

மேற்கூறிய நான்கு அம்சங்களும் அரசின் பிராந்திய அரசு முறையுடன் சேர்க்கப்பட்டால் அனுகூலமானதாக அமையும். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி ஒற்றையாட்சி அமைப்பின் கீழேயே இந்த நான்கு அம்சங்களையும் செயலாக்க விரும்புகிறது.

### தமிழர்களின் அபிலாசை

ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று யோசனைகளால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. பிரிக்கப்படாத வடக்கு — கிழக்கில் தன்னாட்சி அரசு ஒன்றை நிறுவ வகை செய்யும் தீர்வினால் மட்டுமே தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளையாவது நிறைவேற்றி அவர்களைத் திருப்திப் படுத்த முடியும்.

இதனைத், தெரிந்து கொண்டும், ஐக்கிய தேசியக் கட்சி, இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தான் ஏதோ விசேட திட்டத்தை சமர்ப்பிப்பதாகக் கூறிக் கொண்டு தீர்வு முயற்சியைக் குலைக்க, தடுக்கச் சதி செய்கின்றது என்றே சொல்லலாம்.

தமது ஆக தான் அதிகாரப் பரவலை மாகாணசபைத் திட்டம் மூலம் அறிமுகப்படுத்தியதாக பெருமை அடித்துக் கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி, அண்மைக் காலமாகச் சமச்சீரற்ற அதிகாரப் பரவல் முறையே சிறந்தது எனக்கூறி வந்தது. வடக்கு —கிழக்கு மாகாணத்துக்கும் ஏனைய சில மாகாணங்களுக்கும் ஏனையவற்றை விட அதிக அதிகாரங்களை வழங்குவதே பொருத்தமானது என்று கூறி வந்தது. ஆனால் இப்போது அதனையும் கைவிட்டு மத்திய அரசைப் பலவீனப்படுத்தாமல் பலப்படுத்தும் முறையை வெளிப்படுத்தி உள்ளது. ஒப்பீட்டளவில் மத்திய அரசு கூடுதல் அதிகாரங்களை வைத்திருக்க வேண்டும் என்று வகுக்கிறது. இது ஒற்றையாட்சியைப் பலப்படுத்தி நீடிக்க வைக்கும் யோசனையே!

தன்னாட்சி உரிமைக்கு நிகரான அதிகாரப் பரவல் இல்லாமல், மத்தியைப் பலப்படுத்தும் யோசனை ஏற்புடையதல்ல; அது தமிழர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்காது. ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்று யோசனை இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தடுக்கவும் தள்ளிப் போடச் செய்யவும் மேற்கொள்ளப்படும் உத்தி அன்றி வேறல்ல.

### காலைவாரிவிடும் நோக்கம்

ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் ஐ. தே. கட்சியின் மாற்று யோசனை தமக்குத் கிடைத்தால் அது தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும் என்றும் —

அவ்வாறு குறித்த திகதியில் மாற்று யோசனை கிடைக்காவிடில் தனது தீர்வுப் பொதியை மக்களிடம் சமர்ப்பிக்கும் முடிவை — சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் முடிவை — அரசு மேற்கொள்ளும் என்றும் — அமைச்சர் பேராசியர் பீரிஸ் கூறியிருந்தார்.

இரண்டுக்கும் நடுவில் — பொதுவாக — முதற்கட்ட யோசனைகள் என்று சமர்ப்பித்து அமைச்சர் பீரிஸைதிக்கு முக்காட வைத்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி!

அமைச்சர் பீரிஸ் வெளிநாடு சென்றிருந்த சமயம், கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிந்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பதிலளித்த பொதுசனத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஐ. தே. கட்சியின் உத்தேச இரண்டாம் கட்ட யோசனைகளுக்காக அரசு காத்திருக்காது; அரசு தீர்க்கமான முடிவைஎடுக்கும் என்ற தொனியில் கூறினார்.

இது விவகாரத்தில் அரசின் முடிவு என்ன என்பது இப்பத்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை; அறிவிக்கப்படவில்லை.

### மகாசங்கமும் நிராகரிப்பு

ஐ. தே. கட்சி அரசின் காலை வாரிவிடும் சகல ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கும் அதே வேளை—

அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை நிராகரிப்பதாக பிரதான பௌத்த பீடங்கள் நான்கினதும் மகாநாயக்கர்கள் அறிவித்துள்ளனர். அஸ்கிரிய மகாநாயக்க தேரர் தலைமையில் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டின் பின்னர் அவர்கள் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

தீர்வுப்பொதி நிறைவேற்றப்பட்டால்நாட்டின் ஒற்றையாட்சிமுறை பாதிக்கப்பட்டுவிடும் என்பது நிராகரிப்புக்கான மூன்று பிரதான காரணங்களில் ஒன்று.

இந்த விடயத்தில் மகாசங்கமும், ஐக்கிய தேசியக்கட்சியும் ஒரே அணியில் நிற்கின்றன. ஒற்றையாட்சியில் கை வைத்தால் இந்தநாடு பிளவுடதற்குச் சமன் என்ற குருட்டு நம்பிக்கையிலிருந்து பௌத்தபீடங்கள் இன்னும் விடுபடவில்லை என்பதற்கு தகுந்த சான்று இதுவாகும்.

இத்தகைய சூழ்நிலையில் — இரு பிரதான வகுப்பினரின் எதிர்ப்பின் மத்தியில் — சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது உசிதமானதா; உகந்ததா; வெற்றி தருமா என்ற கேள்வி அரசை உறுத்திக் கொண்டிருப்பதாகத் தகவல்.

அதுவும் கண்டி தலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்குள்ளான சம்பவத்துக்குப் பின்னர், அரசுக்கான ஆதரவு சரிந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த ஓட்டை ஒடிசல்கள் காரணமாகவே தமது புனித ஸ்தலத்துக்கு, சரித்திரத்தில் இல்லாதவாறு இப்படி ஒரு பாதிப்பு உண்டாகியுள்ளது என்று பௌத்தர்கள் அரசின் மீது கோபம் கொண்டுள்ளார்கள். அந்தக் கோபத்தைத் தணிப்பதற்காக விடுதலைப் புலிகளைத் தடை செய்ததாக அரசு அறிவித்த போதிலும் அந்த உத்தி பெரிதாக எடுபடவில்லை.

அதனால் ஐக்கிய தேசியக் கட்சியை மீறிக்கொண்டு, தட்டி விட்டு, அரசின் தீர்வுப் பொதி குறித்தோ அல்லது நாடாளுமன்றத்தை தேசிய அரசமைப்புச் சபையாக மாற்றுவதற்குச் சம்மதம் கோரியோ சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை உடனடியாக நடத்தக் கூடிய வாய்ப்பில்லை என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

### அரசு சங்கடத்தில்

தீர்வுப் பொதியைநாடாளுமன்றத்தில் நிறைவேற்ற ஐ.தே.கட்சி ஒத்துழைப்பு நல்காவிடில் அதனை வழிக்குக் கொண்டு வருவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசு திட்டமிட்டது. மக்கள் சரி என்று சொல்லி விட்டால், மக்கள் ஆதர

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்குவதில்லை

## மு. சிவநேசன்

சஞ்சீவி குறுநாவல்

பாகம் 4

அவள் எடுத்த முடிவு — வேறு வழி இல்லாததால் — மேற்கொள்ளப்பட்டது. விடியலோடு யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டு விட்டாள். பாதை புரியாத இடம். ஆட்டோ ஒன்றை மறித்து பஸ் ஸ்ராண்டை வந்து அடைந்தாள்.

திருகோணமலை பஸ் தயாராகவே இருந்தது. அதில் ஏறி ஆறுதலாக அமர்ந்து கொண்டாள். மனசு கொஞ்சம் விடுபட்ட மாதிரி இருந்தது. இனி எப்படியும் ஊர் போய் சேர்ந்து விடலாம் என்ற எண்ணம் தெம்பைத் தந்தது. ஆனால் வீட்டை விட்டுப் புறப்பட்ட பின்பு நிறையச் சுமைகளை மனத்தே வாங்கிக் கொண்டது புரிந்தது.

இவ்வளவு காலமும் எவ்வளவு நிம்மதியாக இருந்தோம் என்பது இப்போதான் விளங்கியது. இனி நிம்மதியாக இருக்கவே இயலாது. அப்போதெல்லாம் இருந்த நிம்மதியை அனுபவிக்காமல் சிறு சிறு விடயங்களுக்கெல்லாம் மனதை அலட்டிக் கொண்டு துன்பப்பட்டது காலங்கடந்து புரிகிறது.

திருகோணமலையில் கப்பலுக்காக காத்திருக்கும் பயணிகளுடன் இணைந்து கொண்டாள். அங்கே செயலகத்தில் பணிபுரியும் ஒருவர் இவளது சிநேகிதியின் தந்தை. அவரை விசாரித்துப் பிடித்து 5 நாள்களுக்குள் கப்பலில் இடத்தைப் பிடித்துக் கொண்டாள். இல்லாவிட்டால் மாதக் கணக்கில் அங்கே நிற்க வேண்டி வந்திருக்கும்.

அவளிடம் அதிகம் பொருள்கள் இருக்கவில்லை. சோதனை முடிந்து கப்பலை நோக்கிச் செல்கையில் அவன் மறித்துக் கொண்டான். இவளின் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தபடி நின்றான். பெயர், வயது, ஊர் எல்லாம் விசாரித்தான். பார்வைகள் இவளை விழுங்கின. தனியாக வருகிறாள் என்பதை இவளிடமே கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டான்.


அவனது பேச்சில் ஒரு வெளிநாட்டுத்தனம் தென்பட்டது போல் இருந்தது. தொடர்ந்து பயணிகள் கப்பலில் ஏறிக் கொண்டிருந்தனர். இவனோ அடையாள அட்டையைத் தருவதாக இல்லை. இவள் கலங்கிபடி நெளிந்து கொண்டு நின்றாள்.

எல்லோரும் ஏறி முடிந்ததும் அவன் இவளது கைப்பையை வாங்கிக்கொண்டு நடந்தான். யார் இவன்? விளங்கவில்லை... அடையாள அட்டையும் பையையும் கொண்டு இவளை மேலே வரும்படி சைகை காட்டி விட்டு ஏணி வழி ஏறினான். இவள் ஏறாமல் பார்த்தபடி வாசலிலேயே நின்றாள்.

பயணிகள் வாசல் மூடப்படும் சமயம். மூடப்பட்டால் இவள் தனித்துவிடுவாள். அதற்கிடையில் ஒரு பயணிப் பெண் இவளை இழுத்துக்கொண்டு பயணிகள் பகுதிக்குள் வந்துவிட்டாள். ''இவங்கள் இப்படித்தான். அடையாள அட்டை இல்லாவிட்டால் போகிறது. நீ வா!'' என்று கூட்டிப் போய் தன்னருகே இருத்தி விட்டாள்.

அவன் அடிக்கடி இவள் இருக்கும் பகுதிக்குள் நுழைவான். அடையாள அட்டையைக் காட்டுவான். கண்ணடிப்பான். அவனின் தவிப்பு இவளுக்குப் புரிகிறது. குனிந்த தலை நிமிராமல் மேனி வியர்க்கப் பொழுதைப் போக்கினாள். இந்த விதி தினம்தினம் யார் யாருடன் விளையாடுகிறதோ என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தது...இப்படியெல்லாம் கேள்விப்பட்டது இல்லையே என யோசித்தாள்... பயணிகள் அனைவரும் உறங்கிப் போனார்கள். இவளையும் உறக்கம் தழுவிக்கொண்டது.

யாரோ தோளில் தட்டியது போல் இருந்தது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவன் நின்றுகொண்டிருந்தான். மேலே வரும்படி சைகை காட்டினான். இவள் அசையவில்லை.



அன்று அவனுக்கு யாரும் அகப்படவில்லைப் போலும்.

அடையாள அட்டையையும் பையையும் இவள் மீது சுழற்றி வீசிவிட்டுப் போய் விட்டான். வானம் விடியலைக் கோடிகாட்டியது... அவன் ஏமாற்றத்துடன்— விரக்தியுடன் — திரும்பியது தெரிகிறது. யார் அவன்? இக் கப்பலின் அதிகாரியாக இருக்கலாம்?...

இருபது வயதில் இவளுக்கே மார்புவலி வந்து விடும் நிலைமை. தாய்க்கு வந்ததில் தவறேது? வீடு வந்ததும் தாயிடம் சொன்னது பாதி. சொல்லாதது பாதி. அண்ணனின் நிலைமையில் பாதி. தனது கவலையில் பாதி.

இதற்கே பதறிப்போனாள் அம்மா. முழுவதும் தெரிந்தால்...

★ ★ ★

என்னிடம் சத்யன் பற்றி ஆயிரம் கற்பனைகள். அவன் எங்கள் குடும்பத்தின் நாளைய தலைவன் என்றல்லவோ இருந்தேன். சுபி வந்து சொன்னதும் கொஞ்சங்களை. என்றாலும் அவள் ஏதோ சிறுபிள்ளைத்தனமாகக் கதைக்கிறாள் என விட்டு விட்டேன். என் நம்பிக்கையை அதிகம் சிதறடிக்கவும் அவள் விரும்பவில்லைப் போலும்.

மாணிக்கத்தார் வந்து நடித்ததும் சுபியால் பொறுக்க முடியவில்லை. இருவருக்கும் வாக்குவாதம் வலுத்த போதுதான் எனக்கு நிலைமை விளங்கியது.

''கொழும்புக்குப்போனால் தம்பியோடை சேர்ந்து குடிச்சு கூத்தடிக்கிறது. இங்க வந்து இப்ப நடிக்கவாறார். இவரோடை வயசு என்ன? ஒரு தகப்பனிடை இடத்திலை இருந்து புத்திசொல்ல வேண்டிய ஆள். குடிக்கிறார் சேர்ந்து.''

இந்தக் 'குடி' என்ற விசயம் இப்படித்தான். வயது, உறவு, அந்தஸ்துஎல்லாவேறுபாடும் விட்டு புத்தி மங்கிச் செய்யிறவேலைதானே! இதுக்குப் பிறகு மாணிக்கத்தாரோடை என்ன வகையிலை முகங் குடுத்துக் கதைக்கிறது? என்ரை ரெண்டு பிள்ளையளையும் ரெண்டு விதமா கெடுக்க நிக்கிறார்.

இப்பிடி போன கிழமை கடுமையா தொடங்கின மன உளைச்சல் என்னை இப்பிடிக் கொண்டு வந்து விட்டிருக்கு. இப்ப நிலைமை மாணிக்கத்தாரின்ரை கால்லை விழுகிற மாதிரி. அவர்தான் வலிய வந்து வழிஞ்சு உதவியும் செய்வார். உபத்திரமும் கொடுப்பார்.

இந்தக் காலத்திலை ஒரு வரடை சுமையைத் தியாகமாகச் சுமக்க ஆருக்கு நேரம் வரும்? மனம் வரும்? மாணிக்கத்தாருக்கு காவலாக என்ரை தாய்மாமன் சுந்தரம் பிள்ளை வீட்டிலை இருப்பார். சுபி சமாளிச்சிடுவாள். மாணிக்கத்தார் வீட்டிலை அதிகம் மினக்கிட ஏலாது.

சுந்தரம் மாமாவுக்கு வயது எழுபதைத் தாண்டியாச்சு. அவராலை ஏதும் அதிகம் ஏலாது. வீட்டிலைகாவலுக்கு மட்டும் இருப்பர். அவரையும் சுபி போய் கெஞ்சிக் கூந்தாடி வீட்டை கூட்டிவாற நிலைமை. இப்பெல்லாம் இந்த வயசு போனவைக்கு கடும் 'டிமாண்ட்'! வீட்டுக் காவல், குமர்க்காவல், வாறபுது ஆக்களுக்கு எல்லாப் பாஷையிலும் மறுமொழி சொல்லத் தெரியவேணும். இப்பிடி கனக்க 'டியூட்டி!'

நான் சின்னப்பிள்ளையா

(X ஆம் பக்கம் பார்க்க)

# மஞ்சள் பந்து மகிமை!

மன அழுத்தம் நீங்க ஒரு 'மஞ்சள் பந்து' அமெரிக்காவில் உபயோகத்தில் இருக்கிறது. மிருதுவான அந்தப் பந்தை, கையில் வைத்து அழுத்திக் கொண்டிருந்தால், மன அழுத்தம் நீங்கிவிடும் என்று குறிப்பிடுகிறார்கள். இதற்குச் சில மூல காரணங்கள் உண்டு.

மனித உடலின் பல பகுதிகளில் 'அக்கு பஞ்சர்' மையங்கள் உள்ளன. அம்மையங்களுக்கு முறையாக அழுத்தம் கொடுப்பதன் மூலமாகவும், அப்பகுதிகளில் அதிர்வுகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும், அந்த மையங்களோடு தொடர்படைய உடலுறுப்புகளின் செயல்பாட்டைச் சீர் செய்ய இயலும். வெறுங்காலோடு பாதயாத்திரையாக, கரடு முரடான மலைகளைக் கடந்து சென்று ஐயப்பனை தரிசித்து வருகிறார்கள் பக்தர்கள். அவர்கள் அவ்விதம் நடந்து செல்லும் போது, உள்ளங்காலில் உள்ள 'அக்கு பஞ்சர்' மையங்கள் வெகுவாக அழுத்தப்பட்டு 'மசாஜ்' செய்யப்படுகின்றன. இதன் காரணமாக, அந்த மையங்களோடு சம்பந்தப்பட்ட அவயங்கள் தூண்டப்பட்டு செம்மைபடுத்தப்படுகின்றன. அதனால் சில உடல் உபாதைகள் நீக்கப்படுகின்றன.

வட இந்தியாவில் ஒருவர் தினந்தோறும் ஐந்நூறு முறை கை தட்டிக் கொண்டிருக்கிறார்; அப்படி அவர் செய்வதால் அவர் கண் பார்வை முன்னேற்றம் அடைகிறது என்ற செய்தி சில மாதங்களுக்கு முன்பு பத்திரிகை ஒன்றில் வெளியாகி இருந்தது.

ராஜஸ்தான் போன்ற இடங்களில் கோடைக் காலங்களில் மிகுந்த உஷ்ணமும், குளிர் காலத்தில் கடுமையான குளிரும் உண்டு. புழுதிக்காற்றும் அங்கு உண்டு அத்தகைய கடும் சீதோஷ்ணத்திலும் கூட அப்பகுதி மக்களின் பார்வை அதிகம் பாதிக்கப்படுவதில்லை. வயதானவர்களில் வெகு சிலரே கண்ணாடி அணிகிறார்கள். இதற்கு அவர்களின் [illegible] மானதொரு பழக்கம் காரணமாக இருக்கலாம்.

நாம் துணி துவைக்கும் பொழுது துணியை இரு கைகளாலும் எடுத்து, கீழ் நோக்கி அடித்துத் (கும் முதல்) துவைக்கிறோம். ஆனால் ராஜஸ்தானத்தில் பெரும்பாலோர் ஒவ்வொரு துணியையும் குவியலாகத் தரையில் வைத்து விட்டு, இருகைகளாலும் மாறி மாறி அடித்துத் துவைக்கிறார்கள். இதுவும் கை தட்டலை ஒத்ததே. அவ்விதம் செய்யும் போது உள்ளங்கைகளில் அதிர்வு ஏற்பட்டு பார்வை செம்மையடைகிறது. அவர்கள் முன்கோபிகளாக இருப்ப இல்லை. [illegible] அவர் மன அழுத்தத்திலிருந்து விடுபடுவது இதற்கு முக்கியக் காரணமாய் இருக்கலாம்.

மேலும் ஓர் உதாரணம்: மேளம் வாசிப்பவரை எடுத்துக் கொள்வோம். மேல் நாட்டு பாண்டு வாத்தியக்காரரானாலும்சரி, தென் இந்திய மத்தளக்காரரானாலும் சரி, வட இந்திய தபேலா வாத்தியகாரரானாலும் சரி, கண்ணாடி அணிபவர்கள் அரிது. அவர்கள் கைகள் மேளத்தைத் தட்டும்போது, ஏற்படும் அதிர்வுகள் சென்றடைவதால் பார்வை மட்டுமல்ல; மனமும் சாந்தமடைகிறது.

உரலில் மாவு இடித்தல், கிணற்றில் நீர் இறைத்து அன்றாடம் துணி துவைத்தல், ஆட்டுக் கல்லில் மாவு ஆட்டுதல் போன்ற வேலைகளைச் செய்து வந்த நம் வீட்டு மூத்த பெண்மணிகள் கடைசி காலம் வரையில், ஆண்களைவிட ஆரோக்கியமான பார்வை உடையவர்களாகவும், இக்கட்டான நேரங்களில்கூடபதற்றப்படாமல் அமைதியாக இருந்து சரியான முடிவுகளை எடுப்பவர்களாகவும் இருந்தனர் என்பதைநாம் இங்கு நினைவு கொள்ளவேண்டும். ஆகவே உள்ளங்கைகளுக்கு அதிர்வு தரக்கூடிய வேலைகளைச் செய்வது மிகவும் சிறந்தது.

இந்தியாவில்கூட, பாரிசவாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மென்மையான பந்து அல்லது 'ஸ்பாஞ்சை' கையில் கொடுத்து அழுத்திக் கொண்டு இருக்கும்படி டாக்டர்கள் கூறுகிறார்கள்.

கை, கால் செயலிழந்து போவதற்குப் பல காரணங்கள் உண்டு. தொடர்ந்துமன இறுக்கமும், மிகுந்த கவலையும் கூட பாரிச வாதத்தைத் தோற்றுவிக்கலாம். அத்தகையவர்கள் கையில்'ஸ்பாஞ்சை' வைத்து அழுத்திவிட்டுக் கொண்டு இருக்கும்போது, கை நரம்பு மற்றும் மூட்டு செயல்பாடு அதிகரிப்பதோடு மன அழுத்தமும் குறைகிறது.


எல்லா வேலைகளையும் செய்ய இயந்திரங்கள் வந்து விட்ட இன்றைய நிலையில் உடல் உறுப்புக்களுக்குப் போதிய அளவு பயிற்சி ஏற்பட வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஆகவேதான் மஞ்சள் பந்து சந்தைக்கு வந்து விட்டது! ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாகிலும் வெட்டவெளி விளையாட்டு (Outdoor games) விளையாடுவது உடலையும், மனதையும் சாந்தப்படுத்தும். 'ஸ்கிப்பிங்', 'பாட்மின்டன்', சைக்கிள் ஓடுதல், நீச்சல், கூடைப் பந்து, ஹொக்கி, பந்தெறிந்துபிடித்தல் போன்ற விளையாட்டுகள் கைகளுக்கு அழுத்தம் தரவல்லவை. மஞ்சள் பந்தை விட இவற்றுக்கு மகிமை அதிகம்! ★

— தீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இயலுமா?

1)




மேலே உள்ள படத்தில் எத்தனன கூட்டல் அடையாளங்கள் உள்ளன?

2)




இங்குள்ள புள்ளிகளுள் வட்டத்தின் மையப்புள்ளி எது? கண்டுபிடித்து குறிப்பிடுங்கள் பார்க்கலாம்.

3)



மேலேயுள்ள படத்தில் எத்தனை செவ்வகங்கள், எத்தனை சதுரங்கள் உள்ளன?


4)



இங்குள்ள நான்கு சேவல்களில் ஒன்று மட்டும் மற்றையவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. எப்படி அது மாறுபடுகின்றது?

(விடை XI ஆம் பக்கத்தில்)

## வியப்பான விலங்கு கங்காரு!




கங்காரு ஒரு வியப்பான விலங்கு. இது ஆஸ்திரேலிய நாட்டில் மட்டுமே காணப்படுகின்றது. இது பார்வைக்கு ஓநாய்போல் இருக்கும்.

கங்காருவின் முன்கால்கள் சிறியவை; இவை கைகள் போல அதற்குப் பயன்படுகின்றன. பின்கால்கள் நீளமானவை. பின்கால்களை முழங்கால் வரை தரையில் படியவைத்து உட்காரும். கங்காருவின் முன்கால்களில் ஐந்து விரல்களும், பின்கால்களில் மூன்று விரல்களும் உள்ளன. கங்காருவின் உடல் தலைப்பக்கம் சிறுத்தும், வயிற்றுப் பக்கம் பெருத்தும் இருக்கும்.

இதன் வால் நீளமானது. இது அடிப்பக்கம் பருத்தும், முனைப்பக்கம் சிறுத்தும் இருக்கும். கங்காரு விரைவாக ஓட அதன் வாலே பெரிதும் துணையாக உதவுகின்றது.

கங்காருவில் பெரியதும் சிறியதும் உண்டு. பெரிய கங்காரு, 9 மீற்றர் தூரம் தாவும்; 3 மீற்றர் உயரம் குதிக்கும். கங்காரு தன் வாலைத் தரையில் ஊன்றிக்கொண்டு நிமிர்ந்து நிற்கும்.

கங்காரு புல்லும் தழையும் தின்னும். இது மென்மையான தன்மையுடையது.




இது ஆண்டுக்கு ஒருமுறை குட்டி போடும். கங்காருக்குக் குட்டிகள் பிறக்கும்போது மிகச் சிறியனவாக ஐந்து சதமமீற்றர் நீளமே இருக்கும். பிற உறுப்புக்களும் தெளிவாகத் தெரியாது. மூச்சுவிடும் துளை மட்டுமே தெரியும். பார்வைக்கு இறைச்சித் துண்டு போலவே தோன்றும்.

கங்காரு நிலத்தில் வாழும் உயிரினம். இது குட்டி போட்டுப் பால் கொடுக்கும் கங்காருவின் குட்டிகள் தாய்வயிற்றில் அதற்கென்று உள்ள பையிலேயே வளரும். மயிர் முளைத்த பின்பே வெளியில் இறங்கி நடமாடும்.

தாயின் வயிற்றில் உள்ள பையில் கங்காருக்குட்டி அமர்ந்திருப்பதை மேல் மூலைப் படத்தில் காணலாம்.

## கண்டுபிடியுங்கள்!

I) கீழ்வரும் எட்டு வினாக்களுக்குமான விடைகள்கீழே உள்ள ஊரின் பெயரில் ஒளிந்துகொண்டிருக்கின்றன. கண்டுபிடிக்க உங்களால் முடிகின்றதா?

### கோண்டாவில்

1. வழிபாடு செய்யும் இடம்
2. மதுபானத் தயாரிப்பிற்கும், சுருட்டிற்கும் இது மிக மிகத் தேவையானது.
3. வேட்டையாடப் பயன்பட்ட ஆயுதம்.
4. இரவு வேளைகளில் நட்சத்திரங்களை இங்கு காணலாம்.
5. ஐஸ்கிறீம் சுவைப்பதற்கு இதுவும் ஒருவகையில் துணையாகிறது.
6. உயர்ச்சி பெறுவதற்கு இந்த முயற்சி அவசியம்.
7. வயது முதிர்ந்தவர்களுக்கு மிகவும் தேவையான ஒன்று.
8. மணி ஒலிப்பது இப்படி.

நா. செ. செல்வம்

II) கீழ்வரும் 7 வினாக்களுக்குமான விடைகள் இச்சொல்லில் மறைந்துள்ளன.

### தொலைக்காட்சிப் பெட்டி

1. படிப்பது இந்நேரத்தில்.
2. பாவம் தீர்க்கும் புண்ணியஸ்தலம்.
3. பொருள்களை வைப்பது இங்கே.
4. தண்ணீர் சேமிப்பது இங்கே.
5. தீபம் இதிலும் ஏற்றலாம்.
6. இதைப் பதுமை என்றும் சொல்வர்:
7. பிரசித்தி பெற்ற மென்குடிபானம்.

யோகராஜா தினேஸ்குமார்.
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி)

(XI ஆம் பக்கம் பார்க்க)

## வினோத விடைகள்

மிருக ராஜன் தலையில் ரோமம்
　அடர்ந்திருப்பதேன்? — காட்டில்
வெட்டி விட எந்த ஆளும்
　இல்லை யாதலால்!

ஒட்டைச் சிவிங்கி கழுத்து மிகவும்
　நெட்டையானதேன்? — அது
எட்டி எட்டி இலையும் தழையும்
　பறித்துத் தின்றதால்!

வரிக் குதிரையின் உடம்பு முழுதும்
　கோடிருப்பதேன்? — யாரோ
வலிக்க வலிக்க சவுக்கினாலே
　அடித்த காயம்தான்!

அண்டங் காக்கை அதிகமாகக்
　கறுத்துப் போனதேன்? — அது
அடுப்புக் கரியைத் திருட்டுத்தனமாய்
　எடுத்துத் தின்றதால்.

- வி. உதேஸ்,
நாவற்குழி.

## சின்னச் சின்னக் குருவி

சின்னச் சின்னக் குருவி
சிங்காரக் குருவி
சிறகடித்துப் பறக்கும்
சிவப்பு வண்ணக் குருவி.

வண்ண மலர் தன்னில்
வந்த மர்ந்து தேன் குடிக்க
வட்டமாக வானில்
வளைந்து வளைந்து பறக்குதே!

-இ. சே. வைகர்த்தனன்,
(ஆண்டு-4,
தந்தை செல்வா. தொ. நி. பள்ளி.)

## சிந்தனை செய்திடு!

அறிவு பெற்றிடு தம்பி — தினம்
　அன்பு செலுத்திடு தம்பி
உறவு வைத்திடு தம்பி — நீ
　உயர்ந்து வாழ்ந்திடு தம்பி

கல்வி கற்றிடு தம்பி — நீ
　கடமை ஆற்றிடு — தம்பி
புலமை ஏற்றிடு தம்பி — நீ
　புதுமை விளைத்திடு தம்பி


மடமை அகற்றிடு தம்பி — மதி
　மருளைப் போக்கிடு தம்பி
பீடு சேர்த்திடு தம்பி — மனப்
　பொறுமை அடைந்திடு தம்பி

உள்ளம் தெளிந்திடு தம்பி — தினம்
　உண்மை உரைத்திடு — தம்பி
கள்ளம் கலைந்திடு தம்பி — நீ
　கருணை புரிந்திடு தம்பி

சிந்தனை செய்திடு தம்பி — நீ
　சிறப்பாய்த் திகழ்ந்திடு தம்பி
நிந்தனை நீக்கிடு தம்பி — நீ
　நீதியில் திளைத்திடு தம்பி

பொ. றம்யா
(ஆண்டு — 6, வயாவிளான் ம.ம.வி.)

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே......! இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாகஎப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவைவேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது முப்பத்தியைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையோடு நாங்கள்

சஞ்சீவி சிறுகதை

மட்டக்களப்பு மாவட்டத்திலேயுள்ள ஒரு பின்தங்கிய கிராமம் மரப்பாலம். பதுளை வீதியில் செங்கலடிச் சந்தையில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது.

பிள்ளையார் அரசமரத்தின் கீழ் அல்லது வேப்பமரத்தின் கீழ் இருப்பதைப் பார்த்திருக்கிறேன். இங்கே புளியமரத்தின் கீழ் பிள்ளையாருக்குக் கல் நட்டு வெயில் படாமல் கொட்டிலும் போட்டிருக்கிறார்கள் அந்த ஊர் மக்கள். இந்தப் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்தில் பஸ் தரிப்பு நிலையம் இருப்பதால் அங்கே தேநீர்க் கடையும் உண்டு.

நான் யாழ்ப்பாணத்தில் இருந்து செங்கலடியிலுள்ள ஓர் அலுவலகத்துக்கு மாற்றலாகி வந்து ஒரு வருடந்தான் ஆகிறது. எனது அலுவலகத்தில் சிற்றூழியனாக வேலை பார்க்கும் சோமுவைச்சந்திப்பதற்காக பஸ்ஸில் வந்திறங்கிய போது நான் கண்ட காட்சிகள் தாம் இவை.

மற்றும்படி றோட்டின் இரு மருங்கும் வயல் வெளிதான் படர்ந்து கிடந்தது. தனது வீடு இருக்கின்ற குறிப்பை சோமு சொல்லி இருந்தான். முன் பின் வந்தறியாத அந்தக் கிராமத்தில் சோமுவின் வீட்டைத் தேடிப் பிடிக்க வேண்டும். பஸ்ஸில் வேறு கிழங்காக அடுக்கி அவித்து தூக்கிப்போட்டிருக்கிறார்கள். எனது உடல் இயந்திரம் எரிபொருளுக்காக அடம் பிடித்தது, ஒரு தேநீரை ஊற்றி அதன்மேல் சிகரட் ஒன்றைப் பற்றவைத்தால் அது மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கும் என்பது எனக்குத் தெரியும்.

எனது மூளையின் கட்டளைக்காக காத்திராமல் கால்கள் தேநீர்க் கடைக்கு நடந்தன.

முதலாளி, சர்வர், ரீமேக்கர் என்ற முத்தொழில்களையும் புரியும் மூர்த்தி என்னை வரவேற்றார்.

''...வாங்கய்யா, சாப்பிட ஏதாவது தரட்டுங்களா?...''

வந்த கிராக்கியை மடக்கிப் போடும் வியாபாரவார்த்தைகளால்பன்னீர் தெளித்தார்.

''...ஒரு பிளேன்ரீ மட்டும் போட்டப்பா போதும்...''

எனது பதில் அவனை ஏமாற்றமடைய வைத்திருக்கும் என நினைத்த நான் தான் ஏமாற்றமடைந்தேன். இப்படி நான் சொல்வேன் என எதிர்பார்த்தவன் போல சாயக்கோப்பையுள் பொயிலரில் இருந்த கொதிநீரை விட்டான். ஒரே நிமித்தில் தேநீர் கோப்பை என் முன்னால் வந்து குந்தியது.

''...ஐயா ஊருக்குப் புதுசு தானுங்களே? யாழ்ப்பாணத்து ஐயா போலை இருக்கு. யாரைத் தேடிவண்டு வந்திருக்காக?...''

மாவட்டத்துக்கு வெளியே வாழ்கின்ற யாழ்ப்பாணத்தவரின் பொதுவான குறியீடு பிளேன்ரீயுடன் ஒரு வடை வாங்காத கஞ்சத்தனம் என்பது அந்தப்பக்கத்தில் வாழ்பவர்களுக்குத் தெரியும்.

இதை வைத்துத்தான் அவன் தனது புத்திசாலித்தனத்தைக் காட்டியிருக்கிறான். இதனைச் சமாளிப்பதற்காக ஒரு சிகரட்டை வாங்கிப் பற்ற வைத்துக்கொண்டேன்.

எங்கள் உரையாடல் தொடர்ந்தது. சோமுவைப் பற்றி விசாரித்த போது அவன் புருவங்களைச் சுருக்கி விரித்தான். ஏதாவது தப்பாகக் 'கேட்டு விட்டோமா என்று யோசித்தேன். நான் யோசிப்பதைப் பார்த்து அவன் சொல்லத் தொடங்கினான்.

அவன் அப்படி மாறிப் போனதற்கான காரணத்தை மெதுவாகக் கேட்டேன்

''...முட்டாள்பய புள்ளை. ஆபிசிலை தோட்டக்காரனாய் இருந்தவனை ஏதோ பெரிசாத் தொரை உத்தியோகம் பண்ணுறான்று சொல்லி ஒரு பொண்ணைக் கட்டி வெச்சாங்க...''

அவன் கையை மேலே உயர்த்தித் தேத்தண்ணியை நீளமாக ஊத்துவது போல கதையையும் நீளமாக இழுத்தான். கடைக்கு வேறு ஆட்களும் வரவில்லை.

சோமு போன மாதம் தான் மாப்பிள்ளையாகி இருந்தான். நான் யாழ்ப்பாணம் போயிருந்ததால், அவனது கல்யாணத்திற்குப் போகவில்லை. ஆனால் கந்தோரில் அவனைப் பற்றிச் சில கிசுகிசுக்கள் பேசப்பட்டு வந்தன.

சோமு வெகுளியாக இருப்பதால் இப்படிக் கிண்டல் செய்கிறார்கள் என நினைத்தேன்.

சோமுவின் மனைவி பதுளையைச் சேர்ந்தவள். உயர்தரம் வரை படித்த பெண். அவள் பெயர் சரோஜா. சரோஜாவுக்கு ஊரிலே ஒரு காதலன் இருந்தான். அவன் வேலை வெட்டி இல்லாமல் திரிபவன். உடலைக் கயிறாகத் திரித்து உழைப்பவர்கள் ஒரு ரகம். உடல் முறுக்கைக் காட்டி கப்பம் வாங்கிப் பிழைப்பவர்கள் இன்னொரு ரகம். இந்த இரண்டாவது வர்க்கத்தைச் சேர்ந்தவன் தான் காளி.

சரோஜா பள்ளிக்கூடத்திற்கு போய் வரும் போது காளியின் பார்வை அவள் மீது விழுந்தது. காளிக்கு மூன்று நான்கு சில்லறை அடியாட்கள் இருந்தார்கள். தேத்தண்ணிக்கடை வாசலில் நின்று கொண்டு சேட் காலரைத் தூக்கி விட்டபடி காதல் வார்த்தைகளை வீசுவான். எல்லோரும் பார்த்துப் பயந்து ஒதுங்குகின்ற காண்டாமிருகத்தைத் தன் காலடியில் பணிய வைக்கிறேன் பார் என்று சரோஜா தனதுதோழிகளிடம் வீராப்பாகப் பேசுவாள்.

காளி சரோஜா உறவின் ஆரம்பத்திற்கு இதுவே காரணமாய் இருந்தது.

பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தவுடன் சரோஜா வீட்டில் நின்று விட்டாள். ரியூசன்களுக்கு அனுப்பும் வசதி வீட்டில் இல்லை. அதில் அவளுக்கு ஆர்வமும் இல்லை. ஆனால் காளி அவளிடம் ரியூசன் படிக்க அடிக்கடி வந்து கொண்டிருந்தான். ஆனாப்பட்ட காளியே வேலிக்கு உள்ளே கிடைக்கும் அவளது தரிசனத்தால் அசடு போல் உடலைக் கோணல் மாணலாக வளைத்து நெளிப்பது சரோஜாவுக்கு ரசிக்கும் படியாகவே இருந்தது.

சரோஜாவைச் சுற்றிச் சுற்றி காளி வண்டு பறப்பதை ஊர்பேசத் தொடங்கியது. இந்தக் காட்டுப்பூனையின் கையில் தங்கள் பச்சைக் கிளியைக் கொடுக்க எந்தப் பெற்றோர்கள் விரும்புவார்கள்.

சரோஜாவின் பெற்றோர் விரைந்து செயற்பட்டார்கள். காதோடு காது வைத்தாற் போல காரியங்கள் நடந்தன. சரோஜாவின் சம்மதம் ஒன்று தான் பாக்கியாக இருந்தது.

அவள் கடும் எதிர்ப்புக் காட்டுவாள் என்று பெற்றோர் எதிர்பார்த்தனர். ஆனால் சரோஜா சாதாரணமாக தலையை அசைத்து விட்டது அவர்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர்கள் அதைப் பற்றி மூச்சுவிடவில்லை.

காளி வாழ்க்கைத் துணைக்குச் சரியானவன் அல்லன் என்பதும் சரோஜாவுக்குத் தெரியும். கல்யாணம் என்கின்ற சிறையில் அகப்பட்டுக் கொள்ள காளியும் தயாராக இல்லை. கல்யாணத்தின் பின்னர் அவளோடு தொடர்பு கொள்வதே அவனது திட்டமாக இருந்தது. இதனால் எந்த இடைஞ்சலுமின்றி சரோஜா சோமு திருமணம் ஜாம் ஜாம் என்று நடந்தேறியது.

சோமுவோடு குடித்தனம் பண்ணுவதற்காக சரோஜா மரப்பாலம் வந்தாள். மரப்பாலம் மட்டக்களப்புச் சீதோஷ்ண நிலையை உடையது என்பதைவிட வாழும் சூழலில் பெரிய மாற்றமேதுமில்லை. அடுத்தடுத்து வந்த இன வன்முறைகளுக்கு அஞ்சி இடம் பெயர்ந்த மலையக மக்கள்தான் இங்கும் அதிகமாக வாழ்கிறார்கள். எல்லாப் பெண்களையும் போல எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு தனது புதுக் குடித்தனத்தைச் சரோஜா ஆரம்பித்தாள்.

சோமு அசடன் என்பதை அறிந்து கொள்ள அவளுக்கு அதிக நாள்கள் பிடிக்கவில்லை. அவன் ஆபீசில் வெறும் தோட்டக்காரன் என்பது தெரிய வந்தபோது அவளது இதயம் சுக்கல் சுக்கலாக நொறுங்கியே விட்டது. தான் காளியை ஏமாற்ற நினைத்து இந்தப் பித்துக்குளியிடம் ஏமாந்து போனோமே என்று தனக்குள் குமுறினாள்.

அவனது வீட்டைத் தேடிப் பிடித்து ஒருநாள் காளி வந்து நின்றபோது அவளது ஏமாற்றம் எக்ஸ்பெடிசனாக (ஒரு துணிவான முயற்சி) உருவெடுத்தது.

(XI ஆம் பக்கம் பார்க்க)

## சு. சிவராஜா

---

# சந்தை

குறியீட்டுக் கதை

நான் வீடு திரும்பிய போது அம்மாவும் அப்பாவும் முன்னறையில் இருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். என்னைக்கண்டதும் அவர்கள் பேச்சு நின்றது. நான் ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டு அவர்களைக் கடந்து செல்ல முயன்றேன்.

அம்மா எழுந்து குறுக்கே வந்து என்னைத் தடுத்தாள். அவள் கண்களில் சோகமும் அதிர்ச்சியும் கலந்திருப்பதை நான் திடீரெனக் கண்டு கொண்டேன். அப்போதுதான் அறையில் நிலவிய இறுக்கமான சூழ்நிலை எனக்குப் புரிந்தது.

''வருகிற திங்கட்கிழமைக்கு அடுத்த திங்கட்கிழமை நீ சந்தைக்குப் போய் காய்கறி வாங்கி வரவேண்டும்''

அம்மா உலர்ந்த குரலில் சொன்னாள். முதலில் சாதாரணமாய், அர்த்தமற்றவையாய், அந்த சொற்கள் கிரிக்கற் நினைவுகளில் மறைந்து பின்னர் இடியாய் என்னுள் இறங்கியது.

''...என்ன சந்தைக்கா?''

என்னையறியாமல் குரல் கிறீச்சிட்டது.

நான் கதிரையின் முதுகைப் பற்றிக்கொண்டேன்.

''...கடிதம் வந்திருக்கிறது''

அப்பா நீண்ட மண்ணிற உறையை உயர்த்திக் காண்பித்தார்.

''...நீ விளையாடித்திரி கொஞ்சம் கூட யோசனையில்லாமல்'' அப்பாவின் குரலில் விரக்தியை உணர்ந்தேன்.

''...இன்னும் ஒரு மாதத்துக்குப் பின்போடேலாதோ...''

நான் கெஞ்சும் குரலில் கேட்டேன்.

''...இந்த முறைமுடியாது. திணைக்களம் தெளிவாய் அறிவுறுத்தியிருக்கிறது நீ ஆயத்தப்படுத்த வேண்டும்''

அவர் குரலை இறுக்கி கண்டிப்பாய்ச் சொன்னார்.

நான் தளர்ந்து போனவனாய் அவர்களுடைய கவலைப் பார்வைகள் தொடர அறைக்குள் புகுந்துகொண்டேன்.

இனி என்ன செய்வது? சந்தையைப் பற்றி என்ன தெரியும் என நினைத்துப்பார்த்தேன். ஒன்றுமே குறிப்பாய் நினைவுக்கு வரவில்லை. தெளிவில்லாமல் மனம் வேறு விடயங்களில் அழுந்தி இவ்வளவு நாளும் கடந்திருக்கிறது. இன்னும்கொஞ்ச காலம் இனிக் கடுமையாய் உழைக்க வேண்டும். அந்தக் கணத்திலிருந்து சந்தையும் காய்கறியும் என் மனதை அரிக்கத் தொடங்கியது.

சந்தையைப்பற்றி எங்கே அறியலாம். நான் நகரசபை நூல் நிலையத்துக்குச் செல்லத் தீர்மானித்தேன்.

நூல் நிலையத்துக்குச் செல்லும் வழியில் ஜெயத்தைச் சந்தித்தேன். ஜெயத்துக்கும் கடிதம் வந்திருந்தது. அவனும் கவலையோடு காணப்பட்டான். அவனும் சந்தையைப் பற்றிய விவரங்கள் தேடுவதற்காக நூலகத்துக்கு என்னோடு சேர்ந்து கொண்டான்.

இருவரும் நூல்நிலையத்தின் புத்தக அடுக்குகளுக்குள் 'சந்தையைத்' தேடினோம். கலைக்களஞ்சியம் என்ற தடித்த புத்தகத்தை ஜெயம் தூக்கி வந்து மேசையில் போட்டான். நானும் சிலபுத்தகங்களைப் பொறுக்கி எடுத்தேன். மேசையில் பரவிவிட்டு எங்கள் தேடுதலைத் தொடங்கினோம். கலைக்களஞ்சியம் சந்தை என்றால் என்னஎன்று விவரித்திருந்தது நாட்சந்தை, மாட்டுச்சந்தை, இரவுச்சந்தை, உலகச் சந்தை, பங்குச் சந்தை இப்படிப் பல வகையான சந்தை விவரங்கள் கிடைத்தன. எதைக் குறிப்பெடுப்பது எதை விடுவது?

முதலில் சந்தையை வரைவிலக்கணம் செய்ய வேண்டுமென்று ஜெயம் சொன்னான். சந்தை எனப்படுவது மக்கள் கூடுவது, பொருள்களை விற்று வாங்குவது இப்படிப் பல தேறின. எல்லாம் நீண்டு கொண்டு போனது. எல்லாமே எங்களுக்கு மிகவும் குழப்பமாயிருந்தது. [illegible]மாகக் கிடைத்த விவரங்களைக் குறித்துக் கொண்டேன். மதியம் வரைக்கும் நூலகத்தில் பொழுது கழிந்தது.

எடுத்துக்கொண்ட குறிப்புக்களுடன் வெளியில் வந்த போது நாங்கள் மிகவும் சோர்ந்து போயிருந்தோம். சந்தை என்பது மிகவும் பயங்கரமான புதிர் போல இருந்தது. மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாது நூலக வாசலில் நின்று கொண்டிருந்தோம்.

''...தம்பிகள் சந்தைக்குப் போகப்போகிறீர்கள் போல இருக்கிறது''

நூலகத்திலிருந்து வெளியே வந்தவர் சிரித்தபடியே எங்களைக் கேட்டார். நூலகத்தில் ஒரு மூலையில் அவர் படித்துக் கொண்டிருந்தவர் அடிக்கடி எங்களைப் பாரத்துக் கொண்டிருந்தார். நான் அவதானித்திருந்தேன்.

நாங்கள் எங்கள் பிரச்சினையை அவருக்குச் சொன்னோம்.

''... நீங்கள் பத்திரிகை படிப்பதில்லையா திரு. 'வரா'வை உங்களுக்குத் தெரியாதா?''

கேட்டுவிட்டு அவர் திரு. வராவைப்பற்றிய பல விவரங்களைத் தந்தார். அவர் திரு. வரா சந்தையைப்பற்றி நன்கு தெரிந்தவர் என்றும் அதில் பல பட்டங்கள் பெற்றவர் என்றும் கூறினார். வராவின் வீட்டுக் குறிப்பைத் தந்து அவரைச் சந்திக்கும்படி கூறினார்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு நாங்கள் திரு. வராவைச் சந்திக்க கிளம்பினோம். சில குச்சொழுங்கைகளுக்கூடாகச் சென்று பிரதான வீதியில் இருந்த அவருடைய வீட்டை அடைந்தோம்.

வீட்டின் ஒரு பகுதியில் பெரிய கொட்டில் போடப்பட்டு அதற்குள் நிறைய வாங்குகள் போடப்பட்டிருந்தன. திரு. 'வரா' அப்பொழுதுதான் சாப்பிட்டு முடித்தவர் கையைத் துடைத்த படியே வெளியில் வந்தார். அவருக்கு நாங்கள் சொல்ல முன்பே விஷயம் விளங்கி விட்டது.

அங்கு போடப்பட்டிருந்த வாங்கு ஒன்றில் நாங்கள் அமர்ந்து உரையாடினோம். சந்தை பற்றிய சிறு அறிமுகம் ஒன்றை அவர் அளித்தார். பேச்சுவாக்கில் ஜப்பானிய சந்தை அமைப்பைப் பற்றியும், ஆபிரிக்க பழங்குடிகளின் சந்தை முறை பற்றியும், குறிப்பிட்டார். அது எங்களுக்கு ஆச்சரியமூட்டியது.

## அ.கிருஷ்ணேந்திரன்

காய்கறி பற்றிய விவரங்களை, தாவரங்கள் பற்றி அறிந்த ஒருவரிடமும் பணங்கள், நிறுவைகள் பற்றி வேறு ஒருவரிடமும் அறிந்து கொள்ள வேண்டி வரும் என்றும் அவர் கூறினார். அதற்கு தான் ஏற்பாடு செய்து தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

நாங்கள் புறப்படும் போது தினமும் அங்கு செல்வதாக தீர்மானித்திருந்தோம். அடுத்த நாளிலிருந்து எல்லாவற்றையும் தொடங்கலாம் என்றும் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்றும் திரு. வரா உற்சாக மூட்டி அனுப்பினார்.

நான் இந்த விவரங்களை எனது தந்தையாருக்கு அன்று இரவு தெரிவித்தேன். அவர் மிகுந்த அக்கறையுடன் கேட்டுக் கொண்டார். செலவைப் பற்றி யோசிக்க வேண்டாம் என்று அவர்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் இருக்கின்றாரா?

''கடவுள் என்பது தத்துவம் மட்டுமா? கடவுள் என்பவர் உருவ அமைப்புக் கொண்டவரா? உருவம் இல்லாதவர் என்றால், ஏன் உருவம் அமைத்து வழிபட வேண்டும்?'' இது இன்று பலரும் கேட்கும் கேள்வி.

விஞ்ஞானம் உண்மையை ஆராய விரும்புகிறது. மதம் கடவுளை உண்மையின் வடிவம் என்றே கூறுகிறது.

சத்தியம், ஞானம், அகண்ட சொரூபம் ('சத்யம் ஞானம் அனந்தம்பிரம்மா') என்று இந்து மதம் கடவுளை வர்ணிக்கிறது.

விஞ்ஞான ரீதியாக எதையும் கண்டு செள்ள நான்கு வழிகள் உண்டு. அவை கேட்டு அறிவது, சோதித்துப் பார்ப்பது, கண்டு அறிவது, ஊகித்து உணர்வது ஆகியவை.

மெய்ஞ்ஞான வழியில் கடவுளைக் காண்பவர்களுக்கும் இதே போல நான்கு வழிகளை நமது மதம் சொல்லுகிறது. தனக்குள்ளே விசாரணை (கோ – அகம்), சோதனைமுறை (சாதனா), வளர்ந்து அறிவது (அநுபவம்), உணர்ந்து தெளிதல் (சாட்சாத்காரம்) — இப்படி நான்கு வழிகளை அது படிப்படியாகக் காட்டுகிறது.

பூஜ்யம் என்ற எண்ணை உபயோகத்துக்குக் கொண்டு வந்த நாடு இந்தியாதான். 'பூஜ்யம் என்ற எண்ணால் என்ன பயன்?' என்று கேட்கலாம். உண்மைதான். அதை வைத்து எதையும் செய்ய முடியாது. ஆனால், அதற்கு மதிப்பு கொடுக்கத்தொடங்கி விட்டால் ஒன்று பத்தாகும்; பத்து, லட்சமாகும்; லட்சம் கோடானுகோடியாகும்! இறை உணர்வு என்பதும் இப்படிப்பட்டதுதான். அதைத் தேடப்போனால் இல்லாததுபோலத் தோன்றும். கண்டு உணர்ந்து விட்டால் அது நம்முடைய மதிப்பைப் பலமடங்காக உயர்த்தி விடும். இன்று விஞ்ஞானம் டரவியுள்ள வான்கணிதம், இலத்திரனியல், அணுசக்தி அளவு ஆகியவை பலவற்றிலும் பின்புலமாக இருப்பது பூஜ்யம்தான். வான் வெளியாய் நிறைந்து, மின் இயலாய் இயங்கி, அணுவிலும் சக்தியை உணர்த்து பவனையும் நாம் கடவுள் என்றே கூறி வணங்குகிறோம்.

எவ்வளவு ஆராய்ச்சி செய்தாலும், கண்டுபிடிக்க முடியாத ஒன்றை நாடியே விஞ்ஞானம் செல்கிறது. பிறப்பின் இரகசியத்தை நாடி இன்று உயிரணுக்களின் சோதனை நடக்கிறது. (டி. என். ஏ. என்னும் மரபணுக்களில் நடக்கும் சோதனைகள்) ஆனால் அது மனித குலத்தின் உணர்ச்சிகளைப் பகுப்படுத்த இயலவில்லை. ஒரு தந்தையின் மகனுக்கு உடல் அளவில் உள்ள அமைப்பு ஒற்றுமைகளை அது ஆராய்ந்து சொல்ல முற்படுகிறது. ஆனால், அவர்களிடையே உள்ள உணர்ச்சி ஒற்றுமைகளுக்கு அது வடிவம் கொடுக்க முடிவதில்லை. இத்தகைய உருவமைக்க முடியாத, உணர்ச்சியின் எல்லையே கடவுளை உணரும் பரமானந்த அநுபவமாகும். தன்னுடைய கவலைகளையும், வேதனைகளையும், தீர்த்துக் கொள்ள வழி கிடைக்காத பாமர மக்கள் அதனால் தான் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொள்ள முற்படுகிறார்கள். பயம், கவலை, குழப்பம் ஆகிய உணர்ச்சிகளின் எல்லையாக. அவற்றைக் கடந்து நிற்பது கடவுள் என்ற நினைப்பின் உணர்வே ஆகும். அதனால்தான் வால்டேர், ''கடவுள் இல்லை என்று சொல்பவர்கள், அவரை எப்படியாவது கண்டு பிடித்தே ஆகவேண்டும்; அதுதான் மனித குலத்துக்கு விமோசனமாக அமைய முடியும்!'' என்று கூறுகிறார்.

''கடவுளை வெளியே தேட வேண்டியதில்லை. அவர் உனக்குள்ளேயே இருக்கிறார்'' என்றும்—

''அவனன்றி ஓர் அணுவும் அசையாது; உன்னை இயக்குபவன் அவனே'' என்றும் —நமது தத்துவங்கள் கூறுகின்றன.

இதை ஓர் உடலின் அமைப்பில் பொருத்திப் பார்ப்போம். நமது உடலில் கோடிக்கணக்கான அணுக்கள் இருக்கின்றன, அவற்றில் ஒரு சில தமது கதியில் சிறிது மாறினாலும், உடல் நலம் கெட்டுவிடுகிறது. மூளையின் இயக்கமும் மாறி விடுகிறது. மருத்துவக் கண்டுபிடிப்புகள் முன்னேறியுள்ள இன்றைய நிலையிலும், உயிரணுப் பெருக்கத்தால் விளையும் புற்றுநோய்க்கு மருந்து இல்லை. அதன் அழிவு தொடங்கிவிட்டால் மீட்க மருந்து இல்லை. ஆக நமது உடல் என்பது வெறும் எலும்பும், சதையும், இரத்தமும் மட்டும் அல்ல—அதன் இயக்கம் என்பது இன்னொரு சக்தி என்பதையும், அதை நாம் இன்னும் முழுமையாகக் கண்டுணரவில்லை என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

உயிருள்ள உடல் உணருகிறது; வளருகிறது; இயங்குகிறது. அதே உடலில் உயிர் பிரிந்தபின் உணர்ச்சி இல்லை; அது வாடிப்போகிறது; அதன் இயக்கம் மறைந்து விடுகிறது. உடல் என்பது உடற் கூற்றின் பாகுபாடுகளுக்கு உட்பட்ட வெவ்வேறுஉறுப்புகளும் அவற்றின் செயல்களும்தான் என்றால், இந்த உணர்ச்சி, வளர்ச்சி, இயக்கம் ஆகியவை ஏன் அந்த உடலில் இப்போது இல்லை? இவற்றுக்கு மூலாதாரமான சக்தி எது? அதற்கு மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் விளக்கம் தர இயலாது. ஏனென்றால் அது அளந்தறிய முடியாதது; உருவமைத்து விளக்கிச் சொல்ல இயலாதது. அதையே மெய்ஞ்ஞானம். ஆத்மா என்று வருணிக்கிறது. ஆத்மாவைக் கடவுளின் பிம்பம் என்றும் கூறுகிறது. அதனால்தான் கடவுளுக்கும் நம்மால் விஞ்ஞான விளக்கம் தர முடிவதில்லை; உருவமைத்துக் காட்ட முடிவதில்லை.

★ ★ ★

வெகு நாள்களாகச் சந்திக்காத ஒருவரைப்பற்றி நாம் நினைத்துக் கொள்கிறோம். அன்றே அவர் நம் கண்முன் வந்து விடுகிறார். இந்தச் சந்திப்பு எப்படி நேரிடுகிறது? நமக்கு மிக நெருங்கிய ஒருவருக்கு ஆபத்து உண்டாகிறது. அதைப் பற்றி நமக்குத் தெரியாது. ஆயினும் நமக்கு அந்தச் சமயத்தில் மனத்தில் ஒரு கலக்கமும், பயமும் தோன்றுகின்றன. நாம் அதற்கு முன் பார்த்தே இராத ஓர் இடத்துக்குச் செல்லுகிறோம்; அங்கே உள்ள ஒவ்வொரு பொருளும் நமக்குப் பழக்கமானது போலத் தோன்றுகிறது. அங்கே ஏற்கனவே வந்து சென்ற உணர்வும் வருகிறது. அங்கே உள்ள சிலரை அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகிறது. இதற்கு என்ன பொருள்? இந்தப் பல்வேறு உணர்வுகளை எப்படி விளக்குவது? இ. எஸ். பி. (Extra- sensory perception) என்று இதற்குப் பெயர் கொடுக்கலாம். ஆனால் விளக்கம் சொல்ல முடியாது.

நமது இந்துமதத்தின் தத்துவங்கள் இதற்கு விளக்கம் தருகின்றன. வாழ்க்கை என்பது இந்த உடலைப் பற்றிய தொடர்பு மட்டும் அல்ல. இதற்கு அப்பால் வியாபித்து நிற்கும் உணர்வுகள் உண்டு. உயிர் நீத்த பிறகும் அவை தொடர்ந்து இருக்கக் கூடியவை. அடுத்த பிறவியிலும் அது சம்பந்தம் கொள்ளக் கூடியது. இந்தப் பிறவியிலேயே அது சூசகமாகப் பிறருடன் நம்மை இணைக்கக் கூடியது. நம்முடைய ஆசைகள், உணர்ச்சிகள்,

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

இவை யாவும் இந்த உடலைப் பற்றியது மட்டும் அல்ல. பிறவியின் எல்லையைக் கடந்து செல்லக்கூடிய வாசனைகள் அவை. இப்படி இந்த மாய உணர்வுக்கு ஒரு விளக்கம் தருவது இந்து மதம் மட்டும்தான். மற்ற மதங்களில் மறுபிறவி என்ற தத்துவத்துக்கும்கூட அடிப்படையே கிடையாது!

இன்று விஞ்ஞானத்தின் முன்னேற்றத்துக்கு மிக அவசியமான அடிப்படையாக அமைந்திருப்பது கம்பியூட்டர் என்ற கருவி. அது என்ன? எதையும் அது சாதிக்க முடியுமா? முடியும். எந்த சிந்தனையையும் அது பாகுபடுத்த முடியுமா? முடியும். எவ்வளவு சிக்கலான கேள்விகளுக்கும் அது மிக விரைவில் பதில் கூறுமா? கூறும். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. அது அப்படி எல்லாம் செய்வதற்கு, அதற்கு ஒரு திட்டத்தை நாம் தயாரித்துக் கொடுக்க வேண்டும். எப்படி நாம் திட்டம் (Programme) போட்டுக் கொடுக்கிறோமோ, அதற்கேற்ப அது செயல்படுகிறது; திறமையைக் காட்டுகிறது; துரிதமாகவும் நுட்பமாகவும் இயங்குகிறது.

**லட்சுமி**

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! மனிதனும் அப்படி ஒரு கம்பியூட்டர்தானே? நாம் பிறக்கும் போதே, நாம் செய்யவேண்டியவை நாம் அனுபவிக்க வேண்டியவை—எல்லாவற்றுக்கும் திட்டம் தயாராகி விடுகிறது. அதன் பிறகு நம்முடைய வாழ்க்கை முழுவதும், அந்தத் திட்டத்தின்படிதான் இயங்குகிறது. இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திட்டம் பிறப்பிலேயே உருவாகி விடுகிறது. அதைத்தான் நாம் 'தலைவிதி' என்று குறிப்பிடுகிறோம். இப்படி ஒன்று இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரே ஊரில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் [illegible] இரு குழந்தைகளின் வாழ்க்கை முற்றிலும் வெவ்வேறு விதமாக அமைவானேன்? ஒரே சூழ்நிலையில், ஒரே ஆசிரியரிடம், ஒரே பள்ளியில், படிக்கும் இரு மாணவர்களின் திறமையும், எதிர்காலமும் வெவ்வேறு விதமாக அமைவானேன்? இருவரும் பிறக்கும்போதே போட்டுக் கொண்டு வந்த திட்டம் (Programme) வெவ்வேறு. அதனால்தான் விளைவுகள் வேறுபடுகின்றன! இதைத் தவிர விஞ்ஞான ரீதியாக—இதை வேறு எப்படி விளக்கிச் சொல்ல முடியும்?

''கடவுள் நம்பிக்கை மூடநம்பிக்கைகளுக்கு இடம் கொடுக்கிறது. கடவுள் நம்பிக்கை மனிதனின் தன்னம்பிக்கையைப் பாழாக்கி விடுகிறது!'' இது இன்றைய சீர்திருத்தவாதிகளின் பேச்சு. விஞ்ஞான ரீதியாகக் கடவுள் இல்லை என்று நிரூபிக்கப்படவில்லை; கடவுள் இருப்பதாகவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் அப்படி ஒரு சக்தி இல்லை என்றே அவர்கள் சொல்லுகிறார்கள். இதை நாம் ஒப்புக் கொண்டால், நம்முடைய வாழ்க்கையின் இன்றியமையாத பல பண்புகளை இல்லை என்று சொல்லிவிட வேண்டியவர்களாகி விடுவோம்.

''அவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் ஏனென்று சொல்ல முடியவில்லை!'' என்கிறான் காதல் உணர்வு வசப்பட்ட வாலிபன். இந்த உணர்ச்சியை எப்படி விளக்குவது? எப்படி நிரூபிப்பது? இனிப்பு, கசப்பு, கரிப்பு என்று பல வகையாக ருசிகளைப் பிரிக்கிறோம். ஆனால் ஓர் அவுன்ஸ் இனிப்பு அல்லது கசப்பு என்று விஞ்ஞான ரீதியாக அளந்து காட்ட முடியுமா? முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை, உணர்ச்சி ததும்ப இன்று நம்மால் விவரிக்க முடிகிறது. இதை எந்த உறுப்பு, உடலில் எங்கே ஒளித்து வைத்திருந்து எடுத்துக் காட்டுகிறது என்று மருத்துவ சாத்திரப்படி எடுத்துக் காட்ட முடியுமா? இவையெல்லாம் சாத்தியம் இல்லை என்பதனால், இவையெல்லாம் இல்லை என்று நாம் சொல்லி விடலாமா? இவற்றை நம்முடைய மனித சக்தியினால் எல்லை போட்டு, அறுதியிட்டுக் காட்ட முடியவில்லை என்பதுதான் உண்மை. அதேபோல நம்மால் எல்லையிட்டுக் காட்ட முடியாத ஓர் சக்தியே கடவுள்.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் இந்தத் தத்துவத்தை இப்படி விளக்குகிறார். ''நம்மால் பிளந்து, பகுத்து அறிய முடியாத நுட்பம் ஒன்று இருக்கிறது. அது அளப்பரிய மெய்ஞ்ஞானமாகவும், அளவிலா அழகு கொண்டதாகவும் இருக்கிறது. சாதாரண அறிவு படைத்த மனிதன் அதை உணரும் போது ஞானியாகி விடுகிறான். இந்த மெய்யறிவு, இந்த உணர்வு—இது தான் உண்மையானது-இதை நாம் மதஉணர்வு (Religiousness) என்று கூறுகிறோம்!''

நோபல் பரிசு பெற்ற நிபுணர் ஏ. எச். காம்ப்டன் தனது நூலில் இப்படிக் கூறுகிறார்: ''நம்முடைய தந்தை என்று எண்ணி நாம் பிரார்த்தனை செய்யும் கடவுளிடம் நாம் என்ன கேட்கிறோம்? நமக்கு நல்ல அறிவைக் கொடு என்று கேட்கிறோம். நமக்கு நல்ல செல்வங்களைக் கொடுக்க வேண்டுகிறோம். நல்லவைகளைச் செய்யும் சக்தியைக் கொடு என்று கேட்கிறோம். இவை எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்கும் சக்தி ஒன்று இருக்குமானால், அது இவையெல்லாவற்றுக்கும் மொத்த உருவமான ஒரு பெரும் சக்தியே அல்லவா? தன்னிடம் இல்லாத ஒன்றை அது எப்படி நமக்குத் தர முடியும்? அதையே நாம் கடவுள் என்று கூறுகிறோம். மனிதனால் சாதிக்க கூடியவை என்பது தன்னம்பிக்கை என்ற எல்லையில் அடங்கி விடுகிறது. அதைக் கடந்து ஒன்றை மனிதன் வேண்டும்போது, தெய்வ நம்பிக்கை தேவைப்படுகிறது!''

விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றுக்கும் எல்லை உண்டு. டெலிபோனில் குரலைக் கேட்க முடியும்; உருவத்தைப் பார்க்க முடியாது. டெலிவிஷனில் உருவத்தைப் பார்க்கலாம்; குரலைக்கேட்கலாம். ஆனால் பேசத் தொடர்பு கொள்ள முடியாது. மிக வேகமாக ஓடும் ரயிலைத் தரையில் எந்த நேரத்திலும் நிறுத்தலாம். ஆனால் அதைக் காட்டிலும் பன்மடங்கு வேகம் கொண்டதாக மனிதன் கண்டுபிடித்துள்ள விமானத்தை வானத்தில், ஓரிடத்தில் நிறுத்த முடியாது. மனிதனுடைய கண்டுபிடிப்புகள் யாவும், இப்படி ஓர் எல்லையில், ஓரிடத்தில் முடிந்து நின்று விடுகின்றன. ஏனென்றால், விஞ்ஞானம் மனித மூளை உருவாக்கிய ஒரு தத்துவம்.

மெய்ஞ்ஞானம் என்பது இப்படி உருவாக்கக் கூடியதல்ல. அது மனிதனால் கண்டுணர்ந்து, தனக்குத் தானே விளங்கிக் கொண்டு, புரிந்து கொள்ள வேண்டிய அனுபவம். அதனால் தான், பாரத நாட்டின் பழம் பெருமையில் நிலைத்து நிற்கும் வேதநூல்களை, முனிவர்கள் தமது அநுபவத்தால் கண்டு சொல்ல வேண்டி இருந்தது. ''கடவுளை யார் தேடிச் செல்லுகிறாரோ அவருக்கு மட்டுமே அவர் பிரசன்னமாகிறார்'' என்று அவர்கள் செல்ல நேர்ந்தது.

கடவுளைத் தேடிச் செல்ல நாம் தனியாகப் பிரயாசைப் பட வேண்டியதில்லை. மலைச்சாரலையும், காடுகளையும் நாடிச்சென்று தவம் செய்யவும் வேண்டியதில்லை. நம்மைச் சுற்றியுள்ள உயிர்களிடம் அன்பு காட்டி, நல்ல ஒழுக்கத்துடன் வாழ்க்கையை நடத்தினாலே போதும்; எல்லா உயிர்களையும் நம்மைப் போலவே மதித்தாலே போதும். அங்கே இறைவன் வந்து சேர்ந்து விடுகிறார். இப்படித் தன்னுள் உறையும் இறைவனே, உலகில் எல்லா உயிர்களிலும் கலந்து நிற்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளும் உணர்வையே, மெய்ஞ்னானத்தின் முதிர்ந்த நிலையாக இந்து மதம் கூறுகிறது. ★

## திருவருள் துணை

கடவுள் இயல்பாகவே என்றும் ஆன்மாக்களில் மிக்க ஈடுபாடு உள்ளவர். ஆன்மாவும் இயல்பு நிலையில் இறைவனிடத்து நாட்டமுள்ளதே. ஆனால் அதனைப் பீடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை நீங்கும் வரை அது இறைவனை உணர்ந்து அவரை அடைய முடியாது. இதற்குத் திருவருள் துணை தேவை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பபடி நான் போவேன்?

டித்தான் இந்த இடம்விட்டு நான் போவேன்?
தும் எனக்கிங்கே
ல் விரித்த மாமரங்கள்,
., கிரிக்கட் என்றெனை வளர்த்த குச்சொழுங்கை,
பரியைக் கற்ற
ரயிடிந்த என்பள்ளி,
ந்சைச் சிலகணங்கள் நெகிழவைக்கும் என்னூரின்
திர மணியோசை,
லையிலே பொடியளுடன்...
மாளம் போடுகிற கோயிலடி,
ம் இரவில்
க்குவைக்கும் வீட்டுக்குப் பக்கத்தில் வீற்றுள்ள
ரவரின் சூலம்,
ர்ந்துள்ள ரோசாக்கள்,
டாவுடன் அன்று பொடிநடையாய்ச் சுற்ற; அவர்
டி அறிவித்த கதைசொல்லும் கட்டிடங்கள்,
த் 'தமிழ்க் காற்று,
ாதரம் போல் உறவாடும் பெட்டிக் கடைகள்,
பு முதல் கால்மறவாத அந்தத் தெருக்கள்,
சிக்குக் கொள்ளி வைத்த
தச் சுடலை,
ன் எனக்குள்' தவமிருக்கும்
வளவுக் கொட்டில்,
ின்றும் அமர்ந்தயரும்...
பப்பா பாவித்த 'அரசகட்டில்',
னயும் தான்
பாடவைத்த எங்கள் கடற்கரைகள்,
முதுசப் பொன்வயல்கள்,
ும ... 'புலம் பெயராது' ஓய்ந்திருக்க...
டிநான் இவற்றை இழந்து வெறும் சடமாய்த்
வியுயிர் காத்துத் தழைத்திடுவேன்?
ல்லுங்கோ!

— அருணன் —

# ாட்டு வணக்கம்

எந்தையும் தாயும் தனித்து உலாவி
இணைந்ததும் இந்நாடே — அவர்
சொந்தங்கள் ஆயிரம் சூழ்ந்திட மாலைகள்
சூடியதிந் நாடே — புது
மந்திர வாழ்க்கையின் மர்மம் சுவைத்தெனை
வார்த்ததும் இந்நாடே — இதைச்
சிந்தையில் போற்றிச் சிலிர்ப்பதை விட்டுநான்
சீவியம் காப்பேனோ?

தத்தித் தவழ்ந்துமண் உண்டிடும் போது
தழுவியதிந் நாடே — முதல்
முத்துப்பல் வீழக் கொழுக்கட்டை கொட்டி
மலர்ந்ததும் இந்நாடே — மனம்,
புத்தி... வளர்ந்துநான் புத்தகம் கற்கையில்
போற்றியதிந் நாடே — இதைப்
பற்றிப் பறைவதை விட்டுப் பிணமெனப்
பாடிப் பறப்பேனோ?

கிட்டி அடித்து கிளித்தட்டில் வென்று
கிளர்ந்ததும் இந்நாடே — அயல்
செட்டி வளவில் 'விளாட்டை' பிடுங்க
உதைத்ததும் இந்நாடே — இளம்
மெட்டி யொலிதேடி மேய்கையில்... காவலாய்
நின்றதும் இந்நாடே — இதைச்
சுட்டுப் பொசுக்குவோர் வெல்வதை என் விழி
சேர்ந்து சுவைத்திடுமோ?

தங்க வயல்கள் தளிர்க்க எழிலாய்த்
தவழ்ந்ததும் இந்நாடே — திறம்
சங்கு மணிகளை நல்கும் கடல்களின்
சீதனம் இந்நாடே — அருள்
பொங்கி ஒழுகிடும் கோவில் குளங்களால்
பூத்ததும் இந்நாடே —இது
செங்களச் சேற்றினில் சிக்கித் தவிக்க நான்
சீமைக்குப் போவேனோ?

ஊரே திரண்டெழில் பொங்கிப் படைக்க
உயர்ந்ததும் இந்நாடே — குகன்
தேரெனில்... யாவரும் கூடி வடந்தொடச்
செய்ததும் இந்நாடே — வரும்
பாரச் சுமையைப் பகிர்ந்து சுமக்கப்
பழக்கியதிந் நாடே — இதன்
வேரை அரித்திடும் பூச்சிகள் ஓடப்
புகைக் கவி பாடேனோ?

போரெனும் பேயிடை — சிக்கிச் சிதைந்து
புதையுது இந்நாடே — துயர்க்
கூரினாற் காயங்கள் பட்டுக் குரல் கெட்டுக்
குமுறுவதிந் நாடே — பழஞ்
சீர் எழில் செத்து தெருவில் அலைந்து
சிரங்குடன் இந்நாடே — இதைப்
பார்த்து அழுவதே பாக்கியம் ஆச்சு! நாம்
பாவப் பிறப்புகளோ?

குண்டுகள் வேட்டொலி செத்த மடிதனில்
கும்மி அடிப்பேனோ? — ரணப்
புண்ணெல்லாம் ஆறிய புற்தரை மீதில்
பிரதட்டை செய்வேனோ? — நிசப்
புன்னகை எம்அகம் யாவிலும் பூக்க நான்
'வாழ்த்துப்பா' பெய்வேனோ? தமிழ்
மண் புலர்ந் தாடிடும் காட்சியைக் காண நான்
கொடுத்துமே வைத்தவனோ?

—த. ஜெயசீலன் —

# இயற்கையின் நகல்

இது,
முரண்பாடுகள்
முளைக்கின்ற பூவுலகு!
இயற்கையில் முரண்கள்
அழகு செய் அணிகள்
பகல், இரவுக்கு முரண்தான்
சமரசம் செய்து கொள்ள
யாரும் சொல்லித் தரவில்லை
வைகறைப் பொழுதும்
மாலையின் வனப்பும்
மழலை மொழி பேசும்
அழகுச் சித்திரங்கள்
முள்ளுக்குள் பூவும்
குளிருக்குள் நெருப்பும்
தவிப்புக்குள் அணைப்பும்
இன்னும் எதுவெல்லாம்,
என்னென்ன பேசும்?
அவை
முரண்பட்டுக் கொள்வதில்லை.
மனிதனே!
நீ
முரண்படுகின்ற போது
உன் மனசுக்குள்
பார்த்தாயா?
மனசும்
இயற்கையின் நகலெடுப்புத்தானே?
அங்கேதான்
முரண்பாட்டு வித்துக்களை
முளைக்க விடுகின்றாய்
என்ன திகைக்கிறாய்
முளைக்கட்டும்
அதுவும் இயல்புதான்.
அங்கே ஒரு நிகழ்வு — அப்படி
இங்கே ஒரு நிகழ்வு — இப்படி
என்பதல்ல சிந்தனை
நீ என்ன செய்யப் போகின்றாய்
அதுவே வேதம்
முரண்பாடுகளை முளைக்க விட்டு
வேடிக்கை பார்ப்பாயா?
தீர்வுப் படிகட்டி
கெட்டியாக அடிவைத்து
படிப்படியாக ஏறி வந்து
மனிதத்தை தேடுவாயா?
உள்ளே பார்
உனக்குள் தேடு
முளைத்தவை
உன்னுடையவை
உனக்குக் கட்டுப்படும்
அங்கே மனிதம் துயில் கொள்ளும்
தட்டி எழுப்பு
கையோடுகை இறுகப்பற்றி
திரும்பிப்பார்
உன் கரம்பற்ற
அயலவன் காத்திருப்பான்.

இணுவில் சிவகுமாரன்—

# வேலி

தேடிவருங் கடலலைக்கும்...
தென்றலுக்கும்...
பீறிவருங் கவிதையினைப்
படைப்பதற்கும்...
வேலியைப் போட்டுத்
தடையிடலாம்!
அதற்கும்...
ஆயிரம் காரணங்கள்
அளந்திடலாம்!
எனினும்,
ஊமையாகிப் போன
'உணர்வுகள்' எமக்கு
உள்ளவரை...
மனங்களுக்கு யாரும்
மதில் போட முடியாது!

—உடுவில் அரவிந்தன்—

# இழப்பு

வீடிழந்தார்
மண்ணிழந்தார்
போன இடத்திலெல்லாம்
போட்ட குடில் இழந்தார்
கூரை தந்த மரமிழந்தார்
கூட வந்த அயல் இழந்தார்
சென்ற வழி நீள......
பூவிழந்தார்
பொட்டிழந்தார்
பெற்ற மகவிழந்தார்
கால் இழந்தார்
கை இழந்தார்
தம் கனவுகள் அனைத்தும் இழந்தார்
வியர்க்கும் உப்பு நீருமின்றி
உடம்பிலே நீரிழந்தார்
ஆத்மார்த்த உணர்வுகளில்
சிந்தும் துளிக் கண்ணீரைக் கூட
இழந்தே விட்டார்
சம்பந்தக் குழந்தைக்கு
ஞானப்பால் கொடுத்தவளும்
எப்பக்கம் போனாள்
தீனக் குரல் மறந்து......?

—[illegible]—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என்றாலும் நான் ஓர் இலங்கைப் பட்டதாரி!'

கண்டேன் கடைத்தெருவில் — எந்தன்
பண்டை நண்பனை — பாலர் பாடசாலையில்
தொடங்கிப் பின் கல்லூரி வாழ்க்கையிலும்,
'கடைவாங்கில் வீற்றிருந்து' — கந்தசாமி வாத்தியாரின்
வாங்கின் மேலேறி நின்று வணக்கம் தெரிவிக்கும்
பாங்கான 'பணிஸ்மென்டு'க்குப் பலமுறை ஆளாகி,
வீம்பாய் வீதியிலே விளையாட்டுப் பலபண்ணி — ஏதோ
படித்ததனால் யான் பல்கலை புகுந்து விட — ''லக்''
அடித்ததனால் அவன் ''.'.போரின்'' ஏகி விட,
பிரிக்கப்பட்ட பாங்கர் நாம் பிறகென்ன பத்தாண்டு
கழியக் கண்டுவிட்டால் கொண்டாட்டத்துக்கேது குறை?
என்றாலும் எனக்கு ஏதோ குத்தியது!......
கைகொடுத்த கரத்திலொரு கனடாக் கடிகாரம்!
கட்டித் தழுவியவன் கழுத்தினிலே 'தங்கக் கயிறொன்று'!;
வீசியெந்தன் நாசியிலேறியது விலையுயர்ந்த 'சென்ட்' வாசம்!;
தடித்த ''டெனிம்'' துணியிலே ''ரவுசரும் சேர்ட்டும்''; போட்டு,
மடிப்புக்குலையாது நின்றான்; முகத்திலொரு ''கூலிங்கிளாஸ்''!
எண்ணினேன் எந்தன் நிலையை......ஐயகோ!
கரம்கொடுத்த என்கையில் கதிர்காம நூலொன்று!;
கழுத்திலே கறுப்புக் கயிற்றுடன் ஒரு தாயத்து!;
வாணாள் முழுவதிலுமே 'வூடோ' வைத் தவிர வேறொர்
வாசனைத்திரவியம் என் வாசலுக்கே வரவில்லை.
'பக்கற்றிங்' முடித்து விட்டுக்'கூல்பார்'செல்வதுஎன் வழக்கம்பார்
வா மச்சான்! என்று தன் 'வெஸ்பா' வை எடுத்தவனை,
ஏறெடுத்துப் பார்த்தேன்; இன்னும் நிமிர்ந்து நின்றேன். ஏன்?
என்றாலும் நான் ஓர் இலங்கைப் பட்டதாரி!

— அனலையூர்ச் சேந்தன் —

# கேள்வியால் வேள்வி?

காலம் விரைந்து கரையுது எங்களின்
காய்ச்சல் விடவுமில்லை — புதுக்
கோலங்கள் ஆகி 'குறளியின்' வித்தைகள்
கூடுது நிற்கவில்லை.

ஆறுமணிக்குயிர்ப் பூறும்; பின் மாலையோ
ஆறு மணிக் கடங்கும் — எங்கள்
நாளொன்று 'பன்னீர் மணித்துளி' ஆகிட
வாழ்வோ அழுதடங்கும்.

சுற்றி வளைப்புகள், சாவடிச் சோதனை
சென்றியில் தாமதித்தல் — என்று
சொற்பப் பகல் தொலை தோடும் இதை மாற்ற
ஆருக்கும் இங்கில்லை 'தில்'.

சுற்றிப் புயல்எழு சூழும் தடைவிழச்
'சோதனை' வென்றவர்க்கு — உயர்
''கட் ஒ.'.ப்'' விதிக்கிற தாமரை என்கவி
வாழ்த்துமா சங்கிசைத்து?

நெருப்புகள் இன்றிப் புகைவரக் கூடுமா?
நீதியைக் கேட்டதுண்டா? — அந்த
நெருப்புக்குக் காரணம் காட்டாமல் நீர்விடும்
ஞாயங்கள் நீளுமிங்கா?

நுளம்புப் பெருக்கமும் ரோட்டின் குழிகளும்
மாறுமென்றின்றுரைத்தார் — வெறும்
பிழைப்பை விடுத்தெம் குலங்கேட்கும் கேள்விக்கு
யார்தான் பதிலுரைப்பார்?

— தேரடிச் சித்தர் —

# 98க்கு வரவேற்பு

சுவரில்லாச் சித்திரங்கள் போலெம் மக்கள்
சுகம்கெட்டுச் சாக்காட்டுச் சுணையும் கெட்டு
உவர்மண்ணில் பயிர்போல வாழ்ந்த ஆண்டு
உருண்டோட வந்தவளே; எங்கள் றோட்டுச்
சுவரெல்லாம் சித்திரங்கள்?! பூக்கச் செய்த
சூட்சுமியே; இனப்பேதம் கழுவ; நீயோர்
'பவர் சோப்பாய்'' வாவம்மா பாவம் நாங்கள்
பார்த்துள்ளோம் உன்வரவை ஆவல் கொண்டு.

கண்குளங்கள் ஆய்ப்போன தமிழர் எங்கள்
கனகுளங்கள் கைவிட்டுப் போகும் வேளை
பெண்குலங்கள் பிறவெள்ளக் குளங்கள் ஆகப்
பீடித்த தொண்ணூற்று ஏழே போநீ
என்குலமே ''தை'' பட்டு எழும்பு ஒன்றாய்
ஏதோநம் முன்னோர்கள் வணங்கி வந்த
விண்குலமே! தேவீரே! விழித்துப் பாரும்
விழிகலங்கி நிற்பதுவெம் விதியோ கூறும்.

கல்வியுங் காட்டிடையே தவறிக் க்கட்டப்
பிராயத்தில் எம்சிறுவர் கண்ணில் எல்லாம்
சில்லென்று நீர்வேலி யாக நெஞ்சில்
சிறுத்தைக்கோ ஒப்பாய்த் துன்பம் கீற
நல்லூரும் இன்றி சிறு பிட்டிக் காட்டில்
நம்பிக்கை அச்சு வேலிகளாய் தாங்கள்
வில்லூன்றி நிற்கின்ற வேகம் கண்டோம்
வேளையது வந்திடுமோ அமைதி பூக்க.


முழங்காவில் கையிருந்து லாபம் என்ன?
மூளாயா? அறத்தீயே குளிர்நாம் காய
இளவாலை வாலிபரை இரையாய் ஆக்கும்
இழ(வு) ஆலை ஆச்சுதெங்கள் இலங்கைத் தீவும்
சுளகாலே புலியோட்டும் காலம் போச்சு
''சுவிசில்'' போய் ஈயோட்டும் வாழ்க்கை ஆச்சு
பழகாத தொண்ணூற்று எட்டே எம்மை
படுத்தாதே தமிழ்ச்சாதி சார்பில் கேட்டேன்.

ச. முகுந்தன்

கவிதை முற்றம்

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 36



சொற்சிலம்பம் இல. 36
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 13 — 02 — 1998

**இடமிருந்து வலம்**

1. அநாதரவற்ற பெண். 3. வேத சாத்திரங்களில் ஒன்று. 6. மகிழ். 8. கோட்டில் வருவது. 9. ஒரு தற்காப்புக் கலை. 13. ஓர் இராகம் 14. முகத்தில் வருவது. 15. சினம் என்றும் கொள்ளலாம்; அப்பாவி என்றும் கொள்ளலாம். 16. அறிவு. 17. இசைக்கப்படுவது. 18. கிழிஞ்சல். 19. இயல்பு. 22. ஏளனம் செய்.

**மேலிருந்து கீழ்**

1. குதிரை. 2. பங்கிடு 4. துக்கம் 5. இற. 7. ஒரு மரக்கறிவகைப் பயிர். 10. இந்த எண்ணெயிலிருந்துதான் எரிபொருள் வடிகட்டுவர். 11. தூக்கத்தில் வருவது. 12. உபகரணம். 14. முகட்டிலிருந்து சாத்திரம் சொல்பவர் 15. ஒரு பாடல் வகை. 16. பாடசாலை. 17. சூழல் பச்சையாக இருப்பதை இப்படிக் கூறலாம். 20. சிக்க வைக்க விரிப்பது அல்லது வீசுவது. 21. ஒரு மாதம்.

**சொற்சிலம்பம் 34 — முடிவுகள்**

**இடமிருந்து வலம்**

1. நாவிதன். 4. ஆகுதி. 7. வண்டி. 8. பழவினை. 9. மசரம். 11. மன்னன். 13. சதி. 14. செவிலி. 17. சாவி. 18. நகருதல் 20. சக. 21. திண்ணை. 22. புரதம்.

**மேலிருந்து கீழ்**

1. நாவல். 2. விண் 3. தடிமன். 4. ஆழம். 5. குவி. 6. தினைமா. 8. பரன். 10. கனவு. 11. மதி. 12. சேவி. 13. சந்ததி. 14. செவி. 15. லிங்கம், 16. சருணை. 17. சால்பு. 19. கண். 20. சத.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** செல்வி சிவனேஸ்வரி—
பாலசுப்பிரமணியம்,
பிரதேசசெயலகம், யாழ்ப்பாணம்.

★ **இரண்டாம் பரிசு:** சி. விசுவநாதர்,
முதலியார்வளவு மாத்தனை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,

★ **மூன்றாம் பரிசு:** க. கிரிஜா,
மதவடி ஒழுங்கை,
கட்டுடை, மானிப்பாய்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 35 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

பெற்றவர்கள் பட்டகடன் பிள்ளைகளைச் சேரும் என்பது எவ்வளவு உண்மை? சந்ததியின் மேம்பாட்டுக்காக பாவம் செய்யாமல் — பழிக்கு அஞ்சி வாழ்பவனே இல்வாழ்வான்.

வசதியாக வாழ்ந்தவர்கள் கெட்டுப்போய் வறுமையில் வாடுவதன் காரணம் என்ன? பாவச் சொத்துக்கு ஆசைப்படக்கூடாது. அடுத்தவர் மனம் நோகப் பொருள் ஈட்டக் கூடாது. இந்தச் சம்பாத்தியம் நிலைக்காது.

நேர்மையாக உழைத்து விட்டால் மட்டும் பொருள் நிலைத்துவிடும் என்றில்லை. உழைத்ததை தானும் தன் குடும்பமும் மட்டும் உண்டு வாழாமல் அடுத்தவரோடு பகிர்ந்து வாழ வேண்டும்.

அப்போதுதான் செல்வமும் செல்வாக்கும் பரம்பரைக்கும் நிலைக்கும். கொடுக்காமல் காத்த செல்வம் செல்வோம் என்று சென்றுவிடும். சந்ததிக்காக — வழி — எஞ்சாமல் போய்விடும்.

அடுத்தவனுக்காகவும் சற்று வாழும் அருகதை இல்வாழ்வானிடமே இருக்கும்.

*பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். — 0044*

இல்வாழ்வான் என்பான் வீட்டுக்கு வருபவனிடம் நாயை ஏவி விட்டு வேடிக்கை பார்ப்பவனாக இருக்கக் கூடாது. அவனது இதயம் கனிந்து இருக்க வேண்டும். முகம் மலர்ந்து வருபவரை வரவேற்கத் தெரிய வேண்டும்.

அன்பு என்பது அவனது பண்பு. அறன் எனப்படுவது அவன் பெற்ற பிறவிப் பயன். அன்பும் அறமும் இரு கண்கள் என வாழ்பவனே இல்வாழ்வான். அவன் வாழ்வில் உலகமே நிறைவு காணும்.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது. — 0045*

(இல்வாழ்க்கை)
—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [07- 02 - 1998 முதல் 13 - 02 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| சனி | | | சந் |
| செவி கே | இராசிச் சக்கரம் | | |
| சூ* புத | | | ரா |
| வெ | | | |

மாற்றம்:

11- 02 1998 இல் கும்பம் இராசிக்கு புதன் மாற்றம், 13- 02- 1998 இல் கும்பம் இராசிக்கு சூரியன் மாற்றம்.

யுத்த மேகத்தின் தாக்கம் பரவலாக இருக்கும். அரசியலில் புதிய அலைகள் மாறும். அரசியல்வாதிகள் திசைமாறிச் செயற்படுவர். இரண்டு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். இந்திய அரசியலில் மக்கள் மனம் மாறி வரும். இந்திரா காங்கிரஸிற்கு மக்களின் அனுதாப அலை அதிகரித்தபடி இருக்கும். வன்செயல்கள் நடைபெறும்.

உலகில் கிழக்கில் புதிய நடவடிக்கைகள், நாட்டிற்கு நாடு மாறுபடும். மேற்கு நாடுகள் ஈராக் மீது புதிய அழுத்தங்கள் பிரயோகிக்கும். ஐ. நா. பல சட்டதிட்டங்களை உருவாக்கும். அமெரிக்க அதிபருக்கு நல்லதல்ல. அவருக்கு அரசியல்வாதிகளின் எதிர்ப்புக்கள் அதிகரிக்கும்.

**மேடம்:** நாலுபேர் நாலு விதமாகக் கதைப்பார்கள். உலகம் திருந்தாதா? எனக் கேட்காதீர்கள். உங்களைத் திருத்தி வாழ முயற்சியுங்கள். திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் உண்மைகள் இன்றும் பொய்யா மொழியாக இருப்பது உலகம் திருந்தாததனால் என்பதைச் சிந்தியுங்கள். தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவு. அதைப்பார்த்துச் சிலர் பல கதைகளை விடுவார்கள். அரசாங்கச் செலவொன்று காத்திருக்கும். கோவில் செலவு கொஞ்சம் இருக்கும். வயிற்றில் பொருமல், தலையில் கிறுகிறுப்பு, ஓய்வின்மையால் களைப்பு என்பன இருக்கும். பூமி, வாகனம், யந்திரம் எனச் செலவு. இதனால் சிலர் விரோதிக்க இடமும் உண்டு. உங்கள் புத்திசாதுரியத்தாலும் [illegible] அனுக்கிரகத்தாலும் சமாளிக்க உங்களால் முடியும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**இடபம்;** ஏன் கோபிக்கிறீர்கள்? ஏன் சலிப்படைகின்றீர்கள்? கொஞ்சம் நிதானமாக இருங்கள். ஆலயத் திருப்பணிச் செலவுகள் உங்கள் மூலதனத்தில் சேரும். வீடு மனைச் செலவுகள் கொஞ்சம் விரயத்தைக்காட்டும். தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம் உண்டு. தோல், சளி, சலம் சம்பந்தமான சுகவீனங்களைத் தரலாம். எந்த விஷயத்திலும் அவசரப்படாது செயற்படவும். சொத்துசம்பந்தமான பதற்ற நிலைகள் சிலருக்குக் கொடுக்கலாம், எதிர்ப்பாலாருடன் அனுசரித்துப்போவதே புத்திசாலித்தனமாகும். புதிய திட்டங்களால் செலவுகள் அதிகரிக்க இடம் உண்டு. உழைப்பதை எல்லாம் உதறிவிடும் சிந்தனை கொண்ட நீங்கள் வருங்காலத்திற்காகக் கொஞ்சம் சேருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

**மிதுனம்:** உங்களுக்கு அடிக்கடி மனத்தளம்பல் நிலை ஏற்பட்டபடி இருக்கும். அலைச்சலுக்கு குறைவிருக்காது. எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம், தொழில் ஸ்தானத்தில் விசாரணைகள் அல்லது மனக்கருத்துக்கள் ஏற்பட இடம் உண்டு. வீடு மனைசம்பந்தமான புதியதிட்டங்கள், செலவுகள் சிலருக்கு ஏற்படலாம். அயலவர்கள் அன்புடன் இருக்கமாட்டார்கள். நரம்பு, எலும்பு, நாரி நோ, பித்தரோகம் என்பன மாறி மாறி இருக்கும். சகோதரங்களுக்கு புதிய பிரச்சினைகள் ஏற்படும். நண்பர்களுடன் கொஞ்சம் ஜாக்கிரதை. குலதெய்வ வழிபாடு மனதில் குழப்பத்தைத் தராது இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கடகம்:** மனதில் எதையும் வைக்காமல் பல கருத்துக்களை வெளிவிடுவதனால், வீண் பகைகளைச் சம்பாதிக்க இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலாருடன் அனுசரித்து நடவுங்கள். உச்சத்திலிருந்து பள்ளத்திற்கு வெள்ளம் போல் வருவது உங்களின் இரட்டை மனத்தாலாகும். கொஞ்சம் நிதானமாக நடந்தால் சமாளித்து விடலாம். பாசமென்றும், நேசமென்றும் இருப்பவர்களால் பல புதிய பொறுப்புக்களைத் தாங்க வேண்டிவரலாம். சலம், கைகால், நோ, வயிற்று ரோகங்கள், பலவீனம் என்பன சர்வசாதாரணமாகும். ஆலயமா? ஆஸ்பத்திரியா? இரண்டிலொன்றுக்குப் போய்வர வேண்டி வரும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

**சிங்கம்:** இக்காலத்தில் உடல் நிலையில் கொஞ்சம் கவனமாக இருங்கள். உஷ்ண பீடை, வயிற்றுநோ, கைகால் தாக்கங்கள் சிலருக்குக் கொடுக்க இடம் உண்டு. குடும்பத்தினரின் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பாராத குறை,

# சோதிட சஞ்சீவி

தாமதப்பலன்கள் கொடுக்கும். கடமையா? உடைமையா? எனச் சிந்திக்கும் காலமாகும். தர்மமா? சட்டதிட்டமா? என யோசித்து, யோசித்து வேதனை அடைய இடம் உண்டு. இடைக்கிடை மந்த நிலை காட்டுவதனால் வருங்காலத் திட்டங்களுக்கு வழி வகுத்து வாருங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

## மகாதேவா ஜோதிடம்

நல்லூர்

**கன்னி:** சோதனை, வேதனை கலந்ததுதானே இவ்வுலகம். விதிவசப்பட்ட பலன்களால் தள்ளப்பட்டாலும், சடுபுடு எனக்கோபித்து பின்பு நிதானமாக உங்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கும். தொழில் ஸ்தானத்தில் நீங்கள் ராஜாதான். ஆனால் வீட்டில் பெட்டிப் பாம்பு போல பதுங்கவேண்டி வரும். என்ன செய்வது? காலத்தை, அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். காரியமாக வேணும் என்றால் நாங்கள் தானே கொஞ்சம் அனுசரித்துச் செயற்பட வேண்டும். அலிபாபா போல மந்திரத்தால் நாற்பது திருடர்களின் பொருள்களை அபகரித்துக் கொள்ளும் காலம் இல்லை உங்கள் காலம்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி

**துலாம்:** உங்களுக்கு வீடு மனை சம்பந்தமான நற்பலன்கள் கொடுக்கும். எதைச் செய்தாலும் செய்து முடிக்காதநிலை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் கூடி இருப்பவர்களே பலவித

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணன் தூது சென்றது ஏன்?

இராமாவதாரத்தில் பகவானின் தூதனாகச் சென்றவன் ஆஞ்சநேயன். அவனின் தூது வெற்றிகரமாக ஈடேறியது.

ஆனால் மகாபாரதத்தில் கண்ணனே தூதனாகச் செல்கிறான். அது தோல்வியில் முடிகின்றது. அது ஏன்? அதற்கு ஒரு விளக்கம் உண்டு.

பாண்டவர்கள், கௌரவர்களுடன் சூதாடித் தோற்ற பிறகு பன்னிரண்டு வருட வனவாசமும், ஒரு வருட அஞ்ஞாத வாசத்தையும் முடித்துவிட்டு, தங்கள் இராஜ்ஜியத்தை வேண்டி முதலில் விராட மன்னரின் அரச புரோகிதரை திருதராஷ்டிரனிடம் தூது அனுப்பினார்கள்.

அந்த அரச புரோகிதரிடம் துரியோதனன் இந்திரப்பிரஸ்தத்தைத் திருப்பித் தரமுடியாது என்றும், பாண்டவர்கள் மீண்டும் வனவாசத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறி அனுப்பிவிடுகிறான்.

பின்னர் திருதராஷ்டிரன் அவனுடைய தேரோட்டியான சஞ்சயனை பாண்டவர்களிடம் தூதாக அனுப்பி, பாண்டவர்களை உபப்லவ்யத்திலேயே கடைசி வரையில் சுகமாகத் தங்கியிருக்கும்படி கூறி அனுப்பி வைக்கிறார். சஞ்சயன் உபப்லவ்யத்திற்கு வந்து கிருஷ்ணன் முன்னிலையில் பாண்டவர்களிடம் இச் செய்தியைக் கூறிவிடுகிறான்.

அப்போது சஞ்சயன் கிருஷ்ணனின் தேஜஸைக் கண்டு வியந்து, கண்ணனை கடவுள் என்று உணர்ந்து கொள்கின்றான். ஸ்ரீ கிருஷ்ணன் அவனிடம், இந்திரப்பிரஸ்தத்தைத் திருதராஷ்டிரன் பாண்டவர்களிடம் திருப்பித் தரவேண்டுமென்றும், இல்லாவிட்டால் போரைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்து அனுப்புகிறான்.

சஞ்சயன் திரும்பி வந்து திருதராஷ்டிரனிடம் நடந்தவற்றைக் கூறி போரைத் தவிர்க்குமாறு கூறுகிறான். மேலும் அவன் திருதராஷ்டிரனிடம் கண்ணனின் பெருமைகளைப் பற்றியும், அவருடைய தேஜஸைப் பற்றியும் எடுத்துக்கூறி, கண்ணன் சாதாரண மனிதனல்ல என்றும், அவர் சாட்சாத் ஸ்ரீமந் நாராயணனே என்றும், அவரை ஒருமுறை கண்ணால் கண்டுவிட்டால் செய்த பாவங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும் என்றும் கூறுகிறான்.

சஞ்சயன் கண்ணனின் பெருமைகளையும், தேஜஸைப் பற்றியும் கூறக்கூற திருதராஷ்டிரன் மனம் உருகி அவரையும் அறியாமல் கண்ணன் இருக்கும் திக்கை நோக்கி கைகூப்பி வணங்கி, ''கண்ணா! இந்தக் குருடன் ஒருமுறையாவது உன் சுந்தர எழிலைக் கண்ணால் காண வேண்டும். அதற்கு ஒரு வரமருள்வாய்'' என்று கூறி நெகிழ்ந்து போகிறார். உடனே கண்ணன் தன் திவ்விய தரிசனத்தைக் காண்பிக்க திருவுளம் பூண்டான்.

ஆம்! அதற்காகத்தான் கண்ணன் தூதே ஏற்பட்டது!

கண்ணன் சமாதானத்தை நாடித் தூது போனான். ஆனால் அது போரில் முடிந்தது. அதனால் அவன் தூது வெற்றி பெறவில்லை என்று கூறலாம். அவன் நினைத்தால் அதை வெற்றிகரமாக நடத்தியிருக்க முடியும். அவனுடைய தூதனின் காரியமே வெற்றிகரமாக நடந்திருக்கும்போது அவனால் நடத்த முடியாதா என்ன?

ஆனால் அவன் வந்த காரணம் அதுவல்லவே!


திருதராஷ்டிரனுக்கு தன் திவ்யதரிசனத்தைக் காண்பிக்க அல்லவா அவன் வந்தான்! அதற்கு தூது ஒரு காரணம். அவ்வளவுதான்!

அரச சபையில் துரியோதனன் பாண்டவர்களுக்கு ஊசிமுனை அளவுகூட இடம் தரமுடியாது என்று கூறி கண்ணனையும் இழித்துப் பேசுகிறான். உடனே கண்ணன் கோபம் கொண்டதுபோல் நடித்து விஸ்வரூப காட்சி அளிக்கிறான். அப்போது சட்டென்று திருதராஷ்டிரனுக்கு கண்பார்வை தோன்றிட, கண்ணனின் திவ்ய சொரூபத்தைக் கண்டு வணங்குகிறார். உடனே அவர் கண்ணனிடம், ''உன்னைக் கண்ட பிறகு உலகில் காண வேண்டிய ஒன்றும் இல்லை. உன்னைக் கண்டது ஒன்றே போதும். நான் பிறவி எடுத்ததன் பலனை அடைந்துவிட்டேன். ஆகையால் மீண்டும் என்னைக் குருடனாகவே மாற்றிவிடு'' என்று இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறார். அதன்படி மீண்டும் அவர் கண்பார்வையை இழக்கிறார்.

கண்ணன் தூது வந்த இரகசியமே திருதராஷ்டிரனுக்குத் தன் திவ்யசொரூபத்தைக் காட்ட வேண்டும் என்று தான்! அதற்கு ஒரு காரணமாய் அமைந்தது சமாதானத் தூது!

ஒருவன் எவ்வளவு பாவியானாலும் தன்னை உள்ளன்போடு ஒருமுறை அழைத்தால், அவர்களுக்காக ஓடி வருவான் பரந்தாமன் என்பதை நிரூபிப்பதற்காகவே இந்தத் தூது அமைந்தது!

★



## கவிஞனின் சிரிப்பு!

எளிய கவிஞன் அவன். ஏதும் வருமானம் இல்லாமல் வறுமையால் வாடிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் நள்ளிரவில் திருடன் ஒருவன் அந்தக் கவிஞன் வீட்டில் புகுந்து அலுமாரியை உடைத்துப் பார்த்தான். அலுமாரியில் கந்தலாடைகளே இருந்தன. கவிஞன் எழுதும் எழுத்து மேஜையைத் திறந்து பணம், காசு ஏதாவது அதில் இருக்குமா என்று திருடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கவிஞன் படுக்கை விளக்கைப் போட்டுக் கொண்டு எழுந்து அமர்ந்து பலமாகச் சிரித்தான்! திருடனுக்கு ஒன்றும் புரியவில்லை,

''ஏன் சிரிக்கின்றாய்?'' என்று திருடன் கேட்க கவிஞன் பேசினான்: ''சகோதரனே! நான் பகலில் தேடித் தேடிப் பார்த்தும் கிடைக்காத ஒன்றை நீ இரவிலே வந்து தேடுகிறாயே என்றுதான் சிரிக்கிறேன்!'' என்றான்.

-- ஐயப்பன்

# கிருஷ்ணருக்கு வந்த தலைவலி!

தன்னிடப் வரும் யாரிடமும் மூன்று கேள்விகளைக் கேட்பது ஓர் அரசனின்வழக்கமாக இருந்தது முதலாவது ''யார் சிறந்த மனிதர்?'' என்பது. இரண்டாவது 'எது சிறந்த நேரம்?'' என்பது. மூன்றாவது ''எது சிறந்த சேவை?'' என்பது. அரசனுக்கு எப்போதும் சரியான விடை கிடைக்கவில்லை.

ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற போது ஒரு முனிவரின் ஆச்சிரமத்துக்குப்போனான். அங்கே கொஞ்சம் ஓய்வெடுக்க விரும்பினான். அப்போது அந்த முனிவர் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்.

முனிவர் அரசன் களைப்புடன் வந்திருப்பதைப் பார்த்தார். தனது செடிகளுக்கு நீர் விடும் சேவையை நிறுத்தி விட்டு ஓடிவந்து அரசனுக்குப் பழங்களும் குடிநீரும் தந்து உபசரித்தார். அப்போது அங்கே வந்த இன்னொரு சாதுவின் உடற்காயங்களுக்கு மூலிகை மருந்து போட்டார் முனிவர். ஆறுதல் மொழிகளையும் இனிமையுடன் கூறினார்.

விடை பெற்றுப் போகும்போது அரசன் முனிவரிடம், தன் மனதில் எழும் வழக்கமான மூன்று கேள்விகளையும் கேட்டான். ''என்னுடைய ஆச்சிரமத்தில் நீ பார்த்த நிகழ்ச்சிகளிலேயே இதற்கான விடை கிடைத்துவிட்டதே?'' என்றார் முனிவர். அரசன் ஆச்சரியத்துடன் அவரை விளக்கிக் கூறும்படி கேட்டுக் கொண்டான்.

''நீ வந்தபோது நான் ஆச்சிரமத்துச் செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தேன். நீ களைப்புடன் வந்ததைப் பார்த்தபோது அதை நிறுத்தி விட்டு, உனக்குப் பழங்களும் நீரும் கொடுத்தேன். நீ அதிதி என்பதாலும் அரசன் என்பதாலும் அந்தச் சமயத்தில்உனது சேவைக்கு முதன்மை கொடுத்துச் செய்தேன். அப்போது இன்னொரு சாது அங்கே உடற்காயங்களுடன் வந்தார். அவருக்கு உன்னைவிட்டு விட்டு அவசரத் தேவையான மருந்துகளை அளித்துத் தொண்டு செய்தேன். இதிலிருந்து நீ மூன்று விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். முதலாவது யார் உனது உதவியை அவசரமாக நாடி வருகிறார்களோ, அவர்களோடு, அவர்களையே முக்கியமானசிறந்த மனிதராகக் கருதி சேவை செய்ய வேண்டும். அவர்களுக்கு உண்மையான சேவையைச் செய்து அவர்களைத் திருப்தி அடையச் செய்வதே மிகச் சிறந்த சேவை. அப்படிப் பட்ட சேவையில் ஈடுபடும் நேரமே மிகச்சிறந்த நேரம்'' என்று விளக்கம் கூறினார் முனிவர். அரசன் திருப்தி அடைந்து அரண்மனைக்குத் திரும்பினான்.

★ ★ ★

### சாயி பாபா சொன்ன கதை

பகவான் கிருஷ்ணர் ஒரு முறை தனது உண்மையான பக்தரின் பணியைவெளிப்படுத்த விரும்பினார். அதற்காகத் தனக்குத் தலைவலி வந்திருப்பதைப்போல நடக்கத் தொடங்கினார். உடம்பு முழுவதையும் போர்வையால் மூடிக்கொண்டு, தலைக்குப் பற்றுப் போட்டுக் கொண்டார். இதைக்கண்ட ருக்மணியும், சத்தியபாமாவும் அவருக்குச் சிகிச்சை செய்யத் தொடங்கினார்கள். ஆனால் அது பலன் அளிக்கவில்லை.

இருவரும் நாரதமுனிவரை வரவழைத்தனர். அவர் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் போய் அவருக்கு எந்த மருந்து குணமளிக்கும் என்பதை விசாரித்துத் தெரிந்து கொள்ளமுயன்றார்.

ஸ்ரீகிருஷ்ணர் நாரதமுனிவரிடம், ''இதற்கேற்ற மருந்து என்ன என்று நினைக்கிறாய்? பக்தர்களின் பாதங்களில் படிந்த தூசிதான். அதைக்கொண்டு வந்து எனது நெற்றியில் பூசினால் தலைவலி நீங்கிவிடும், நீ எனது சிறந்த பக்தனாயிற்றே? உன்னால் அதைச் செய்யமுடியுமா?'' என்று கேட்டார்.

நாரதரால் அப்படி நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. தனது காலில் பட்ட தூசியைப் பகவானின் நெற்றியில் பூசுவதா? அது எத்தகைய அபசாரம்? என்று எண்ணி மறுத்து விட்டார். கிருஷ்ணர் அவரை மற்றப் பக்தர்களை நாடிப் போகச் சொன்னார். யாருக்குமே அப்படிச் செய்ய மனம் துணியவில்லை.

''நீ பிருந்தாவனத்துக்குப் போனாயா? அங்கே ராதையைப் பார்த்துக் கேட்டாயா?'' என்று கேட்டார் பகவான் கிருஷ்ணர். நாரதர் சற்றுத் தயங்கினார். ருக்மணியும் சத்தியபாமாவும் அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் கேலியாகச் சிரித்தனர்.

அப்போது கிருஷ்ணர் ''ராதையிடமும் இதே பதில் கிடைத்தால் எனது தலைவலி தீராது என்றே வைத்துக் கொள்ளலாம்!'' என்று சொல்லிவிட்டார்.

நாரத முனிவர் மனம் கலங்கி உடனே பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டார். ராதையைச் சந்தித்துத் தனது வேண்டுகோளைக் கூறினார்.

''பகவான் கிருஷ்ணர் தலைவலியால் அவதிப்படுகிறாரா? அதற்கு மருந்து பக்தர்களின் பாதத்தில் படிந்த தூசியா? இதோ நான் தருகிறேன். உடனே எடுத்துச் செல்லுங்கள்!'' என்றாள்.

''ராதே! இதனால் உனக்கு என்ன நேரும் என்று யோசித்தாயா? உனது கால் தூசி பகவானின் தலைமீது பட்ட அபசாரத்துக்காக நீ நரகத்தில் வேதனைப்பட வேண்டி இருக்கும்!'' என்று எச்சரித்தார் நாரதர்.

''இருக்கலாம். ஆனால் நான் நரகத்துக்குப் போனாலும் பரவாயில்லை! பகவான் கிருஷ்ணர் சிறிதும் துன்பப்படக் கூடாது. அதனால் அவருடைய தலைவலி நீங்குமானால் அதுவே எனக்குச் சுவர்க்க இன்பமாகிவிடும்!'' என்றாள் ராதை. உண்மையான பக்தி என்ன என்பதை நாரதமுனிவர் புரிந்து கொண்டார். ராதையின் பாத தூசியுடன் ஸ்ரீகிருஷ்ணரிடம் திரும்பினார். அதைப் போடாமலே தலைவலி நீங்கியவராகக் கிருஷ்ண பகவான் புன்னகை செய்து கொண்டிருந்தார்!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடர்)

தொல்லைகளை மறைமுகமாகக் கொடுப்பார்கள். திடீர் நண்பர்களால் உதவிகள் உண்டு. ஆயினும் நீடித்த நட்பு கொள்ளக்கூடாது. முயற்சியால் பொருள் வரவுகள் ஏற்படும். கைகால் உளைவு கொடுக்கும். வயிற்றில் மந்த நிலை, வாத உளைவு, வாய்வுத்தொல்லை என்பன அடிக்கடி வேதனை தரும். குலதெய்வ வழிபாடு பல சிறப்புக்களைத் தரும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

விருச்சிகம்: ''உன்னையே நீ அறிவாய்'' என்ற உயர்ந்த கோட்பாட்டின்படி வாழ்பவர்கள் நீங்கள். நீதி, நியாயம், தர்மம் என்பனவற்றைப் போதிப்பவர்களை இந்த உலகம் சற்று எட்டிவைத்துத்தான் பார்க்கும். அதைப் பற்றி நீங்கள் அதிகம் சிந்திக்க வேண்டாம். சுயநலம் மிக்க உலகில் உங்களைப் போன்றவர்கள் வாழ்வது கடினம். தொழில் ஸ்தானத்தில் சலசலப்பு இருக்கும். சமாளித்துக் கொள்ளுங்கள். புத்தியில் தடுமாற்றம் புத்திரர்களுக்காகச் செலவுகள் அதிகரிக்கும். நெஞ்சில் சளி, வயிற்றில் நோ யோசனையைத் தரும். அயலவர்களால் வேதனை தேடிவரும். உங்கள் முயற்சியால் மட்டும் உயர்ச்சி அடைவீர்கள். தெய்வபக்தி மிக்கவர்களின் தொடர்பால் பல நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.

தனுசு: ''விதிவசத்தால் செஞ்சோற்றுக் கடன்'' தீர்க்கப்புறப்பட்ட கர்ணன் நிலைதனைக் காட்டுகின்றது. எவரையும் நம்ப வேண்டாம். தொழில் ஸ்தானத்தில் நன்மைகளும், மாற்றங்களும் தந்தாலும் திருப்தியில்லை. தடிகொடுத்து அடிவாங்கியவன் கதையாக மாறாமல் இருக்க இக்காலத்தில் அமைதியாக இருந்து செயற்படுங்கள். வீடு மனைச்செலவு, திருத்தச் செலவுகளை யோசித்து யோசித்து மனம் குழப்பாமல் சற்று பின் போடுங்கள். எதிர்ப்பாலாரையும், அயலவர்களையும் நேசித்து, அவர்களுடன் பொறுமையாக இருக்கவும். சொத்து விஷயங்களில் நிதானமாக நடவுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்

மகரம்: வஞ்சகமில்லாத செயற்பாடுகளைச் செய்யும் உங்களைச் சிலர் வஞ்சிக்கக் காத்திருப்பர். உலகில் பெரும்பான்மையானவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றியபடியே வாழ்கின்றார்கள் என்பதை அறியாதவரா நீங்கள்? தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், மேலதிகாரிகளின் உதவிகள் இருக்கும். குடும்பத்தினரின் அலுவல்களுக்காக ஓடியாடித்திரிவீர்கள். பொருள் வரவுகள் அதிகரித்தாலும் பல வழிகளில் புதிய செலவுகளும் காத்திருக்கும். வயிற்றுநோ, நெஞ்சு வருத்தம், வாத உளைவு என மாறி மாறி வருத்தங்கள் இருக்கும். உங்கள் கருத்துக்களை ஏற்காத சிலரால் மறைமுகத் தொல்லைகள் இருந்தபடியே இருக்கும். நீங்கள் செய்த தவறுகளை மறைக்க சில முயற்சிகள் எடுத்தபடி இருக்கும் காலமாகும்,

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்

கும்பம்: உங்களுக்கு புதிய முயற்சிகளால் நன்மைகள் வந்தாலும்—அதிக செலவுகள் கொடுத்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் மந்த நிலை கொடுத்துக் கொண்டிருக்கும். ஏட்டிக்குப் போட்டிகளும், சத்துராதிகளால் தொல்லைகளும் இருந்தபடி இருக்கும். ஆயினும் மேலதிகாரிகள் பெரியவர்கள் உதவிகளால் சமாளித்து நன்மை அடைவீர்கள். நரம்பு, கைகால் தாக்கம், வயிற்றுநோ, கண்கலக்கம் என்பன இருக்கும். சனீஸ்வரன் தாக்கம் இருப்பதனால் குல தெய்வ வழிபாடு முக்கியமாகும். பிரயாணம், இடமாற்றங்கள் நல்லபலனைத் தராது.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

மீனம்; நீங்கள் நிதானமாகப் போகவேண்டும். அரச பயம் இருக்கும். புதிய செலவுகள் கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் பொருளைக் கவனமாக வைத்திருக்கவும். கை கால் தாக்கம் கொடுக்கும். மறைமுகமான பெட்டிசன்களால் சோதனைகள் ஏற்படும். ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கத்தால் இடைக்கிடை அதிக யோசனைகள் தரும் சம்பவங்கள் நடக்கும். எதையும் எதிர்கொண்டு போராடி நன்மை அடையவும். வேதனை, சாதனை, ஞானம் படிப்படியாக தகுதிக்கேற்ப வரும். ஆலயத்திருப்பணிகள் செய்யுங்கள். குலதெய்வ வழிபாட்டால் துன்பச்சுமையை ஓரளவு குறைக்கலாம் அல்லவா?

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

# சுமைகள்....

(III ஆம் பக்க தொடர்)

இருந்த காலம் — அதாவது கிட்டத்தட்ட முப்பத்தைஞ்சு வருஷத்துக்கு முன்னாலே எங்கடை குடும்பம் கஷ்டப் பட்டுத்தான் இருந்தது. அப்ப பெரிய எடுப்பிலை திரிஞ்ச மாமனார் சுந்தரம்பிள்ளை தந்த தலைவலிகளுக்குக் குறைவேயில்லை.

இவரைப்போய் எதுவுமே— துரும்பளவு உதவிகூடக் — கேட்கக் கூடாது என்பது எங்கள் குடும்பக் கொள்கையாக இருந்தது. முகம்குடுத்து கதைக்கவும் விருப்பமே இல்லை. இப்ப அவரைப் போய் சுபி கெஞ்சுகிற நிலைமை.

வாழ்க்கையிலை வெட்கம், ரோஷம், மானம் இல்லாமல் அதிகம் 'ஸ்மார்ட்' ஆக இருக்க முயற்சிக்காமல் எப்பிடியும் வாழலாம் எண்டு இருந்தால்தான் இந்தக் காலம் சீவிக்க முடியும். எல்லாத்தையும் கண்ணாலை பார்த்துக் கொண்டும் — யோசிச்சுக் கொண்டும் படுக்கையிலை இருக்கிற நிலைமை எனக்கு.

நோய் நொடி எண்டாலும், படுக்கையிலை கிடந்தாலும் பேருக்கு நான் இருந்தால்

(XI ஆம் பக்கம் பார்க்க)

# சந்தை...

(V ஆம் பக்கத் தொடர்)

எனக்கு அன்றிரவு சொன்னார். நான் சந்தைக்குப் போய் காய்கறி வாங்கினால் அது தனக்கு பெருமையளிக்கும் என அவர் நினைக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும்.

அடுத்த நாளிலிருந்து என்னுடைய பொழுதுகள் திருவராவின் வீட்டிலேயே கழிந்தன. சந்தையைப் பற்றிய வரைபடம் ஒன்றை முதல் நாள் எங்களுக்குக் காட்டினார். பிறகு படிப்படியாக சந்தையின் வரலாறு உலகத்தின் பல்வேறு சந்தைகள் பற்றிய தகவல்களை குறிப்பாக தந்தார். சந்தையோடு இணையாக காய்கறி பற்றிய விவரங்களை வேறு ஒருவர் (அவர் பெயரை திருவரா வெளியிட மறுத்து விட்டார்) எங்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். காய்கறிகளின் வரலாறு மற்றும் உலகத்தின் பல்வேறு காய்கறிகள் என்றவாறு சென்றது.

நான் இரவில் சந்தை பகலில் காய்கறி என்றவாறு ஒழுங்காக நேர அட்டவணைப்படி ஆயத்தப்படுத்தி வந்தேன். இரவு நீண்ட நேரம் விழித்திருந்து சந்தை பற்றிய படங்களை மீண்டும் வரைந்து பார்ப்பதிலும் என்னுடைய நேரம் கழிந்தது.

அம்மா என்னோடு விழித்திருந்து தேநீர் அல்லது கோப்பி என்று ஏதாவது தயாரித்து தந்து உற்சாக மூட்டிக் கொண்டிருப்பாள். எனக்குள் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்துக் கொண்டே வந்தது. நான் மெலிந்து போகத் தொடங்கினேன்.

இதேவேளை ஊரில்நானும் ஜெயமும் சந்தைக்குச் செல்ல இருக்கின்ற விடயம் பரவி நானா, ஜெயமா என்ற விவாதம் நடககத் தொடங்கியிருந்தது. இது என்னுடைய காதுக்கு எட்டிய போது என்னுடைய பதற்றம் மேலும் அதிகரித்தது.

திங்கட் கிழமைக்கு சில நாள்கள் இருக்கையில் திரு ''வரா'' கற்பித்தல் முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்தார். அச்சடிக்கப்பட்ட குறிப்புகளையும் கடந்த வருடங்களில் சந்தை அனுபவங்கள் பற்றிய விவரங்களை விளக்கங்களுடன் எங்களுக்குத் தந்தார். காய்கறிகள் பற்றியும் மற்றவர் அதே பாணியைக் கைக்கொண்டார்.

நானும் சில மாதிரிகளை இப்படி, வரலாமென்று ஊகித்து அதற்கான ஆயத்தங்களைச் செய்து வந்தேன். அத்தோடு கூடவே என்னுடைய பயமும் அதிகரித்து வந்தது. இறுதி நாளில் திருவராவும் மற்றவரும் கடைசி முயற்சியாக பல நுணுக்கங்களைச் சொல்லி வாழ்த்தி அனுப்பினார்கள்.

திங்கட்கிழமையும் வந்து சேர்ந்தது. நான் காலை எழுந்து குளித்துவிட்டு கடவுளைத் தியானித்தேன். சந்தைக்குச் செல்வதற்கான எல்லா அடுக்குகளையும் முடித்துக் கொண்டு நான் வெளியில் வந்தேன்.

அம்மா, அப்பா எல்லோரும் என்னோடு வாசல் வரை வந்து வழியனுப்பி வைத்தார்கள். நான் ''தர'' குறியிடப்பட்ட ஒரு துணிப்பையுடன் சந்தை தெருவில் இறங்கினேன். வழியில் கோயிலில் சிறிதுநேரம் நின்று குட்டிக்கும்பிட்டுக் கொண்டேன்.

நான் சந்தையை நெருங்க நெருங்க என்னுடைய நெஞ்சப் படபடப்பு அதிகரித்தது.

சந்தை வாசலில் நின்ற ஒருவர் என்னிடம் ஒரு துண்டுக் காகிதத்தை நீட்டினார். திகிலுடன் அந்தக் காகிதத்தை வாங்கிக் கொண்டு சந்தைக்குள் காலடி எடுத்து வைத்தேன்.

வீதிப் பிரகாரம் நான் சந்தைக்குள் நுழைந்த போது நேரம் எட்டு மணி நாற்பத்தியெட்டு நிமிடங்களாயிருந்தது. நான் காகிதத்தை நடுங்கும் உள்ளத்துடன் பிரித்தேன். அதில் பின்வரும் காய்கறிகளுள் ஏதாவது ஆறு காய்கறிகளை பணம் கொடுத்து ''சந்தை முறைப்படி'' வாங்கவும் என்று தொடங்கி கத்தரிக்காய், புடோலங்காய், தக்காளிப்பழம், பிசுக்கங்காய், தவசி முருங்கை, தாமரைக்கிழங்கு, டுபாய் பூசணி, மரவள்ளி என பட்டியலிடப்பட்டு நேரே நிறைகளுமிருந்தன.

எனக்கு கத்தரிக்காய் என்ற பெயரைப் பார்த்ததும் சந்தோஷம் பொங்கி வழிந்தது. மனத்துள் நாவல் நிறத்திலுள்ள நுனி ஒடுங்கி அடி பெருத்த 'கொமா' வடிவத்திலுள்ள... என்று குறிப்பின் வசனங்கள் [illegible] ஓடின. மற்றையவையும் வாங்கலாம் என்ற நம்பிக்கை என்னுள் பொங்கியது.

சந்தை எங்கும் 'திருவரா' கூறியது போல் இரைச்சலாயிருந்தது. எல்லோரும் ஒரே நேரத்தில் கதைத்துக் கொண்டும் கத்திக் கொண்டும் இருந்தார்கள். எங்கு பார்த்தாலும் காய்கறிகளும் அதற்கு முன்னாலும் பின்னாலும் கிழவிகளும், கிழவர்களும், இளைஞர்களும் பெண்களுமாய் அங்குமிங்கும் அலைந்தும் கத்திக் கொண்டுமிருந்தார்கள்.

நான் முதலில் கத்தரிக்காய் வாங்குவதற்குத் தீர்மானித்தேன். கத்தரிக்காய் பல இடங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. யாரிடம் வாங்குவது என்று யோசித்தேன். அது பற்றிய விவரங்கள் எதுவும் என் ஞாபகத்திறம் வர மறுத்தன. நான் ஒருவாறு துணிந்து அருகிலிருந்த நடுத்தர வயது மனிதனிடம் சென்றேன்.

''... கத்தரிக்காய் கிலோ என்ன விலை...?''

அவன் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்தான்.

''சாக்ரோகய் முறுக்கே சாறுக்கி கிராய்'' என்று சொல்லி விட்டு கண்களைச் சுருக்கி இடி இடியெனச் சிரித்தான்.

என்னுடைய தேகமெல்லாம் பதறியது. அப்பொழுது தான் நான் அதைக் கவனித்தேன். அங்கிருந்த ஒருவரும் என்னுடைய மொழி பேசவில்லை. சந்தை முழுவதும் புரியாத ஒலிகள் நிறைந்திருந்தன. திருவரா இதைப்பற்றி எச்சரித்திருந்தார். இது திணைக்களத்தின் வேலை என்பதும் எனக்குப் புரிந்தது.

நான் தடுமாறிப் போயிருந்தேன். மீண்டும் மனதை இழுத்து சுதாகரித்து அவனோடு சைகையில் கதைத்து கத்தரிக்காய் நிறுத்து பையில் போட நீண்ட நேரம் பிடித்தது. பத்து மணிக்குள் எல்லாம் வாங்கிவிட வேண்டும். எனக்குள் பயம் தலை தூக்கியது.

அடுத்த காய்கறிக்கு உடனடியாக நான் தாவினேன். புடோலங்காயின் இயல்புகள் என்ன வாயிருக்குமென்பதில் பாகற்காய் வந்து மனதில் குறுக்கிட்டது. ஒருவாறு தீர்மானித்து புடோலங்காயை காட்டி வாங்கி முடித்தேன்.

அடுத்ததாக ஒரு கிழவி தராசில் மாயம் காட்டினார். ஒரு பக்கத்தில் படியைப் போட்ட [illegible] இருந்த [illegible] யிருந்தது. இது எனக்கு படித்ததன் பிரகாரம் ஆச்சரியத்தை அளித்தது. கிழவி என்னைப் புரியாத மொழியில் கூப்பிட்டு ஏதோ சொன்னாள்.

நான் விலகி ஓடினேன். ஒருவர் என்கையைப் பிடித்து இழுத்து நேரத்தை உரத்துச் சொன்னார். பிறகு கூட்டத்தில் மறைந்து விட்டார்.

இன்னும் சிறிது நேரம் தானிருக்கிறது. எனக்கு உடலில் மின் தாக்கிய உணர்வு. அங்குமிங்கும் ஓடி அவசரமாய் காகிதத்தில் இருந்தன் படி வாங்கத்தொடங்கினேன். அந்தக் கடைசிநேரத்தில் மனம் போனபடி பயத்தின் உச்சத்தில் நான் என்ன செய்தேன் என்று கூட நினைவுக்கு வராதபடி நான் நடந்து கொண்டேன்.

கடைசிக்காயை வாங்கிப் பையில் நிரப்ப யாரோ பெரிய குரலெடுத்து சந்தை முழுக்க ஒலிக்கக் கத்தினார். எல்லோரும் உடனடியாக அவரவர் பொருள்களை அள்ளிக் கட்டத் தொடங்கினார்கள். சந்தை கலைந்தது. நான் வெளியில் வந்தேன்.

நான் வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது அம்மா வாசலில் நின்றாள்.

''எப்படி''...என்று கேட்டாள்.

நான் ஒன்றும் சொல்லாமல் உள்ளே சென்றேன்.

வீட்டின் வரவேற்பறையில் புதியவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருடைய அகன்ற முகத்தின் பெரிய மூக்குக்குக் கீழிருந்த உதடுகள் என்னைப் பார்த்ததும் விரிந்தன. தனக்கு முன்னால் ஒரு பெரிய பைலை விரித்து வைத்துக்கொண்டு என்னைப் பார்த்து தலையை அசைத்தார்.

அவர் முன்னால் போடப்பட்டிருந்த சாக்கில் என்னுடைய பையைக் கவிழ்த்துக் கொட்டினேன். காய்கறிகள் சிதறிப் பறந்தன. அவர் பைலைப்பார்த்து கத்தரிக்காய் என்று முணுமுணுத்துக் கொண்டு அவைகளைப் பொறுக்கினார். தராசு ஒன்றை பையிலிருந்து எடுத்து கத்தரிக்காய்களை நிறுத்தார். ஒன்றை எடுத்துப் புரட்டிப் பார்த்துவிட்டு சடுதியாக சட்டைப்பையிலிருந்து பேனாக் கத்தியை எடுத்து ஒரு கீறு கீறினார். அவர் மடியில் புழு ஒன்று விழுந்தது.

அவர் என்னைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார்.

''...இது பாடத்திட்டத்தில் இல்லை...''—என்று நான் தொடங்க அவர் கையை அசைத்து நிறுத்தினார்.

அம்மா கதவருகில் நின்று என்னையும் அவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றாள். அப்பா உள்ளே கதிரையில் விறைப்பாய் உட்கார்ந்திருந்தார்.

''...புடோலங்காய் எங்கேங்க...?''

''...இங்கே இருக்கிறது''

நான் சுட்டிக் காட்டினேன்.

''...இது பாகற்காய்...''

''...இல்லை புடோலங்காய்க்கு தோலில் முளைகளும் பிளவுகளும்''

''...நீர் தவறாய்ப் படித்திருக்கிறீர்...''

அவர் அடுத்த காய்கறியைத் தேடினார். நான் அறைக்குள் ஓடினேன். மேசையில் இருந்த குறிப்பில் பாகற்காயைத் தேடினேன். புடோலங்காய், பாகற்காய் வித்தியாசப்படுத்துக என்ற தலைப்பில் வேறுபாடுகள் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்தன. தவறு புடோலங்காய்க்கு பதில் பாகற்காய் வாங்கி வந்துவிட்டேன். எனக்கு அழுகை வந்தது.

பின்னர் நான் அவரருகில் செல்லவில்லை. அம்மாவின் அருகில் நின்றுகொண்டேன்.

அவர் எல்லாவற்றையும் நிறுத்தார். கல்குலேட்டரில் கணக்குப்பார்த்தார். பின்னர் பைலை மூடிக்கொண்டு எழுந்தார். நாங்கள் அவரை வாசல்வரை சென்று வழியனுப்பினோம்.

...நீர் அடுத்த முறையும் சந்தைக்குப் போகவேண்டி வரும்...''

அவர் சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினார். அப்பா சோகமாய் பெருமூச்சு விட்டார். நான் அழத்தொடங்னேன்.

''இனி அழுது என்ன செய்வது...ஆனால அடுத்த முறை ''வரா'' விடம் போக வேண்டாம். ''சுரா'' என்று ஒருத்தர்...'' அம்மா முதுகைத் தடவிச் சொல்லத் தொடங்கினாள்.

நான் அவர்களிடமிருந்து விலகி அறைக்குள்ஓடினேன். அம்மா சொன்னது என் காதில் விழவில்லை.

★

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள் இறங்கு...

(III ஆம் பக்கத் தொடர்)

சுபிக்கு ஆறுதல். ரெண்டு பேரடை பென்சனும் வரும். மன ஆறுதல் இருக்கும். இவங்களடை வாலாட்டம் அதிகம் வாய்க்காது. நான் கண்ணை மூடிட்டா பெட்டையடை கதி என்னாவது?

இவள் ஏ. எல். ஒருக்கா எடுத்திட்டாள்; எப்பிடியும் கம்பஸ்ஸுக்கு எடுபட்டு விடுவாள். இனி அது தொடங்கி இவள் படிச்சு முடியுற வரைக்கும் என்னாலை தாக்குப் பிடிக்க ஏலுமோ தெரியாது. கட்டிக் குடுத்திட்டால் ஒரு சுமை குறைஞ்ச மாதிரி. பிறகு விரும்பினால் படிக்கட்டும்.

என்னோடை இருந்து இவன் படிச்சு முடிக்க ஏலாது. எனக்கு நித்திய கண்டம். சுந்தரம் மாமா வேற வீட்டிலை வந்திட்டார். அவருக்கும் நிறைய எடுபிடி–அடுக்கு அணி — செய்ய வேணும்.

இப்ப கலியாணம் பேசுற நிலமையிலும் நான் இல்லை. நிதி நிலமை அப்பிடி. வீட்டுப்பாட்டை ஓட்டுறதே பெரியபாடு. வருத்தமெண்டு அடிக்கடி 'நோ பே' வேறை.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு சிந்தனைத் தொடர் அறுகிறது.

(தொடரும்)

# அமெரிக்கா...

(XII ஆம் பக்கத் தொடர்)

ருப்பதற்கு ஈராக் எதிர்ப்புத் தெரிவித்தது.

## ஈராக்கிடம் இரசாயன ஆயுதம்

V X எனப்படும் நரம்புத் தொகுதிகளைத் தாக்கும் இரசாயன வாயு ஈராக்கிடம் இருப்பதாக ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழு சந்தேகிக்கிறது. ஆனால் சதாம் ஹுசேய்ன் இதனை மறுத்து வருகிறார்.

1985 இல் ரோக்கியோ சுரங்க ரயில் பாதையில் 12 பேர் மரணமாவதற்கும் 5,000 பேர் பாதிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்த சரின் (SARIN) இரசாயன வாயுவை விட 10 மடங்குகள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை V X வாயுக்கள்.

பாக்தாத்தில் இருந்து 30 மைல்கள் தூரத்தில் கிருமிநாசனித் தொழிற்சாலை என்ற பெயரில் இயங்கிய ஈராக்கின் ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையும் வளைகுடா யுத்தத்தின்போது அமெரிக்க விமானத் தாக்குதலால் தரைமட்டமாகியது.

இந்த தொழிற்சாலையின் இடிபாடுகளிடையே பாரந்தூக்கிகளின் உதவியுடன் கொங்கிறீட் துண்டுகளை அகற்றி ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவினர் சோதனை நடத்தி இருந்தனர்.

VX இரசாயன வாயு பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டதற்கான ஆவண சான்றுகள் அப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டன. இந்த வகை இரசாயன வாயுவை தயாரிப்பதற்கான ஒன்றுக்கு மேற்பட்ட தொழில் நுட்பமுறைகளை ஈராக் கடைப்பிடித்ததும் இந்த ஆவணங்கள் மூலம் தெரியவந்தது.

## மீண்டும் யுத்தம்

வளைகுடாப் பிரச்சினையில் தற்பொழுது இடம் பெற்றுவரும் ராஜிய நடவடிக்கைகள் தோல்வி அடையுமானால் மீண்டும் யுத்தம் ஒன்று வெடிக்கலாம்.

# நம்பிக்கையோடு...

(V ஆம் பக்கத் தொடர்)

கடைக்குப் போவதாக மாமியாரிடம் சொல்லிவிட்டுக் காளியோடு பதுளைக்குக் கம்பி நீட்டிவிட்டாள். காளி தான் வந்த நோக்கத்தைக் கச்சிதமாக முடித்த பின்னர் சரோஜாவை அவளது வீட்டில் கொண்டு போய் விட்டான்.

சரோஜா தாய்வீட்டில் நிற்கிறாள் என்ற தகவல் கிடைத்து சோமு அங்கே போயிருக்கிறான். அவன் சனிக்கிழமை போயிருக்கிறான். நான் ஞாயிற்றுக்கிழமை வந்து நிற்கிறேன்.

எனக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்த கடைக்காரன் தொலைதூரத்தில் வந்து கொண்டிருந்த பஸ்ஸைப் பார்த்துவிட்டான்.

''...ஐயா மட்டக்களப்புக்கு பஸ் வருது. நீங்க செங்கலடிக்கு இதிலை போகலாமுங்க...''

அவன் சொல்லுறது சரிதான். பேசாமல் திரும்பிப் போய் விடலாம் எனத் தோன்றியது. மணிப்பர்சை எடுத்து அவனது கணக்கை அவசரமாகத் தீர்த்தேன். பிள்ளையார் இருக்கின்ற புளியமரத்தின் நிழலில் பஸ் வந்து நின்றது.

பஸ்சில் இருந்து இறங்கிக் கடைக்கு வருபவர்களை வரவேற்க அவன் தயாரானான்.

பஸ்சில் ஏறுவதற்காக நான் ஓடினேன். ஏழெட்டுப் பேர் இறங்கிய பிறகு சோமு கீழே இறங்கினான். அவனுக்குப் பின்னால் ஒரு அழகிய பெண் தோளில் ரவலிங் பாக் சகிதம் இறங்கினாள்.

சோமுவும் என்னைக் கண்டு விட்டான். வாயெல்லாம் பல்லாக அவனுக்கே உரிய அந்த வழக்கமான அசட்டுத்தனத்தோடு சிரித்தான்.

''...நாங்க ரெண்டு பேரும் ஊருக்குப் போயிட்டு வர்ரோமுங்க ஐயா...''

அதற்குள் கண்டக்ரர் அவரப் படுத்தினார்.

''...சரி, பிறகு சந்திக்கிறன். இப்ப நான் போட்டு வாறன்...''

பஸ்சுக்குள் ஏறி நெருக்கியடித்துக்கொண்டு நின்றவர்களிடையே புகுந்து உடலை நிமிர்த்தினேன். சன நெருக்கம் என்னை ஆட அசையாமல் நிறுத்திப் பிடிக்க தனக்கே உரிய இரைச்சலுடன் பஸ் ஓடத் தொடங்கியது. இப்போது என்னால் எதைப்பற்றியும் சிந்திக்க முடியாது. அது தேவையும் அற்றது. இந்த உலகம் நம்பிக்கையை அச்சாணியாகக் கொண்டு சுழல்கிறது. நான் வீடு போய்ச் சேருவேன் என்ற நம்பிக்கையுடன் பஸ்சில் நிற்கிறேன். சோமு தன் மனைவியோடு வாழ்வதற்காக நம்பிக்கையோடு அவளைக் கூட்டி வந்திருக்கிறான்.

(யாவும் கற்பனை)

# உயர்வும்...

(I ஆம் பக்கத் தொடர்)

கிரேக்கப் பழமொழி கூறுகிறது.

''உழைப்பால் முன்னேறிய கோடீஸ்வரர்கள் எவரும் தங்கள் தகுதிக்குக் குறைவானது என்று எந்த வேலையையும் குறைத்து மதிப்பிடுவதில்லை. அவர்கள் எந்த வேலையையும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்'' என்று இருநூறுக்கும் மேற்பட்ட கோடீஸ்வரர்களைப் பேட்டி கண்ட சாம்ஜேன்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

உலகில் இயலாதது என்று எதுவும் இல்லை. விடா முயற்சியும், மனத் துணிவும், இலட்சிய நோக்கும் இருந்தால்எண்ணியதை திண்ணியதாகப் பெறலாம்.

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பதை மனதில் நிறுத்துவோமாக. முயற்சியும், உழைப்பும் நிச்சயம் பலன் தரும்.

நன்றி:
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

# படியேறும் சக்கர நாற்காலி!

உடல் ஊனமுற்றவர்கள் சக்கர நாற்காலியில் மற்றவர்களைப் போல அனைத்து பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் என்பதற்காகவும் —

மாடிப் படிக்கட்டுகள்உள்ள திரையரங்குகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களில் ஊனமுற்றோரின் வசதிக்காகவும் —

படிக்கட்டுகள் இல்லாத சரிவான பாதையை அமைக்க வேண்டும் என்று கோரப்பட்டு வருகிறது.

சில இடங்களில் ஊனமுற்றோரின் மன உணர்வுக்கு மதிப்பளித்து சரிவான படிக்கட்டுகளை அமைத்துள்ளனர் ஆனால் இனி படிக்கட்டுகள் ஊனமுற்றோருக்கு பிரச்சினையாகா.

ஜப்பானின் டயோட்டா மோட்டார் நிறுவனப் பொறியாளர் மாடிப்படிகளில் ஏறும் சக்கர நாற்காலியை வடிவமைத்துள்ளனர். சமீபத்தில் ஜப்பானில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் இப்புதிய கண்டுபிடிப்புக்கு முதற் பரிசு கிடைத்துள்ளது.


# விடைகள்

IV. ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

## இயலுமா?

1.) 13 கூட்டல் அடையாளங்கள்.

2.)



3.) செவ்வகங்கள்—20
சதுரங்கள்—05

4.)




## கண்டுபிடியுங்கள்

I.) 1. கோவில்.
2. கோடா.
3. வில்.
4. விண்.
5. 'கோண்'.
6. விடா.
7. கோல்.
8. டாண்.

II.) 1. காலை.
2. காசி.
3. பெட்டி.
4. தொட்டி.
5. சிட்டி.
6. சிலை.
7. 'பெப்சி'.

## வார்த்தை விளையாட்டு

குட்டி, பகு, தகு, குட்டு, படு, தடு, குடு, பட்டு, தடை, குடை, படை, தடி, குடம், பட்டடை, தட்டு, குதம், பதம், தட்டை, குட்டை, படம், தடம், கும்பம், படி, தட்டம், குடும்பம், பட்டி, தபம், குடி, பட்டை, தம், பட்டம், தம்பம், பட்டுடை, தம்படி, தட்டி, தட்பம், தம்பட்டம், தகும்.

# பாதுகாப்பான தாய்மை

ஆண்டு தோறும் உலகில் இடம்பெறுகின்ற 500,000 கர்ப்பவதிகளின் மரணங்களில், பெரும்பாலானவை வளர்முக நாடுகளின் பின்தங்கிய கிராமங்களில் நடைபெறுகின்றன. பெரும்பாலான மரணங்களுக்கு காரணங்களாக இருப்பவை:-

★ குருதிப்பெருக்கு.
★ கிருமித் தொற்று (Sepsis)
★ கர்ப்பத்துடன் சம்பந்தப்பட்ட உயர்குருதி அமுக்கம்.
★ இடைநிறுத்தப்பட்ட பிரசவம் (Obstructd Labour)
★ கருச்சிதைவு.

இக்காரணிகளினால் பாதிக்கப்பட்டு மரணத்தின் பிடியிலிருந்து தப்பிய கோடிக்கணக்கான பெண்கள் இவற்றின் நீண்டகால பாதிப்புகளினால் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

கர்ப்பகால சிக்கல்கள், தாயை மட்டும் அல்லாது, கருப்பையில் வளரும் சிசுவையும் பாதிக்கின்றன. நமது நாட்டில் வருடாவருடம் இடம்பெறும் 6,500 சிசு மரணங்களில் காற்பங்கு, பிறந்து முதல் வாரத்திலேயே இடம்பெறுகின்றது. பெரும்பாலான இந்த இறப்புகளுக்கு காரணம், முறையான கர்ப்பகால பராமரிப்பு இன்மையாகும்.

மரணத்திலிருந்து தப்பும் சிசுக்களிலும் கணிசமான தொகையினர் உடல் உள ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகி, ஊனமுற்றவர்களாகி இருக்கிறார்கள். பெரும்பாலான சிசுக்கள் இறப்பதற்கும் ஊனமாவதற்கும் காரணம், பிறப்பின் போது உண்டாகும் மூச்சடைப்பு, காயங்கள் (Birth trauma), தொற்று (Infection) ஆகியனவையாகும்.

'சுகமஞ்சரி' – சமூக சுகாதார சேவையாளர்களுக்காக யாழ் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையினால் காலாண்டு தோறும் வெளியிடப்படும் மிகப்பயனுள்ள மருத்துவ சஞ்சிகை இது. முற்றிலும் சேவை அடிப்படையில் பிரசுரிக்கப்படும் இந்த சஞ்சிகையின் கடந்த சித்திரை இதழின் ஆசிரிய தலையங்கம் இது.

இறக்கும் தாய்மாரில், பெரும்பாலானோர் இளவயதினர். 1988இல் யாழ்மாவட்டத்தில் இறந்த 42 கர்ப்பவதிகளில் 43 சதவீதத்தினர் 30 வயதிற்கு உட்பட்டவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தில் அச்சாணியாக இருந்தவர்கள்; குடும்பத்திற்காக உழைத்தவர்கள்: உணவு தயாரித்து பகிர்ந்தவர்கள்; குழந்தைகளைப் பராமரித்தவர்கள்; அவர்களுக்குக் கல்வி ஊட்டியவர்கள்; வயோதிபப் பெற்றோரையும் நோயுற்றவர்களையும் பராமரித்தவர்கள் அவர்களின் இழப்பு முழுக்குடும்பத்தையும், சமூகத்தையும் பாதிக்கும். தாயை இழந்த சிசுக்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வயதிற்குள் இறந்து விடுவதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

கர்ப்பகால மரணங்களைத் தடுக்க வேண்டியது — சமூக பொருளியல் காரணங்களுக்காக மட்டுமல்லாமல் — அது சமூகத்தில் வாழும் ஒவ்வொரினதும் தார்மீகக் கடமையுமாகும்.

ஏனெனில், கர்ப்பம் ஒரு நோயல்ல. அத்துடன் கர்ப்பகால மரணங்கள் இலேசாக, செலவின்றி தடுக்கக் கூடியவை. இதை செய்யாதிருப்பது ஒரு பெண்ணின் அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும்.

கர்ப்பத்துடன் சம்பந்தப்பட்ட பெரும்பாலான சிக்கல்களை பெரும் செலவிலான நூதன தொழில்நுட்பமும், மருந்துகளும் இன்றி மிக எளிய முறைகளைக் கையாண்டு தடுக்கலாம்.

கர்ப்பகால சிக்கல்கள் பற்றிய அறிகுறிகளை, சமூகத்தின் மத்தியில் எடுத்துச்சொல்வதன் மூலமும், அடிப்படை சுகாதார வசதிகளை செய்து கொடுப்பதன் மூலமும், இந்த வசதிகளைத் தேவைப்படும் நேரத்தில் கிடைக்கக் கூடியதாக வைத்திருப்பதன் மூலமும், பிரச்சினை தீவிரமாகும் சமயத்தில் உயர்மட்ட வைத்திய வசதிகள் கிடைக்கக்கூடிய ஒழுங்குகள் செய்வதன் மூலமும், கர்ப்பகால மரணங்களின் அதிகமானவற்றை நாம் தடுக்கலாம்.

தமிழர் வாழும் பிரதேசங்களில் கர்ப்பகால மரணங்கள் அதிகரித்து வரும் இவ்வேளையில் சுகாதார சேவையாளர் அனைவரும் அடிப்படை அறிவு பெற்று கடமையுணர்வுடன் செயல்படுவது மிக அவசியமானதாகும்.

# தீர்வுப் பொதியை...

(II ஆம் பக்கத் தொடர்)

வுள்ள திட்டத்துக்கு எப்படிக் குந்தகமாக, இடையூறாக நிற்பது என்ற சங்கடத்திற்குள் — நெருக்கடிக்குள் — ஐ.தே.க வைமாட்டுவதற்கு அரசு நினைத்தது,

ஆனால் அதனைத் தடுத்துத் தாமதப்படுத்திவிட ஐ.தே.க. திட்டம் போட்டுள்ளது. அதுவே மாற்றுயோசனை சமர்ப்பிக்கும் அறிவிப்பு. தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு, தீர்வுப் பொதியை எதிர்ப்பதாக மகாசங்கங்கள் அறிவித்திருப்பது ஆகியன ஐ.தே.கவுக்கு ஆதரவாகி விட்டன. அதனால் இப்போது. அரசே சங்கடத்திற்குள் மாட்டிக் கொண்டுள்ளது.

இந்த அரசியல் பொறிகளில் சிக்காது தீர்வுப் பொதி மேலெழுந்து தப்பி ஓடுவது என்பதும் கஷ்டமான காரியமாகவே இருக்கும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பயணம், ஏற்கனவே பல தடவைகள் நடந்தது போல, ஆரம்பத்திலேயே நின்றுவிடும் அறிகுறிகளே அதிகம்.

போன்றைத் தொடர்ந்து ஆட்சிப் பொழுதைப் போக்குவதற்கு அரசு ஆவலாக உள்ளதன் நோக்கமும் தெட்டெனத் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்படும் போதெல்லாம் இத்தகைய தடங்கல்கள், தடைகள் உருவாகுவது தவிர்க்க முடியாத வரலாறு ஆக்கப்படுவது இந்த நாட்டின் சாபக்கேடாகவே இருந்து வருகிறது.

இந்தச் சாபக்கேடு நீக்கப்படும்வரை இனப்பிரச்சினையும் தீராது, நாடும் முன்னேறாது என்ற நிலையே மிஞ்சும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா பொறுமை இழந்து வருகிறது!

# ஈராக் பிடிவாதத்தைத் தளர்த்த மறுக்கிறது!!

## வளைகுடாவில் யுத்தம் வெடிக்கலாம்

ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக்குழுவுடன் ஒத்துழைக்க ஈராக் மறுத்ததை அடுத்து வளைகுடாவில் உருவான நெருக்கடி, அமெரிக்க அதிபர் கிளின்ரன் மீதான பாலியல் குற்றச் சாட்டுக்கள் காரணமாக புதிய திருப்பத்தை அடைந்துள்ளது.

தம்மீதான பாலியல் குற்றச் சாட்டுக்களில் இருந்து அமெரிக்க மக்களினதும் உலக நாடுகளினதும் கவனத்தை திசைதிருப்ப ஈராக் மீதான தாக்குதலுக்கு கிளின்ரன் உத்தரவிடலாம் என்று அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

### ஆதரவு தேடும் முயற்சியில் மடெலின் ஆல்பிரைட்

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மடெலின் ஆல்பிரைட் வளைகுடாவில் உள்ள அரபு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு ஈராக் மீதான அமெரிக்க ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு தேடி வருகிறார். ஆனால் எதிர்பார்த்த ஆதரவு அவருக்குக் கிடைக்கவில்லை.

ஈராக் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை பெரும்பாலான அரபு நாடுகள் மறைமுகமாக ஆதரிக்கின்றன. ஆனால் அதனை வெளிப்படையாகத் தெரிவிக்க அஞ்சுகின்றன.

1991 வளைகுடா யுத்தத்தின்போது அமெரிக்கா தலைமையிலான நேசப்படைகளின் ராணுவ நடவடிக்கைக்கு உதவும் விதத்தில் சகல விதமான தள வசதிகளையும் சவூதி அரேபியா செய்து கொடுத்தது. ஆனால் இம்முறை அமெரிக்காவை அது காலை வாரி விட்டது.

ஈராக் மீதான தாக்குதலுக்கு தனது நாட்டை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று சவூதி அரேபியா அறிவித்து விட்டது.

ஈராக்குடன் எட்டு ஆண்டுகள் (1980 — 88) போர் புரிந்த ஈரான் கூட அரபு மக்களின் புனித மண்ணில் அமெரிக்க ஆக்கிரமிப்பு இடம் பெறுவதை எதிர்ப்பதாகக் கூறுகிறது.

1990இல் ஈராக் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்ட குவைத் மட்டும் ஈராக் மீதான அமெரிக்க ராணுவ நடவடிக்கைக்கு முழு ஆதரவு தெரிவித்து வருகிறது.

ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா தனது பிரதேசத்தைப் பயன்படுத்த குவைத் சம்மதம் தெரிவித்துள்ளது.

அழிவு தரும் நாசகார ஆயுதங்கள் மூலம் அண்டை நாடுகளின் பாதுகாப்புக்கும், ஸ்திரத்துக்கும் ஈராக் அச்சுறுத்தலாக இருப்பதாக மடெலின் ஆல்பிரைட் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது பெரும்பாலான அரபு நாடுகளின் காதில் ஏறியதாகத் தெரியவில்லை.

ஈராக் அழிக்கப்பட்டு விட்டால் தமது பொது எதிரியான இஸ்ரேலுக்கு அது வாய்ப்பாகி விடும் என்று அரபு நாடுகள் கருதுகின்றன. இந்த நாடுகளின் பீதியை கருத்தில் கொண்டே ஈராக்கை அழிப்பதோ அல்லது சதாம் ஹுசேய்னை பதவியில் இருந்து வீழ்த்துவதோ அமெரிக்காவின் நோக்கம் அல்ல என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் கோஹன் (William Cohen) தெரிவித்து வருகியார்.

ஈராக்கிடம் உள்ள அழிவு தரும் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை அழிப்பது மட்டுமே அமெரிக்க ராணுவ நடவடிக்கையின் நோக்கமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வல்லரசுகள் மத்தியில் பிளவு

ஈராக் மீதான அமெரிக்க ராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு தேடி ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் மடெலின் ஆல்பிரைட் சந்தித்து வருகிறார்.




அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் வெளிநாட்டில் வளைகுடா நெருக்கடிக்கு முகம் கொடுத்து வரும் அதே நேரம் உள்நாட்டில் பாலியல் குற்றச் சாட்டுக்களை எதிர்நோக்கி வருகிறார். பாலியல் குற்றச் சாட்டுக்கள் கிளின்ரனை எவ்வளவு தூரம் சிறுமைப்படுத்தி விட்டன என்பதை காட்டும் படம் ஒன்றை இத்தாலிய வார சஞ்சிகையான பனோராமா (PANORAMA) சமீபத்தில் பிரசுரித்திருந்தது.

ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் அமெரிக்காவும் பிரிட்டனும் மட்டுமே ஐ. நா. வின் தீர்மானங்களுக்கு ஈராக் கட்டுப்பட்டு நடக்காது விட்டால் அதன் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்து வருகின்றன.

**உலக உலா**
*என்.பி.சீலன்*

மற்றைய மூன்று நாடுகளான ரஷ்யா, பிரான்ஸ் சீனா ஆகிய நாடுகள், ஈராக் மீதான ராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

ஐ. நா. வின் தீர்மானங்களுக்கு ஈராக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதில் இந்த மூன்று நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. ஆனால் ஈராக் அவற்றை மீறும் பட்சத்தில் அதன் மீது ராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற யோசனைக்கு அவை ஆதரவு வழங்க மறுத்து வருகின்றன.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் கருத்து எதுவாக இருந்தாலும் உரிய நேரத்தில் ஈராக் மீது அமெரிக்கா ஒரு தலைப்பட்சமாக ராணுவ நடவடிக்கை எடுக்கும் என்று மடெலின் ஆல்பிரைட் எச்சரித்துள்ளார்.

### இறுதி நேர ராஜீய நடவடிக்கைகள்

ஈராக் விவகாரத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் பொறுமை இழந்து வருவதை அடுத்து நெருக்கடியை தளர்த்துவதற்கான இறுதி நேர ராஜீய நடிவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ரஷ்யா தனது தூதுவரை ஏற்கனவே தலைநகர் பாக்தாத்துக்கு அனுப்பியுள்ளது. பிரான்ஸ், துருக்கி ஆகிய நாடுகளும் தமது தூதுவர்களை அனுப்பி ஈராக் வெளிவிவகார அமைச்சர் மொகமட் சயீட் அல்—சஹாப்புடன் பேச்சு நடத்தி உள்ளன.

இவர்களுடனான சந்திப்பின்போது ... பிடிவாதத்தை தளர்த்தும் சில சமிக்ஞைகளை மட்டும் சதாம் ஹுசேய்ன் வெளியிட்டுள்ளார். ஆனால் இவை அமெரிக்காவின் தாக்குதல் முஸ்தீபைத் தளர்த்த உதவாது என்று அவதானிகள் கூறுகின்றனர்.

ஏற்கனவே அமெரிக்கா வளைகுடாவில் 30 யுத்தக் கப்பல்களையும், விமானம் தாங்கிக் கப்பல்களில் 300 யுத்த விமானங்களையும் நிறுத்திவைத்துள்ளது. இவற்றின் உதவியுடன் ஈராக் மீது தாக்குதல் நடத்துவது அமெரிக்காவுக்கு பெரிய காரியம் அல்ல.

ஆனால் சர்வதேச அபிப்பிராயம் தனக்கு எதிராகத் திரும்பிவிடும் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

கடந்த ஏழு ஆண்டுகளாக இருந்து வரும் ஐ. நா. தடைகளால் பெருமளவு நலிவுற்றிருக்கும் ஈராக் அதனை வைத்து சர்வதேச அனுதாபத்தை சம்பாதித்து விட்டது.

அத்துடன் ஈராக் மீதான எந்த ஒரு தாக்குதலும் அரபு நாடுகள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்தி விடும்.

இப்படியான ஒரு நிலை உருவாகுமானால் ஏற்கனவே ஆட்டம் கண்டுள்ள மத்திய கிழக்குப் பிரச்சினை சம்பந்தமான ஒஸ்லோ ஒப்பந்தம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கலாம்.

### எண்ணெய் தடையை தளர்த்த அனான் முயற்சி

தற்போதைய நெருக்கடியில் எண்ணெய்த்தடையைத் தளர்த்துவது மூலம் சதாம் ஹுசேய்னின் பிடிவாதத்தைத் தளர்த்தலாம் என்று ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் கருதுகிறார்.

வளைகுடா யுத்தத்தின் பின் ஈராக் மீது ஐ. நா. விதித்த தடைகளின் பிரகாரம், ஈராக் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை தனது அத்தியாவசிய தேவையான உணவுப் பொருள்களையும் மற்றும் மருந்தையும் வாங்குவதற்கு 200 கோடி டொலர் பெறுமதியான எண்ணெய்யை மட்டுமே விற்க முடியும் (Oil For Food).

இந்த 200 கோடி டொலரில் மருந்து மற்றும் உணவுத் தேவைகளுக்கு ஈராக் 132 கோடி டொலர்களை செலவிட ஐ. நா. வினால் அனுமதிக்கப்பட்டது.

மிகுதிப்பணத்தை வளைகுடா யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் ஈராக்கில் கடமையாற்றும் ஐ. நா. அதிகாரிகளுக்கு செலவிடவும் ஈராக்குக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கோபி அனான் தற்பொழுது தெரிவித்துள்ள புதிய யோசனைகளின் படி ஈராக் ஆறு மாதகாலத்துக்கு ஒரு தடவை 520 கோடி டொலர் பெறுமாதியான எண்ணெயை விற்க அனுமதிக்கப்படும்.

இதன் மூலம் மேலதிகமாகக் கிடைக்கும் 320கோடி டொலரில் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், தண்ணீர் விநியோகம், சுகாதாரம் ஆகியவற்றைச் சீரமைக்கவும் ஊட்டச்சத்தை அதிகரிக்கவும் அனுமதிக்கப்படும்.

கண்ணிகளை அகற்றவும் அணைக்கட்டுகளைத் திருத்தவும் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

வட ஈராக்கில் குர்டிஷ் மக்கள் வாழும் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளையும் ஆய்வுகூட வசதிகளையும் அபிவிருத்தி செய்ய அனுமதிக்கப்படும்.

ஆனால் ஈராக் இவற்றுக்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. பதிலுக்கு அமெரிக்க தாக்குதலை எதிர்கொள்ள ஈராக் மக்களை ஆயுதப் பயிற்சிக்கு சதாம் ஹுசேய்ன் அழைத்துள்ளார்.

ஆயுதப் பயிற்சிக்கு பெயர்களைப் பதிவு செய்ய வயது வேறுபாடின்றி இளைஞர்களும் யுவதிகளும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் கியூவில் நிற்பதாக பாக்தாத்தில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### நெருக்கடி உருவாக காரணம் என்ன?

★ சதாம் ஹுசேய்னின் மாளிகைகளில் சோதனை நடத்த ஐ.நா. ஆயுத பரிசோதனைக் குழுவுக்கு சதாம் ஹுசேய்ன் அனுமதி மறுத்தது.

★ ஐ.நா. ஆயுத பரிசோதனைக் குழுவில் அமெரிக்கர்களும் பிரிட்டிஷ்காரர்களும் கூடுதலாக இடம் பெற்றதுக்கு சதாம் ஹுசேய்ன் ஆட்சேபனை தெரிவித்தது.

ஆகியவையே தற்பொழுது உருவாகி இருக்கும் நெருக்கடிக்குக் காரணம் ஆகும்.

1991 வளைகுடா யுத்தத்தின் பின்னர் — அதாவது ஆறரை ஆண்டுகளுக்கு முன்னர் — UNSCOM என்னும் ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக்குழு நியமிக்கப்பட்டது.

இதன் முக்கிய நோக்கம் ஈராக்கிடம் உள்ள இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களை —

மற்றும் இந்த ரக ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளை — அழிப்பது அல்லது அகற்றுவது அல்லது இயங்காமல் செல்வது ஆகும்.

93 மைல் வீச்செல்லைக்கு கூடுதலான வீச்செல்லை கொண்ட ஏவுகணைகளை வைத்திருப்பதற்கும் தடை விதிக்கப்பட்டு அவற்றை அழிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஆறரை ஆண்டு காலமாக ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக்குழு ஈராக்கில் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக 28 ஆயிரம் இரசாயன ஆயுதங்கள், இரசாயன ஆயுத உற்பத்திக்குத் தேவையான 4 லட்சத்து 80 ஆயிரம் லீற்றர் கலவைகள் மற்றும் இரசாயன ஆயுத உற்பத்திக்குப் பயன் படுத்தக் கூடிய 18 லட்சம் லீற்றர் கலவைகள் ஆகிய அழிக்கப்பட்டன. இவற்றை விட மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதங்கள், ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகள் இந்த பரிசோதனைக் குழுவினால் அழிக்கப்பட்டிருந்தன. பல இயங்காமல் செய்யப் பட்டன.

இந்தக் குழுவின் பணி பெரும்பாலும் பூர்த்தி அடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோதே சதாம் ஹுசேய்னின் மாளிகைக்குள் சோதனை நடத்துவதற்கு ஈராக் அனுமதி மறுத்தது.

அத்துடன் ஆயுதபரிசோதனைக் குழுவில் கூடுதலாக அமெரிக்கர்களும் பிரிட்டிஷ் காரர்களும் இடம் பெற்றி

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org